## நமது பிற நூல்கள் :

19264

107

| | |
|---|---|
| வாழ்க்கையில் வெற்றி | 2—50 |
| கவலைப்படாதே! | 2—50 |
| வாழ்வைத் துவங்கு | 2—50 |
| சுபிட்சமாய் வாழ்க ! | 2—50 |
| முன்னேறுவது எப்படி ? | 2—50 |
| வாழ்வது ஒரு கலை | 2—25 |
| வியாபாரம் செய்வது எப்படி ? | 3—00 |
| எண்ணமே வாழ்வு | 3—00 |
| வழிகாட்டும் ஒளிவிளக்கு | 1—50 |
| மகனே ! கேள் | 2—00 |
| அன்புள்ள தம்பி ! | 2—00 |
| ஆப்ரஹாம் லிங்கன் | 2—00 |
| லியோ டால்ஸ்டாய் | 1—50 |
| உலக மேதைகள் | 1—50 |
| ஐஸன் ஹோவர் | 2—00 |
| மோன்த் கிரிஸ்தோவின் மன்னன் | 5—00 |
| வெற்றி என் கைகளிலே | 1—25 |
| கோடீஸ்வரக் கொடைவள்ளல் | 1—00 |
| அரேபியாவின் அதிபதி | 1—50 |
| மருத்துவ மன்னர்கள் | 2—00 |
| சரவிளக்கு | 1—50 |
| நபிகள் நாயகம் | 5 & 3—00 |
| வாழ்வரசி | 2—00 |
| நகரத் தலைவர் | 2—00 |
| குணத்தின் குன்று | 2—00 |
| பூங்குழலி | 3—50 |
| மல்லிகை | 2—00 |

2581

| | |
|---|---|
| இஸ்லாமிய திலகங்கள் | 1—75 |
| முஸ்லிம் சமுதாயச் சிற்பிகள் | 2—00 |
| ஊன்று கோல் | 1—75 |
| முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் | 4--00 |
| மன ஒருமை | 1--00 |
| மனத்தை வெல்லுவாய் ! மனிதனுகுவாய் !! | 1--50 |
| வாழ்வின் ஒளிப்பாதை | 1—50 |
| யூசுப் ஜுலைகா | 3--50 |
| மும்மணி மாலை | 1--25 |
| காவியப் பாவை | 1--00 |
| அலக்ஸாண்டர் டூமாஸ் | 1--50 |
| வான்வெளிப் பயணம் | 1--50 |
| நாயகத் திருமேனி | 1--25 |
| அகிலத்தின் அறிவுத் திரள் | 1--50 |
| மஹ்ஜபீன் | 2—00 |
| இதயக் குமுறல் | 1--25 |
| மலரும் மங்கை | 1--50 |
| வெற்றி வீரன் ஜூலியஸ் சீஸர் | 2--00 |
| வீராதி வீரன் அலக்சாண்டர் | 2--00 |
| அறிஞர் சஅதியின் அறிவுச் சுருள் | 1--00 |
| சுலைமான்--பல்கீஸ் | 1--50 |
| பாவ மன்னிப்பு | 1--50 |
| பொறுமையாய் இரு | 1--00 |
| கோபம் வேண்டாம் ! | 1--00 |
| இறையச்சம் | 1--50 |
| உளத் தூய்மை | 1--00 |
| பதவி மோகம் | 1--00 |
| பொறாமை கொள்ளாதே ! | 1--25 |
| திருமணம் | 1--75 |
| பாத்திமா | 00--50 |
| நல்லெண்ணம் | (அச்சில்) |
| The Cultural Side of **ISLAM** | 2—00 |

# வாழ்வின் வழித்துணை

UNIVERSITY EXTENSION LIBRARY
15 MAR 1962
MADURAI

அப்துற்-றஹீம்

Univ. Grants Commission

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்,
155/156, அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை-1.

உரிமைப் பதிவு.

முதற் பதிப்பு 6—2—56.

இரண்டாம் பதிப்பு 6—5—59.

விலை ரூ. **2-00**

19264

யுனிவர்ஸல் பிரிண்டிங் ஹவுஸ்,
*155-156*, அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை-*1*.

UNIVERSITY EXTENSION L
MADURAI

# வாழ்வின் வழித்துணை

அன்புள்ள அருட் செம்மல்!

சில நாட்களாக என் மனம் அமைதியையே இழந்து விட்டது. வள்ளுவப் பெருந்தகை என்னை வதை செய்து வருகின்றார். அவருடைய பொய்யா மொழியாகிய திருக்குறளை நான் ஒரு நாள் ஆழ்ந்து படித்து வரும்பொழுது அதில் அவர் 'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலிற்றோன்றாமை நன்று' என்று வன்மையாகக் கூறி இருப்பதைக் கண்டதும் என் உடலெல்லாம் ஒருவித மின் ஆற்றல் ஊடுருவிப் பாய்வது போன்றிருந்தது. அடுத்த கணம் எனக்கு ஒருவித நடுக்கமும் திடுக்கமும் ஏற்பட்டன. வள்ளுவப் பெருந்தகை என்முன் தோன்றி என்னைப் பார்த்தே அவ்வாறு இடித்துரைப்பது போன்ற உணர்வு பெற்றேன். என் மூளை கலங்கியது. என்ன இவர் இவ்வாறு கூறுகின்றார். உலகில் தோன்றினால் புகழோடு தோன்று; இல்லையேல் தோன்றுவதை விடத் தோன்றாமலிருப்பதே நன்று என்று கூறியுள்ளாரே. உலகில் வாழ்ந்தால் புகழோடு வாழ். இல்லையேல் செத்து மடிந்துபோ என்று கூறியிருந்தாலாவது ஒரு வகையில் பொருத்தமாயிருக்கும். அவ்வாறும் அவர் கூறவில்லையே. அதற்கு மாறாக உலகில் தோன்றினால் புகழோடு தோன்று; இல்லையேல் தோன்றாதே என்று பொருள்படக் கூறியுள்ளாரே. உலகில் தோன்றுவதும் தோன்றாதிருப்பதும் நம் கையிலா இருக்கிறது. இஃது என்ன வேடிக்கையாயிருக்

கிறது? இவ்வாறு வேடிக்கை மொழி கூறக்கூடிய வீணரா அவர்? அவர் பொய்யாமொழிப் புலவராயிற்றே என்று என் மூளையையே நான் குழப்பிக்கொண்டேன். நான் இவ்வுலகில் வாழ்ந்து வந்த வாழ்க்கையைக் கண்டு எனக்கே நாணமாகவும் அருவருப்பாகவும் இருந்தது. சிச்சீ! நான் இவ்வுலகில் என்ன வாழ்வு வாழ்கிறேன். என்னை இவ்வுலகில் எத்தனை பேர் அறிந்திருக்கிறார்கள்? எத்தனை பேர் புகழ்ந்தேற்றுகின்றார்கள்?

நண்பனே! அதன்பின் என்ன செய்வதென்றே எனக்கு விளங்கவில்லை. பல நாட்களாக என் மூளையைக் குழப்பிக் கொண்டேன். எனினும், எனக்குத் தெளிவேற்படவில்லை. ஒருநாள் நான் ஒரு நூலைப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது அதில் 'வேணவாவானது அற்ப மனிதர்களின் தீய குணமன்று' என்று பிரஞ்சு தத்துவஞானி மாண்டெய்ன் கூறிய பொன்னுரை பொறிக்கப் பட்டிருந்தது. அதன் கீழே உயரிய மனிதர்கள் தங்களைவிட உயர்ந்தவர்களுடன் தங்களை ஒப்பிட்டுப் பார்த்துத் தங்களின் தாழ்ந்த தரத்தை உணர்ந்து தங்களை உயர்த்திக்கொள்ள முனைகின்றார்கள். ஆனால், அற்ப மனிதர்களோ தங்களைவிடத் தாழ்ந்தவர்களோடு தங்களை ஒப்பிட்டுப் பார்த்துத் தங்களைப் பெரிதாக மதித்துக் கொள்கிறார்கள். ஆதலின் நீ இதுகாறும் பெற்றிராத தன்மையை நீ பெற விரும்புவாயானால் நீ தற்பொழுதுள்ள நிலைமையைப் பற்றி மனக்குறை உள்ளவனாக இரு. ஏனெனில், நீ எந்த இடத்தில் மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைந்து விடுவாயோ அங்கேயே நீ நிரந்தரமாகத் தங்கி விடுவாய். நீ முன்னேறவே முடியாது. நீ உன் வாழ்வில் ஏதாவதொரு வேணவாவைப் பெற்றிருக்கவேண்டும். அப்பொழுதுதான் வாழ்வு இனிமையுடைத்தாய் இருக்கும். இல்லையேல் கசக்கவோ அல்லது சப்பென்றோ ஆகிவிடும்' என்று பொறிக்கப் பட்டிருந்தது. இதைப்படித்ததும் என் இருதயம் வேகமாகத் துடித்தது. என் இரத்த நாளங்கள் புடைத்து நின்றன. நான் ஓர் உயரிய மனிதன் போன்றிருக்கின்றதே, அதனால்தான் இவ்வாறெல்லாம் எண்ணுகின்றேனே என்னவோ தெரியவில்லையே என்று என் மனத்திற்

குள்ளேயே நான் கூறிக்கொண்டேன். அப்பொழுதே பெரும் புகழும் பெருவாழ்வும் பெற்றுவிட வேண்டுமென்று என் மனத்தில் வேணவா கொந்தளித்துக் குமுறிக் கூத்தாடத் துவங்கியது. என் மனத்தை அந்தப் புகழ் வாழ்வுபற்றிய எண்ணமும், 'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலிற் தோன்றாமை நன்று' என்னும் பொய்யாமொழியும் அல்லும் பகலும் மொய்த்துக் கொண்டிருக்கின்றன. எப்படி, எப்பொழுது புகழ்வாழ்வைப் பெறுவது என்பதை யறியாது நான் விழித்துக் கொண்டுள்ளேன். ஆனால், என்னவோ ஆசை மட்டும் உள்ளது. அந்த ஆசை வெறுமனே இல்லை. என்னைக் கொல்லாது கொன்றுதான் வருகிறது.

உனக்கும் இம்மாதிரியான வேணவா யாதேனும் எப்பொழுதேனும் ஏற்பட்டதா? ஏற்பட்டிருப்பின் அதற்கு நீ என்ன செய்தாய் என்பதை அறிய நான் பெரிதும் அவாவுறுகின்றேன். விரைவில் எழுதி அனுப்பு.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

2

அன்புள்ள அறிவண்ணல்!

உன்னுடைய மடல் கிடைத்தது. மகிழ்ச்சியுற்றேன். உன் போன்று எனக்கு எக்காலத்திலாயினும் வேணவா ஏற்படவும் இல்லை. அதற்காக நான் படாதபாடு படவும் இல்லை. இறைவன் எனக்களித்துள்ள வாழ்வைக் கொண்டே நான் மனநிறைவு பெற்றுள்ளேன். அந்த மனநிறைவையே நான் பெருதற்கரிய பேருய்க் கருதி மகிழ்வுறுகிறேன். இறைவனுடைய நாட்டத்திற்கு அடிபணிந்து மனநிறைவுடன் வாழ்வதே என் துன்பத்திற்கெல்லாம் மருந்து தடவி ஆற்றுவது போன்றுள்ளது. கோடானு கோடிப்பேர் என்னைவிட இழி நிலையில் வாழும் பொழுது எனக்கு இறைவன் இந்த வாழ்வையாவது தந்துள்ளானே என்று மன நிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கிறேன். அதற்காக நான் இறைவனுக்கு நன்றியும் செலுத்துகிறேன். எனக்கு என்ன நேர்கின்றதோ அதைப் பற்றி நான் ஒருபோதும் முணுமுணுப்பதோ, முனகுவதோ இல்லை.

அன்றொரு நாள் என் இல்லம் வந்த ஒரு பெரியாருடன் நான் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது பக்கத்து வீட்டுக்காரரும் அந்த உரையாடலில் கலந்துகொண்டார். அப்பொழுது அவர் அப்பெரியாரைப் பார்த்து 'நாம் விரும்புவதை பெற்றிருப்பது பெரும் பேருகும்' என்று கூறினார். அப்பொழுது அந்தப் பெரியார், 'ஆம், ஆனல் நாம் பெற்றிராத ஒன்றை விரும்பாதிருப்பது அதைவிடப் பெரும் பேருகும்' என்று மறுமொழி பகர்ந்தார். அவருடைய இக் கருத்து அங்கிருந்த எங்கள் அனைவரையும் தூக்கி வாரிப் போட்டது. அவர் போன்று நான் முற்றும் துறந்த முனிவ

ராக இல்லாதபோதினும் எனக்கும் ஏதோ சில ஆசைகள் உள்ளன. அவற்றையெல்லாம் நிறைவேற்றித் தருமாறு இறைவன் மீது ஆதரவுவைத்து நம்பிக்கையுடனுள்ளேன். இறைவன் எனக்கு அளித்துள்ள பேறுகளில் அதிருப்தியுற்று விடின் அவன் என்மீது அதிருப்தியுற்று எனக்கு மேன்மேலும் பேறுகளை அளிக்காதிருந்து விடுவானோ என அச்சமாகவும் உள்ளது. எனவே, எனக்கு அவன் அளித்துள்ள பேறுகளுக்கு நன்றி செலுத்தி மேலும் அவனுடைய உதவியை எதிர் பார்த்துள்ளேன்.

நான் விரும்பும் நாட்டத்தை நிறைவேற்றி மகிழ்ச்சியை எனக்கு இறைவன் தந்த போதினும் சரி தராதபோதினும் சரி, அந்த மகிழ்ச்சியில்லாமலேயே நான் என்னை மகிழ்ச்சி படுத்திக்கொள்ளப் பழக்கப் படுத்திக்கொண்டுள்ளேன். என்னிலே, என் உளத்திலே நான் மகிழ்ச்சியைக் காணாது நான் உலகில் எங்குப் போய்த்தான் மகிழ்ச்சியைக் காண இயலும்; பெற இயலும். தான் உள்ள நிலையில் மகிழ்ச்சியடையாத மனிதன் தன்னுடைய வருங்கால நிலையில் எவ்வாறு மகிழ்ச்சியடைய இயலும்?

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்

3

அன்புள்ள அருட் செம்மல்!

நீ வரைந்த முடங்கல் வரப்பெற்றேன். நீ அதில் பொறித்திருந்த கருத்துக்கள் மிகவும் ஆழ்ந்த தன்மையுடையனவாய் இருந்தன. அதற்காக நான் உன்னைப் பாராட்டுகின்றேன். ஆனல்! அக் கருத்துக்கள் இளைஞர்களாகிய உனக்கும் எனக்கும் ஏற்றனவா என்பதுதான் எனக்கு ஐயமாகவுள்ளது.

மன நிறைவிற்கும் அலட்சிய நோக்கத்திற்கும் இடையே மயிரளவு இருக்கும் வேற்றுமையை நீ அறியாது அவ்வாறு எழுதி இருக்கின்றாயோ என்னவோ நான் அறியேன். அல்லது சில ஞான நூல்களைப் படித்துவிட்டு அவ்வாறு எழுதியிருக்கின்றாயோ என்பதும் எனக்குத் தெரியாது. திடீரென உன் இளமூளையில் இத்தகைய எண்ணம் எவ்வாறு குடி புகுந்தது என்பதுதான் எனக்குப் பெரும் விந்தையினும் விந்தையாய் உள்ளது. இந்த அலட்சிய நோக்கத்தை ஒருவன் கொண்டுவிடுவானாயின் அவனை அந்நோக்கத்தை விட்டு இலகுவாய்த் திருப்ப முடியாதே என்றுதான் எனக்கு அச்சமாயுள்ளது. நீ உன்னுடைய உடலிலிருந்து இதயத்தைப் பிய்த்தெடுத்தல்லவோ வெளியே வீசிவிட்டாய் போல் தோன்றுகின்றது! ஒருவன் ஒருபோதும் மன நிறைவு கொள்ளக்கூடாது என்றும், அவ்விதம் செய்பவன் தன்னையே தான் உயிரோடு புதைத்துத் தன் புதைகுழிமீது புல் முளைப்பதை அனுமதித்துவிட்டான் என்றுதான் நான் கருதுகிறேன்.

அலட்சிய நோக்கத்தால் இதுவரை உலகில் எச்செயலும் ஆற்றப்படவில்லை என்பதை நீ அறிந்திருப்பாய் என்று

நம்புகிறேன். அஃது ஒரு பெரும் நூலையோ, பெரும் இலக்கியத்தையோ, பெரும் சிற்பத்தையோ, பெரும் ஓவியத்தையோ, பெரும் வீரச் செயலையோ ஆற்றியிருக்கின்றதா? இல்லை. அதற்கு மாறாய் ஊக்கமும் உற்சாகமும் பேராவலும் தாம் பெரும் பெரும் செயல்களை ஆற்றியுள்ளன. உலகில் தோன்றும் பெரியார்களெல்லாம் தங்களுக்குத் தங்களின் வாழ்க்கையின் துவக்கத்தில் கிடைத்த நிலைமையில் மன நிறைவுற்றோ, அல்லது தாங்கள் துவக்கத்தில் ஆற்றிய செயலில் மன நிறைவுற்றோ இருந்திருப்பின் அவர்களால் பெரும் பெரும் செயல்களை ஆற்றி இருக்க இயலுமா? பேரும் புகழும் பெற்றிருக்க இயலுமா? தான் ஆற்றிய செயல்பற்றி மன நிறைவு கொள்ளும் ஒருவன் தான் வருங்காலத்தில் ஆற்றும் செயல்களால் புகழ் பெற இயலாதல்லவா? அதாவது அவன் வருங்காலத்தில் புகழத்தக்க செயல்கள் ஆற்றவேண்டும் என்னும் ஊக்கமும் உற்சாகமும் அற்றவனாய் ஆகிவிடுவானல்லவா?

நீ 'போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்று கூறி உன்னையே நீ சோம்பேறியாக்கி, உன்னுடைய வாழ்வையே பாழ்படுத்திக் கொள்வாயோ என்று நான் அஞ்சுகின்றேன். ஏனெனில், மன நிறைவு என்பது ஒருவன் தன்னுடைய சோம்பேறித் தனத்தைத் தன்னுடைய கண்களிலிருந்தும் பிறருடைய கண்களிலிருந்தும் மறைப்பதற்காக இடும் திரை என்பதே என் கருத்து. இவ்வாறு மன நிறைவுத் திரையை அணிந்துகொண்டு இளைஞர்கள் தங்கள் வாழ்வாகிய செழு நிலத்தில் மேலான செடிகளைப் பயிரிட்டு அவற்றின் பலன்களைத் தங்களின் முதுமையில் தாங்களும் நுகர்ந்து பிறருக்கும் நுகரக் கொடுத்து மகிழ்வதற்குப் பதிலாய்த் தங்களின் வாழ்வைப் பயனற்றதாக்கிப் பாழாக்கிவிடுவதுதான் எனக்குப் பெரிதும் வருத்தமாய் உள்ளது. மன நிறைவு, மன நிறைவு என்று கூறி முழங்காலைக் கட்டிக்கொண்டிருப்பவர்கள் உண்மையில் மன நிறைவு பெறுவதில்லை. அவர்கள் சோம்பேறி வாழ்க்கை வாழ்வதால் எண்ணத்தொலையாத் துன்ப எண்ணங்கள் அவர்களின் மனத்தை மொய்த்து அவர்களின் வாழ்வையும் துன்ப மயமாக்கிவிடுகிறது. அதற்கு

மாருக ஒரு பெரும் குறிக்கோளை நோக்கிச் செல்பவன், தான் அக் குறிக்கோளை எய்தியே தீரவேண்டுமென்று பெருங் கவலையும் இடையிடையே ஏற்படும் சிறு சிறு தோல்விகளைக் கண்டு ஏமாற்றமும் வருத்தமும் பட்டபோதினும் இடையிடையே நிகழும் சிறு சிறு வெற்றிகளால் ஊக்கமும் உற்சாகமும் பெற்று முன்னேறிச் சென்று இறுதியில் வாகை சூடி பெரு மகிழ்வு பெற்றுவிடுவான். பெரும் தொண்டாற்றிவிடுவான். ஆனல், அதற்கு மாருய்த் தனக்குக் கிடைத்தவற்றில் மன நிறைவுற்று ஒன்றுமே செய்யாது தன்னுடைய வாழ்க்கையைக் கழிப்பவன் ஒன்றுமே இல்லாத அநாமதேயப் பேர்வழியாகத்தான் மடியவேண்டியிருக்கும். அவன் இவ்வுலகில் வாழ்ந்ததனுல் பிறருக்கு அணுவத்தனையும் நன்மையில்லை. அவ்வித மனிதர்களில் நீயும் ஒருவனுய் ஆகிவிடக்கூடாது என்பதே என்னுடைய கவலை.

இவ்வாறு நான் எழுதியிருப்பதைக் கண்டு, நான் உன்னைக் குறை கூறுவதாக நீ கருதிக்கொள்ள வேண்டாம். என் கருத்துக்களை உன் கருத்துக்களுடன் உராயச்செய்து அறிவுத் தெளிவு பெறுவதற்காகவே நான் இவ்வாறு எழுதியுள்ளேன். உண்மையைத் தேடித் திரியும் மாணவர்களாகவே உன்னையும் என்னையும் நான் கருதுகின்றேன். உன்னுடைய கருத்துக்களுடன் என்னுடைய கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்த்து உண்மையைக் கண்டுபிடித்து அதன்படி ஒழுகவேண்டுமென்பதே என் விருப்பம். நான் கொண்டுள்ள கருத்துக்கள் முற்றிலும் சரி என்று நான் வாதாடவும் விரும்பவில்லை. நீ கொண்டுள்ள கருத்துக்கள் முற்றிலும் தவறு என்று நான் முனைந்து கூறவும் விரும்பவில்லை. அவ்விதம் கூறின், நாம் உண்மையைக் கண்டு பிடிக்கவும் இயலாது; நம்முடைய கடிதப் போக்குவரத்தும் இன்பமற்றதாய் ஆகிவிடும். முயலை விரட்டிச் செல்லும் வேடன் முயலைச் சுட்டு வீழ்த்துவதைவிட அதனை விரட்டிச் செல்வதிலே இன்பம் காண்பதுபோன்று நாம் வாதிடுவதிலேயே இன்பம் கண்டுவிடக்கூடாது. உண்மையைக் கண்டு பிடிப்பதிலே இன்பம் காணவேண்டும் என்று விரும்புகிறேன்.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்.

## 4

அன்புள்ள அறிவண்ணல்!

உன் அஞ்சல் கிடைத்தது. அதைப் படித்ததும் என் நெஞ்சிலே என்னவென்னவோ எண்ணங்களெல்லாம் தோன்றின. நான் இதுகாறும் பேணிப் பாதுகாத்துவரும் கொள்கைகளையெல்லாம் உன்னுடைய மடல் துகள் துகளாகக்கிவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். தவற்றைஉண்மையெனப் பற்றிப் பிடித்துக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதைவிட அது துகள் துகளாக நொருங்கி எனக்கு உண்மையின் அறிவு ஒளி ஏற்படுவதை நான் பெரிதும் விரும்புகிறேன். நான் தவறு செய்யாதவன் என்று என்னையே நான் கூறிக்கொள்ளவில்லை. ஒருவன் தான் தவறு செய்யாதவன் என்று எண்ணிக் கொள்ளும் எண்ணமே மிகப்பெரும் தவறுனது என்ற கருத்துக் கொண்டுள்ளவன் நான். தவறே செய்யாதவன் ஒரு முட்டாளாக இருக்கவேண்டும். தவறேசெய்யாதவன் போன்று நடிப்பவன் ஓர் அயோக்கியனுக இருக்கவேண்டும். அவன்பற்றிய வரையில் நாம் எச்சரிக்கையா யிருக்கவேண்டும் என்பதையும் நான் அறிவேன். நம் மக்களுடன் பெரும் தொந்தரவு என்னவென்றல், அவர்கள் தங்களைப் போன்று எண்ணுபவர்களைத் தவிர்ந்து மற்றவர்களை எல்லாம் முட்டாளாகக் கருதிக் கொள்கிருர்கள். ஒரு கருத்து தங்களுடையதா யிருப்பின் அதுதான் உண்மை என்று சாதிக்கின்ருர்கள். ஒரு கருத்து உண்மையற்றதா யிருப்பினும் அது தங்களுடையது என்பதற்காக அதுவே உண்மையானது என்று சாதிப்பது உண்மையை விடத் தங்களை அவர்கள் அதிகமாக மதித்துவிடு

வதாலேயேயன்றி வேறில்லை. இவ்வாறு நான் கூறும்பொழுது பொதுவாக உலக இயல்பைப் பற்றியே கூறுகின்றேனே யன்றி உன்னை நான் மறைமுகமாகத் தாக்குகின்றேன் என்று நீ எண்ணிக்கொள்ளக்கூடாது. பொதுவாக நாம் கொள்ளும் கருத்துக்கள் தெளிவான சிந்தனையின்மீது கொள்ளப்படுவ தில்லை. ஒருவன் தன்னுடைய கருத்துக்களுக்கு மாற்றமான கருத்துக்களை கூறியதற்காக மனிதன் சச்சரவு செய்கிறான். ஒருவன் தன்னுடைய கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக் களை உடையவனாக இருப்பதற்காக அவனுடன் சச்சரவு செய்து அவனுடைய மூளையைக் கலக்குவதற்கு மாறாகத் தன்னுடைய மூளையைக் கலக்கிக்கொள்வானாயின் தான் இது காறும் இத்துணைத் தவறான கருத்துக்களைக் கொண்டிருந்த தற்காகத் தன்னுடனே சச்சரவு செய்துகொள்வான் என் பதில் ஐயமில்லை.

ஒருமனிதன் தவறே இழைக்காதவன் என்று கூறிக்கொள் வது பெருமையின் அடையாளமே யன்றி வேறில்லை. என்னு டைய இக் கருத்தை நீயும் ஒப்புக்கொள்வாய் என்று நம்பு கிறேன். நாம் இருவரும் ஒருங்கு சேர்ந்து உண்மையைக் கண்டுபிடிக்கவேண்டும். பொய் மெய் போன்றும் தோன்றும்; மெய் பொய் போன்றும் தோன்றும். பொய் மெய்யோடு இரேகித்தும் இருக்கும். மெய், பொய்யோடு இரேகித்தும் இருக்கும். அவற்றையெல்லாம் நாம் பகுத்தறியவேண்டும். அரைகுறை உண்மையை அறிந்து அதன்படி ஒழுகுவதைவிட அறியாமையில் மூழ்கி ஒன்றுமே செய்யாதிருந்துவிடுவது எவ் வளவோ மேலானது என்று நான் கூறுவேன். ஏனெனில், அறி யாமையானது யாதும் எழுதப்படாத வெற்றுக் காகிதம்; ஆனால் அரைகுறை உண்மையை அறிந்திருப்பதோ யாதோ கிறுக்கப்பட்ட காகிதம். அதில் நாம் மேற்கொண்டு எழுத விரும்பினால் முன்னால் எழுதப்பட்டுள்ளதை அழித்துவிட்டுத் தான் எழுதவேண்டும். அறியாமையானது உண்மையின் பக் கல் தன் முதுகைக் காட்டி நிற்பது என்பதுதான் பொருள். ஆனால், அரைகுறை உண்மையை அறிந்திருப்பதோ தவறான பாதையில் அடியெடுத்துவைத்து நடப்பதாகும். அறியா மைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கே கிடையாது. ஆனால் அரை

குறை அறிவோ, யாதோ ஒன்றை அறிவு விளக்கு என்று எண்ணிப் பின்பற்றிச் செல்கிறது. எனவே, அது உண்மைக்குத் திரும்பி வரவேண்டுமானால் அறியாமையைவிட நீண்ட தொலை பிரயாணம் செய்துதான் உண்மையை அடைய இயலுகின்றது.

ஆதலின், நாம் உண்மையைக் கண்டுபிடிப்பதற்காகப் பாடுபடவேண்டும். அதைக் கண்டுபிடிக்கும் நம்முடைய முயற்சியில் ஆயிரம் பழங் கொள்கைகளைக் காலால் மிதித்துச் செல்ல நேர்ந்தபோதினும் நாம் அதனைப் பொருட்படுத்தாது முன்னேறிக்கொண்டுதான் இருக்கவேண்டும். உண்மையை உண்மையென அறிந்தும் அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பதுதான் பெரிய நாஸ்திகத் தன்மை என்பது என் கருத்து. ஆதலின், நாம் இருவரும் உண்மையை அறிய வேண்டும் என்பதற்காக உண்மையைத் தேடுவோமாக. அது யார் மூளையிலிருந்து உதித்தபோதிலும் அல்லது யார் வாயிலிருந்து வெளிவந்த போதினும் அதனை நாம் ஏற்றுக் கொள்வோமாக. இதில் நாம் நம்முடைய விருப்பு வெறுப்புக்களையும் தவறான தன்மதிப்புக்களையும் தலைகிளப்ப அனுமதிக்கக்கூடாது. ஆதலின் நாம் நம்முடைய மூளையால் சிந்திக்கவேண்டுமேயன்றி மனத்தால் சிந்திக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சரியான அடிப்படையில் நின்று பாமரர்கள் போன்று உணர்ச்சி வசப்பட்டுத் தவறான முறையில் வாதாடுவதைவிட, பிறர் என்ன கூறுகின்றார் என்பதை ஆழ்ந்து கவனியாது தான் என்ன கூறி வாதத்தில் வெற்றி பெறலாம் என்று எண்ணுவதை விட, தன்னுடைய கருத்துக்களின் போலித் தன்மையைத் தான் உணர்ந்தபோதினும், வாதத்தில் வெற்றி பெற்றுவிடவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் உரத்த குரல் எழுப்பி வாதாடித் தன்னுடைய கருத்துக்களை நிறுவ முயல்வதைவிட, தவறான அடிப்படையில் நின்றுகொண்டு ஓர் அறிஞன் போன்று ஆழ்ந்தும் அமைதியாகவும் சிந்திப்பதுகூட மேலானது என்று நான் கூறுவேன். ஏனெனில் சரியான அடிப்படையில் நின்று கொண்டு உணர்ச்சி வசப்பட்டுச் சிந்திக்கும் பாமரன் அடி சறுக்கித் தவற்றுப் படுகுழியில் விழுந்துவிடும் பொழுது

தவருன அடிப்படையில் நின்றுகொண்டு அமைதியாகவும் ஆழ்ந்தும் சிந்திக்கும் அறிஞன் உண்மையின் சிகரத்தை எட்டிப் பிடித்துவிடுவான் என்பதில் ஐயமில்லை.

ஆதலின் நண்பனே! உன்னுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ள நான் என் மூளையில் ஒரு பகுதியை எவ்வித விருப்பு வெறுப்புமற்று மாசு மறுவற்ற நிலையில் தூய்மையாக வைத்துள்ளேன். உன்னுடைய கருத்துக்களைக் கூறு. அவற்றை அன்புடன் வரவேற்றுச் சிந்திக்கின்றேன். நானும் ஏற்கனவே சிந்தித்து என்னுடையனவாகச் சில கருத்துக்களைப் பெற்றுள்ளேன். அவற்றுடன் உன் கருத்துக்களையும் உரைத்து நாம் இருவரும் ஒரு முடிவுக்கு வருவோம். என்னுடைய் கருத்துக்கள்தாம் சிறந்தவை; என் போன்று சிந்திக்காதவர்கள் முட்டாள்கள் என்று நான் கூறவும் இல்லை. அதற்கு மாருக நானும் எவ்விதத் தனிப்பட்ட சிந்தனையும் அற்றுப் பிறரின் கருத்துக்களுக் காட்படும் அடிமையாக, எடுப்பார் கைப் பிள்ளையாக இருக்கவும் விரும்பவில்லை. நீ என்னவோ மன நிறைவு பற்றி நான் கொண்டுள்ள கருத்துக்களைக் குறை கூறி எழுதியிருந்தாய். அவ்விதமானுல் மனிதன் மன நிறைவுபெற்று மகிழ்வுடன இருக்கக்கூடாதா? பேராசையுடன் பேயென அலைந்து திரியவேண்டுமா, என்ன? விளக்கம் தேவை.

அனபுள்ள நண்பன்,

அருட் செம்மல்.

# 5

அன்புள்ள அருட்செம்மல்!

உன் மடல் கிடைத்தது. அதிலே நீ குறிப்பிட்டிருந்த செய்திகள் என் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. நீ உணர்ச்சி வசப்படாது அமைதியான மனோ நிலையுடன் இருந்து எழுதி இருப்பது உன் மீது எனக்கு ஒரு தனி அன்பை உண்டுபண்ணியது. நாம் நம்முடைய மூளையால் சிந்திக்க வேண்டுமேயன்றி மனத்தால் சிந்திக்கக் கூடாது. என்று நீ அதில் பொறித்திருந்தது உண்மையில் என் கண்களைத் திறந்து விட்டது என்றே கூறுவேன். நான் உனக்கு முதலில் எழுதிய மடல் உணர்ச்சி வசப்பட்டே எழுதினேன். காரணம்' நான் அப்பொழுது உணர்ச்சி வசப்பட்டே இருந்தேன். அதன்பின் நீ எனக்கு எழுதிய இரு மடல்களும் என் உணர்ச்சியைச் சிறிது மழுக்கி என் அறிவைத் தெளிவுபடுத்தின. முன்பெல்லாம் என் மூளைக்கு எட்டாத கருத்துக்களை என் மனம் கூறிக்கொண்டிருந்தது, என் அறிவு எதைத்தான் அதற்கு எடுத்தோதிய போதினும் என் மனம் உணர்ச்சி வசப்பட்டுச் சிந்தித்துக்கொண்டிருந்ததால் அவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் ஆயின. ஆனால், இப்பொழுதுதான் உணர்ச்சி வசப்பட்டுச் சிந்திப்பது எவ்வளவு தவறானது என்பதை அறியலானேன். புகழ் வாழ்வு வாழ வேண்டும், புகழ்வாழ்வு வாழவேண்டும் என்று துடியாய்த் துடித்துக்கொண்டிருந்த எனக்கு நீ மனநிறைவு பற்றி மாமுனிவர்கள் போன்று அறிவுரை பகர்ந்திருந்ததானது உண்மையில் வெறுப்பைத்தான் தந்தது. ஆனால், உனக்கு மடல் தீட்டியபின் சாய்வு நாற்காலியில் சாய்ந்து ஒரு நூலைப் படித்துக் கொண்டிருக்குங்கால் அதிலே பொறிக்கப்பட்டிருந்த பின்

வரும் வாக்கியங்கள் என்னுடைய அவசரப் புத்தியை இடித்து ரைப்பது போன்றிருந்தது.

'உலகில் இத்துணைத் துன்பம் ஏற்படுவதற்குக் காரணம் ஒரே தாவில் உச்சியை அடைந்து விட வேண்டுமென்று மக்கள் அவாவுறுவதுதான். அவர்கள் மனநிறைவையும் வேணவாவையும் ஒன்றோடொன்று பகையாக்கி முட்டிக்கொள்ள விட்டுவிடுகின்றார்கள். ஆனால், இறைவனோ அவை இரண்டையும் உற்ற நண்பர்களாகவே படைத்துள்ளான். ஒருவன் பெருவாழ்வு வாழப் பேரவாக் கொள்ளலாம். ஆனால், தான் எழுந்து நின்று பெருவாழ்வை நோக்கிப் பறக்கும் காலம் வரும் வரையில் தன்னை அதற்காகத் தயார்ப் படுத்திக் கொண்டு மனநிறைவோடுதான் இருக்கவேண்டும்.'

இம்மணிமொழிகளைப் படித்து விட்டு நான் அப்பாற் செல்லும் பொழுது 'நாம் எதைப் பெற்றிருக்கின்றோமோ அதைப்பற்றி நாம் மனநிறைவோடிருப்பது சரிதான். ஆனால், நாம் யாராய் இருக்கின்றோமோ அதைப் பற்றி நாம் ஒருபோதும் மனநிறைவு கொள்ளவே கூடாது' என்று அவ்வாசிரியர் எழுதியிருந்த வாக்கியங்களும் என் கண்களில் தைத்தன. இவற்றைக் கண்டதும் என் மூளை குழம்பியது. ஒருவன் மனநிறைவு கொள்ளவே கூடாது. அவ்விதம் கொளின் அவன் தன்னையே தான் உயிரோடு புதைத்துக் கொண்டதற்கு நிகராகும் என்று நான் இதுகாறும் எண்ணி இருந்தேன். ஆனால், நீயோ மனநிறைவே மனிதனின் இலட்சணம் என்னும் கருத்துப்பட எழுதி இருந்தாய். ஆனால், நான் படித்த அந்த நூலிலோ மேலே நான் கூறியபடி எழுதப் பட்டுள்ளது. இதில் எது சரி, எது தவறு என்பது எனக்கு விளங்கவில்லை. நாம் எதைப் பெற்றிருக்கின்றோமோ அதைப்பற்றி மன நிறைவோடிருப்பதென்றால் என்ன? நாம் யாராய் இருக்கின்றோமோ அதைப்பற்றி மனநிறைவு கொள்ளவே கூடாது என்றால் என்ன? என்பது பற்றி எனக்கு மயக்கமாய் உள்ளது. அதைப் பற்றி நானும் சிந்தித்தேன்; சிந்தித்துச் சிந்தித்து என் மூளை அலுத்ததே யொழிய அறிவுத் தெளிவு ஏற்படவில்லை. எனவே, அறிவு விளக்கம் தேடி இம்மடல் உனக்கு எழுதுகின்றேன். நீயும் இவற்றைப் பற்றிச் சிந்திப்

பாயாக! நான் முன் எழுதியிருந்த மடலில் குறிப்பிட்டிருந்த செய்திகள் பற்றியும் நீ மேற்கொண்டும் சிந்தித்திருப்பாய் என்று நம்புகிறேன். உண்மை விளக்கம் உனக்கு ஏதாவது தோற்றமளித்ததா? தோற்றமளித்திருப்பின் உடனே அதனை எழுதி அனுப்பு.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

# 6

அன்புள்ள அறிவண்ணல்!

உன்னுடைய திருமுகம் வந்தது. அதைப் பிரித்துப் பார்த்ததும் நீயே என் முன் தோற்றமளித்து உரையாடுவது போன்றும் உன் திருமுகமே என் முன் காட்சி வழங்குவது போன்றும் நான் உணர்வு பெற்றேன். என்னுடைய மடல்கள் உன் சிந்தனையைச் சிறிதளவு கிளறிவிட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி. அதே போன்று உன்னுடைய மடல்களும் என்னுடைய சிந்தனையைப் பெரிதும் கிளறி விட்டுவிட்டன. உனக்கு மடல் தீட்டிவிட்டு நான் என் படிப்பறையில் நின்று உலவிக் கொண்டு சிந்தித்துக் கொண்டிருக்குங்கால் நான் மன நிறைவு பற்றி உனக்கு முன்பு எழுதியது சரிதானு என்னும் ஐயம் எனக்கு ஏற்பட்டது. நான் கொண்ட எண்ணம் சரியான போதினும் அது இளைஞர்களாகிய நாம் கொள்ளக் கூடியதன்று என்று உன் படலில் நீ குறிப்பிட்டிருந்தது என் நினைவுக்கு வந்தது. அது ஒரு வகையில் சரியானதாகவே எனக்கும் தென்பட்டது. தங்களைவிடப் பெரியவர்களுடன் தங்களை ஒப்பிட்டுப் பார்த்துத் தங்களின் தாழ்ந்த தன்மையை அறிந்து தங்களை உயர்த்திக் கொள்ள முற்படுபவர்கள்தாம் பெரிய மனிதர்களென்றும் தங்களை விடத் தாழ்ந்தவர்களுடன் தங்களை ஒப்பிட்டுப் பார்த்துத் தங்களைப் பெரிதாய் மதித்துக் கொள்பவர்கள் அற்ப மனிதர்கள் என்றும் நீ முன்னொரு மடலில் குறிப்பிட்டிருந்ததும் என் நினைவுக்கு வந்தது. அப்படியானல் நாம் நம்மைவிட உயர்ந்தவர்களைப் பார்த்து ஏக்கமும் பொருமையும் நிரம்பிய வாழ்க்கைதான் வாழவேண்டுமா? நம்மைவிடத் தாழ்ந்தவர்களைப் பார்த்து நாம் மகிழ்வுடனும் மனநிறைவுடனும் இருக்கக்கூடாதா என்றும் சிந்தித்தேன். அதன் பின்தான் அது பற்றிய விளக்

கம் எனக்கு ஏற்பட்டது. நம்மை விடத் தாழ்ந்தவர்களைப் பார்த்து நாம் அளவுக்கு மீறிய மனநிறைவு பெற்றுவிடின் அது மமதையாக மாறிவிடுகின்றது என்பதையும், நம்மை விட உயர்ந்தவர்களைப் பார்த்து நாம் அளவுக்கு மீறி மனத்தை அலட்டிக்கொள்வது நமக்கு ஊக்கத்தையும் உணர்ச்சியையும் அளிப்பதற்குப் பதிலாய் ஏக்கத்தையும் பொருமையையும் கவலையையும் உண்டுபண்ணி விடுகின்றன என்பதையும், நாம் நம்மைவிடத் தாழ்ந்தவர்களை ஒரு கண்ணுல் பார்த்து ஓரளவு மனநிறைவும் நம்மைவிட உயர்ந்தவர்களை மற்ருெரு கண்ணுல் பார்த்து ஓரளவு ஊக்கமும் பெற்றுச் செயலாற்ற வேண்டும் என்றும் அப்பொழுதுதான் வாழ்க்கைத் தராசு சமநிலையில் நிற்கும் என்றும் முடிவுக்கு வந்தேன். இவ்வாறு நான் சிந்தித்துக்கொண்டிருக்கும் காலை தான் உன்னுடைய கடிதமும் வந்து சேர்ந்தது. நாம் எதைப் பெற்றிருக்கின்ருேமோ அதைப்பற்றி நாம் மனநிறைவோடிருப்பது சரிதான். ஆனுல், நாம் யாராய் இருக்கின்ருேமோ அதைப் பற்றி நாம் ஒரு போதும் மன நிறைவு கொள்ளவே கூடாது என்று ஒரு நூலில் பொறிக்கப்பட்டிருந்ததாகவும் அது உனக்கு மயக்கமாக இருக்கின்றதென்றும் அதற்கு விளக்கம் தேவை என்றும் எழுதி இருந்தாய். ஆனுல் அது எனக்கு மயக்கத்தை அன்று, நான் சற்று நேரத்திற்கு முன் வந்திருந்த முடிவுக்கு அதிக விளக்கத்தைத்தான் தந்தது. மனநிறைவு என்ருல் முயற்சியாற்ருது முழங்காலைக் கட்டிக்கொண்டிருப்பதன்று: ஏக்கம், கவலை ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் முயற்சியாற்றிக்கொண்டிருப்பதுதான் என்னும் புது விளக்கமும் எனக்கு இப்பொழுது ஏற்பட்டது. நம்முடைய உடைமைகளைப் பற்றி ஓரளவு மனநிறைவுடன் இருந்து செயலாற்றுவது சரிதான். ஆனுல், நம்முடைய தகுதிபற்றி நாம் ஒருபோதும் மன நிறைவு கொள்ளக் கூடாது என்று எனக்கு இப்பொழுது தோன்றியது.

மேலும் நமக்கு என்ன நேர்கின்றதோ அதைப்பற்றி நாம் மன நிறைவு கொள்ள வேண்டும் என்றும், நம்முடைய

நண்பர்கள் பற்றியும் உடைமைகள் பற்றியும் நாம் மனநிறைவு கொள்ள வேண்டும் என்றும் முடிவுக்கு வந்தேன். தனக்கு என்னென்ன நேர்கின்றனவோ அவை பற்றி ஒருவன் மன நிறைவு கொள்வானாயின் அவன் கவலையிலிருந்து தப்பித்துக்கொள்வான். தன்னுடைய நண்பர்கள், உடைமைகள் பற்றி அவன் மனநிறைவு கொள்வானாயின் அவன் கவலையை விட்டொழிப்பான்.

நம்முடைய கல்வி பற்றியோ, கருத்துக்கள் பற்றியோ நாம் ஒருபோதும் மனநிறைவு கொள்ளக்கூடாது என்றும்—

நம்முடைய பண்பாடு, ஒழுக்கம், ஆன்மீக நிலை ஆகியவை பற்றி நாம் ஒரு போதும் மனநிறைவு கொள்ளக் கூடாது என்றும் முடிவுக்கு வந்தேன். அவ்விதம் செய்து வருவோமாயின் நாம் ஒவ்வொரு நாளும் முழு மனிதத் தன்மையை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்போம். இல்லையெனில் மமதையும் அகங்காரமும் நம்மிடை தலைவிரித்தாடி நாம் மிருக நிலைக்குத் தாழ்ந்து கொண்டிருப்போம். சுருங்கக் கூறின் நாம் மனநிறைவோடுதான் இருக்க வேண்டும். ஆனால், நாம் முழு மனிதத்தன்மையை அடையும் துறையில் மனநிறைவு பெற்று அலட்சியமாய் இருந்துவிடக்கூடாது. நாம் எந்த நல்ல துறையில் ஈடுபட்டபோதினும் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் நன்முயற்சிகள் நற்பலன்களைக் கொண்டு வரும் என்னும் நம்பிக்கையுடனும் இறைவன் மீது அசையாத நம்பிக்கை வைத்து மன அமைதியுடன் செயலாற்ற வேண்டும். நமக்கும் பெரும் பொருள் வந்து சேருமானால் அது தன்னலமற்ற, நேர்மையான எண்ணம், அறிவுடன் கூடிய செயல், அமைதியான முயற்சி ஆகியவற்றால் வந்ததாய் இருக்க வேண்டுமேயன்றிப் பேராசையாலும் கவலையாலும் வந்ததாக இருக்கக்கூடாது என்று முடிவுக்கு வந்தேன். இவை உன்னுடைய அறிவுக்கும் பொருத்தமாய் இருக்குமென்று நம்புகின்றேன். இவற்றை நீ சிந்தியாது அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்பவில்லை. இவற்றை நீயும் நன்கு சிந்தித்து, கொள்ளவேண்டியதைக் கொண்டு வேண்டாததைத் தள்ளி எனக்கும் எழுது. நானும் சிந்திக்கின்றேன்

அன்புள்ள நண்பன்,
அருட் செம்மல்

7

அன்புள்ள அருட் செம்மல்!

உன் கடிதம் கிடைத்தது. அதிலே நீ எழுதி இருந்த அறிவு விளக்கத்திற்குப் பெரிதும் நன்றி. உன்னுடைய இந்தக் கடிதம் என்னுடைய மயக்கத்தைத் தெளிவித்து என் அறிவுக் கண்களைத் திறந்து விட்டது போன்றிருந்தது. எனினும், புகழ்வாழ்வு வாழவேண்டுமென்று நான் கொண்ட ஆவலை அது தணிக்கவில்லை. இவ்வாறு நான் கூறும்பொழுது நான் பேராசை பிடித்தலைவதாய் நீ கருதிக்கொள்ளக் கூடாது. நீ எழுதியிருந்தது போல் நான் எனக்கு மேலுள்ளவர்களைப் பார்த்து சில பொழுது பொறாமைதான் படுகிறேன். அதன் காரணமாய் எனக்குக் கவலையும், தாழ்வு மனப்பான்மையும்தாம் ஏற்படுகின்றன. அதன்பின் என் மனத்திற்கே நான் உற்சாக மொழிகள் கூறி ஊக்கப்படுத்துகிறேன். என் வயதில் அவர்கள் எல்லாம் என்னை விடக் கீழான நிலையில் தானே இருந்திருக்கிறார்கள். அவ்விதமானால் அவர்கள் என் வயதில் வாழ்ந்த வாழ்க்கையோடு என்னுடைய தற்கால வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்ப்பின் நான் அவர்களைவிட மேலான நிலையில்தானே உள்ளேன். அப்படியானால் நான் அவர்களின் வயதை எய்தும் பொழுது ஏன் அவர்களைவிட மேலான நிலையை எய்தக் கூடாது என்று என் நெஞ்சோடு நான் கிளத்திக் கொள்கிறேன். இந்த நன்னம்பிக்கையின் காரணமாகவே நான் இதுகாறும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நம்பிக்கையே என்னுடைய வாழ்க்கையாகவும் என்னுடைய வாழ்க்கையே நம்பிக்கையாகவும் ஆகிவிட்டது. அதுவே என்னை ஒரு மனிதனாகவும் ஆக்கியுள்ளது என்று நான் கூறுவேன். அந்த நம்பிக்கை என்னும் சாளரத்தின் வழியாக நான் வருங்காலத்தை மகிழ்ச்சி நிரம்பிய கண்களுடன்

பார்க்கிறேன். இறைவன் எனக்கு வருங்காலத்தில் அருள்வதற்காக ஆயத்தப் படுத்தி வைத்திருக்கும் நற்பேறுகளையெல்லாம் நான் என் கண்களால் கண்டு மகிழ்வுறுகிறேன். அதுவே, என்னை ஊக்கத்துடன் வேலை செய்யுமாறு செய்கின்றது. நம்பிக்கை என்னும் பரிதியை நோக்கி நான் பயணம் செல்லும் பொழுது என்னுடைய கவலைச் சுமைகளின் நிழல்களெல்லாம் என் தோளிலிருந்து கீழே என் பின்னே பூமியில் விழுந்து விடுகின்றன. உலகில் தோன்றியுள்ள மாபெரும் நற் செயல்களின் ஆணிவேர் இந்த நம்பிக்கைதான் என்பதையும் ஒரு மரம் காய் காய்த்துப் பழம் பழுப்பதற்கு முன் பூப் பூப்பது போன்று எல்லா நற்செயல்களுக்கும் முன்பாக இந்த நம்பிக்கைதான் இருக்கின்றது என்பதையும் நான் உணர்வேன். மனித இனத்தின் இதயத்திலிருந்து இந்த நம்பிக்கையை இறைவன் பிய்த்தெடுத்து விட்டிருப்பானுனல்மனித இனத்தின் வரலாறு தற்போதுள்ளது போன்றிராது. செம்மறியாட்டு மந்தைகளின் வரலாருகத்தான் இருக்கும். கண்ணுக்குத் தோன்ருத ஒன்றின் மீது நம்பிக்கை வைப்பதன் காரணமாகவே மனிதன் வன்மை மிக்கவனுக ஆகின்ருன். அதன் காரணமாகவே அரும்பெரும் செயல்களை ஆற்றவும் செய்கின்ருன். நெப்போலியன் கூறுவது போன்று 'நம்பிக்கை' என்னும் அந்த ஒரு சொல்லின் முன்னுல் மனிதன் படித்தறிந்து கண்ட முடிவுகளெல்லாம் பாழடைந்த வீடு போன்று குப்புற வீழ்ந்து விடுகின்றன. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தது எனக்கு வியப்பை அளிக்கவில்லை. மேற்குப் பகுதியில் திட்டமாக ஒரு நாடு இருக்கின்றது என்று தான் கொண்ட எண்ணத்தைத் திடமாக நம்பி எண்ணத் தொலையா இடையூறுகளையும் பொருட்படுத்தாது தன் உயிரைத் திரணமாய் மதித்து மலையளவு உயர்ந்த அலையெறிந்து கர்ச்சிக்கும் பெரும் கடலையும் ஒரு துரும்பெனக் கருதிச் சென்ருனே அந்தத் துணிவைக் கண்டுதான் நான் இறும்பூதெய்துகிறேன்,

இவ்வாறு நம்பிக்கை ஒருவனை வன்மைவாய்ந்த இரும்பு மனிதனுக்கும் பொழுது ஐயமோ ஒருவனைக் கோழையாகவும் போலி மனிதனுயும் ஆக்குகிறது. நம்பிக்கையானது ஒரு

வனை வெற்றியோடு பிணைக்கக்கூடிய இணைப்புத் தொடராக இருக்கும் பொழுது ஐயமானது ஒருவனைத் தோல்விப் படுகுழிக்கு இழுத்துச் செல்லும் இரும்புச் சங்கிலியாக இருக்கிறது. அதுவே மனித இதயத்திலுள்ள நரகமாயிருக்கிறது. அதுதான் மனிதனுக்கு எத்தனை, எத்தனையோ கவலைகளையெல்லாம் கிளப்பிவிடுகின்றது தெரியுமா? நானும் என் உள்ளக் கோட்டையை நம்பிக்கையால் அரண் செய்து வைத்திருந்த போதினும் எப்படியோ ஐயம் என்னும் வெடி குண்டுகள் அதன் மீது வந்து விழுந்து அதனைத் துகள் துகளாக்கி விடுகின்றன. பின்னர் என் மனக்கோட்டையைத் திரும்ப நிர்மாணிப்பதற்குப் பெரும்பாடாய்ப் போகிறது. ஐயங்களால் தாக்கப்பட்டு உடைபடா வண்ணம் என் மனக்கோட்டையை நானும் எவ்வளவோ அரண் செய்துதான் வைத்துள்ளேன். எனினும், சிறுசிறு துன்பங்களை, ஏமாற்றங்களைக் கண்டு என் இதயம் என்னை அறியாமல் இறங்கி அடிவயிற்றிற்கு வந்து விடுகிறதே. அதன்பின் அதனை அதனுடைய இடத்தில் கொண்டுபோய் வைப்பதற்குப் பெரிதும் சிரமப்பட வேண்டி இருக்கிறதே. இவ்வாறு உன் வாழ்க்கையிலும் நிகழ்வதுண்டா? அவ்விதமாயின் நீ என்ன செய்து வருகின்றாய் என்பதை எழுது.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்.

# 8

அன்புள்ள அறிவண்ணல்!

உன் அருமைக் கடிதம் கிடைத்து அகமகிழ்ந்தேன். என் கடிதங்கள் உனக்கு எவ்வாறு அறிவுத்தெளிவை அளித்தன என்று எழுதியுள்ளாயோ அவ்வாறே உன்னுடைய கடிதங்களும் எனக்குச் சிந்தனை செய்யும் பண்பையும் அறிவுத் தெளிவையும் உண்டுபண்ணி வருகின்றன. முன்பு நான் ஓர் உதாசீனன் (cynic) ஆகவே இருந்தேன். மனிதர்களிடம் காணப்படும் நல்ல தன்மைகள் என் கண்களில் தென்படுவதே இல்லை. அவர்களிடம் காணப்படும் தீய தன்மைகள்தாம் பளிச்சென்று தென்பட்டுவந்தன அதன் காரணமாக என் வாழ்க்கையைத் துன்பமும் துயரமுமாக்கிக் கொண்டிருந்தேன். பின்புதான் என் அறிவுக் கண்கள் வெளிச்சம் பெற்றன. உலகில் ஒன்றுமே நல்லதில்லையா என்ற கேள்வியை என்னிடமே நான் கேட்டுக்கொண்டேன். அதன்பின்தான் உலகில் காணப்படும் நல்லவற்றைக் கண்டு நான் மகிழ்ச்சியும் உவகையும் பெறலானேன். இவ்வாறு நான் என்னைப் பழக்கப் படுத்துவதற்கு எனக்குப் பெரும்பாடாய்ப் போய் விட்டது. அவநம்பிக்கை குடியிருந்த இடத்தில் நம்பிக்கையை நான் குடியேற்றிய பொழுது தீயவை என்று என் கண்களுக்குத் தோற்றமளித்தவையெல்லாம் உண்மையில் எனக்கு நல்லனவாகத் தோற்றமளித்தன. முன்பெல்லாம் அவநம்பிக்கையின் காரணமாக ஓர் இலை அசைந்தால் கூட என் உடல் நடுங்கும். இப்பொழுதோ என் முன் ஒரு வாள் அசைந்தால் கூட என் மனம் அமைதியோடிருக்கிறது. இறைவன் என்னுடன் உள்ளான்; அவன் என்னைக் காப்பான் என்ற எண்ணம் எனக்கு அளவற்ற வலுவை அளித்து வருகிறது. அந்த நம்பிக்கை துன்பத்தின் கொடும் பற்களைப் பிடுங்கி அத

ஞல் நமக்கு அதிகமான துன்பம் தர இயலாது செய்து விடுகி றது. இறைவன் நம்முடன் உள்ளான், அவன் நம்மைக் காப் பாற்றுவான் என்ற நம்பிக்கையின் காரணமாகவும் அழுது அழுது துன்பத்தை அனுபவிப்பதைவிடச் சிரித்துச் சிரித்துத் துன்பத்தை அனுபவித்தால் என்ன என்று எனக்கே நான் வகுத்துக் கொண்ட வரையறையாலும் எனக்குத் துன்பத் தால் யாதொரு இன்னலும் இழைக்க இயலாது போய்விடு கிறது.

நாம் எவ்வளவுதான் மனத்தை வன்மையுடையதாகவும் நம்பிக்கையுடையதாகவும் ஆக்கி வைத்திருந்த போதினும் சிறுசிறு துன்பங்கள், ஏமாற்றங்களை எல்லாம் கண்டு நமக்கு மனச்சோர்வு ஏற்பட்டு விடுகிறதே. அதன்பின் நாம் அதனை ஊக்கமும், உற்சாகமும், நம்பிக்கையும் உள்ளதாக்குவதற் குப் பெரும்பாடாய்ப் போகிறதே. இவ்வித நிலை உனக்கும் ஏற்படுகிறதா என்று நீ கேட்டிருந்தாய். துவக்கத்தில் எனக் கும் அப்படித்தான் இருந்தது. அப்பொழுதெல்லாம் நான் என் மீதும் என் வலுவின்மீதும்தாம் நம்பிக்கை வைத்திருந்தேன். ஆனுல், இப்பொழுதோ என்மீதும் என் வலுமீதும் மட்டுமல் லாது இறைவனின் அருள்மீதும் நம்பிக்கை வைத்துள்ளேன். எனவே, இப்பொழுதெல்லாம் ஒரு சில கணநேரம் அவை என் மனத்தைத் தாக்குகின்றனவேயன்றி அதற்கு மேல் அவற்ருல் என் மனத்தைத் தாக்க இயல்வதில்லை.

உண்மையில் பார்த்தோமானுல் உலகில் ஒரு மனித னுக்கு அளப்பரும் துன்பம் ஏற்படுவதெல்லாம் சிறிது காலத் திற்குத்தான். அதனை அவன் வன்மையான மனத்துடன் பொறுத்துக் கொள்வானுயின் அதன்பின் அவனுக்கு நற் காலத்திற்கான வழி பிறந்துவிடும். ஆனுல், அதைத்தான் சிலர் பொறுத்துக் கொள்ளாது தங்களின் உயிர்க்கே இறுதி விளைவித்துவிடுகிருர்கள். இஃதென்ன பேதமை!

நீ உன்னுடைய மடலில் ஐயம் பற்றிக் குறிப்பிட்டிருந் தாய். ஐயத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, வாழ்வில் கொள்ளும் ஐயம். மற்ருென்று ஆய்வில் கொள் ளும் ஐயம். வாழ்வில் மனிதன் கொள்ளும் ஐயம் கெட்டது.

ஆய்வில் மனிதன் கொள்ளும் ஐயம் நல்லது என்பதே என் துணிபு. வாழ்வில் ஒருவன் ஐயம் கொள்ளுவானாயின் அவனுடைய வாழ்க்கை இன்பமற்றதாகவும் துயர் நிரம்பியதாகவும் தோல்வி நிறைந்ததாகவும் ஆகிவிடும். ஆனால் ஆய்வில் ஒருவன் கொள்ளும் ஐயமே அறிவாளிகளின் வழிகாட்டும் ஒளிவிளக்காக விளங்குகின்றன. வாழ்வில் மனிதன் நம்பிக்கையுடன் செயல் துவங்கவேண்டும். அப்பொழுதுதான் அவனுடைய செயல் வெற்றியில் முடியும். ஆனால், அவன் ஒன்றை உண்மை இதுதான் என்று திட்டமாக நம்பி ஓர் ஆய்வைத் துவங்குவானாயின் அவனுடைய ஆய்வு ஐயத்திலும் தோல்வியிலும் தான் முடியும். ஆனால், ஒன்றைப் பற்றி ஐயத்துடன் அவன் தன் ஆய்வைத் துவங்குவானாயின் அவன் அசைக்க முடியாத உண்மைகளைக் கண்டுபிடித்து வாகை சூடிவிடுவான். ஆதலின், மனித அறிவின் தந்தையே ஐயம் தான். மனிதன் தன்னைச் சூழவுள்ளவை பற்றி ஐயமுற்றிராவிடின் உலக நாகரிகமே ஏற்பட்டிராது. எங்கு ஐயம் உள்ளதோ அங்குத்தான் உண்மை உள்ளது. உண்மையின் நிழல் தான் ஐயம். ஆனால் ஆய்வில் கொள்ளப்படும் அந்த ஐயம் கூட ஓர் அளவோடுதான் இருக்கவேண்டும். அளவுக்கதிமாகக் கொள்ளப்படும் ஐயங்கள் மனிதனுக்கு ஒரே குழப்பத்தை உண்டுபண்ணி அவனை ஒரு முடிவுக்கும் வராமல் செய்து விடுகின்றன. என்னுடைய இக்கருத்துக்களை நீயும் ஒப்புக்கோள்வாய் என்று நம்புகிறேன்.

அனபுள்ள நண்பன்,

அருட் செம்மல்.

9

அன்புள்ள அருட் செம்மல்!

உன் மடல் வந்தது. ஐயம் பற்றி நான் கொண்டிருந்த ஐயங்களுக்கெல்லாம் அது நல்ல விளக்கம் தந்தது. பெரிதும் நன்றி. உனக்கு மடல் தீட்டிவிட்டு நம்பிக்கை பற்றி நெப்போலியன் கூறிய மொழிகளைச் சிந்தித்துக் கொண்டிருக்குங்கால்—அம்மொழிகளை என் முன்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன்.—அவ்விதமானல் நெப்போலியன் மூட நம்பிக்கையைப் பற்றித்தானு குறிப்பிடுகின்ருன்; நம்பிக்கை என்னும் ஒரு சொல்லின் முன்னல் மனிதன் படித்தறிந்து சண்ட உண்மைகளெல்லாம் பாழடைந்த வீடு போன்று குப்புற வீழ்ந்து விடுகின்றன என்கின்ருனே. படித்தறிந்து காணும் முடிவு தானே ஒழுங்கான முடிவு. அது குப்புற வீழ்ந்துவிடும் என்ருல் அதன் பொருள் என்னவென்று சிந்தித்தேன். நண்ப! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இம்மையிலிருந்தே நான் அறிவுக்கு முதல் இடம் கொடுத்து மூட நம்பிக்கைகளை எல்லாம் வெறுத்து வந்தவன் என்பது உனக்குத் தெரியாததன்று. அப்படிப்பட்ட எனக்கு நெப்போலியனின் இக்கூற்றுப் பெரிதும் வியப்பைத்தான் அளித்தது. மூட நம்பிக்கையானது மனிதர்களை மூடர்களாகவல்லவோ ஆக்குகின்றது அதனை அற்ப அறிவு படைத்த மனிதர்கள் தாமே ஏற்றுக்கொள்வர்? அதனை ஏற்றுக்கொள்வதென்பது உருவை விட்டுவிட்டு நிழலை விரட்டிக்கொண்டு செல்வது போல்தானே. மாமேதையான நெப்போலியன் கூட மூட நம்பிக்கையை ஆதரித்தாற்போல் பேசி இருந்தால் அதன் பொருள் என்ன என்று சிந்தித்தேன் எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

மூட நம்பிக்கையை நீயும் வெறுப்பாய் என்று நம்புகிறேன். அதனைப் பாமர மக்கள் மிகுந்த மதபக்தியின் அடைவாளம் என்று கருதிய போதினும் மதபக்தியைத் தவறான வழியில் திருப்பி விடுவதுதான் அது என்று என்னுடன் சேர்ந்து நீயும் எதிரொலி செய்வாய் என்று நம்புகிறேன். ஆனால், பாமர மக்களால் உண்டுபண்ணப்படும் இந்த மூட நம்பிக்கைகளை அறிவாளிகளும் சில பொழுது பின்பற்றுவது தான் எனக்குப் பெரும் வியப்பை அளிக்கின்றது.

நெப்போலியனின் கூற்று ஏற்கனவே உன்னுடைய சிந்தனையையும் கிளறி விட்டிருக்குமென்று நம்புகின்றேன். அது பற்றி உன்னுடைய கருத்துக்களை அறியப் பெரிதும் ஆவலுள்ளவனாயுள்ளேன். விரைவில் எழுதி அனுப்பு.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

## 10

அன்புள்ள அறிவண்ணல்!

நேற்று எனக்குக் கிடைத்த உன் மடலில் நம்பிக்கை பற்றி நெப்போலியன் கொண்டுள்ள கருத்து பற்றியும் மூட நம்பிக்கை பற்றியும் உனக்கேற்பட்ட ஐயங்களை எழுதி இருந் தாய்; உன்னுடைய ஐயங்கள் நியாயமான ஐயங்களேயன்றி வேறில்லை. நெப்போலியன் அவ்வாறு கூறும்பொழுது அறி வுக்கு அப்பாற்பட்டுள்ள நம்பிக்கையைத்தான் குறிப்பிடு கின்றான் என்று நானும் எண்ணுகிறேன். அறிவு என்பது நம் மைச் சூழவுள்ள, நாம் கண்ணால் காணும் பொருள்களிலி ருந்து ஒரு முடிவுக்கு வருவதையே குறிக்கும். கண்ணால் காணாத பொருள்கள் பற்றி அது சிந்திக்கவும் செய்யாது. யாதொரு முடிவுக்கும் வராது. கண்ணால் காணாத பொருள் களைப் பற்றிச் சிந்தித்தால் அந்தச் சிந்தனை மூட நம்பிக்கை யில் போய் முடிந்துவிடும் என்று அறிவு அஞ்சுகிறது. எனவே எல்லாவற்றையும் கண்ணால் கண்டால் தான் நம்புவேன், இல்லையேல் அதனை நம்பமாட்டேன் என்று பகுத்தறிவாளர் கள் என்று கூறிக்கொள்ளும் சிலர் கூறுகின்றார்கள். ஆனால், நான் அவர்களை அறிவாளிகள் என்று கூறமாட்டேன். ஒரு வகையில் பார்த்தோமானால் அறிவற்றவர்கள் என்றுதான் கூறுவேன். விண் (ETHER) என்பது ஒரு கணத்தில் எத்த னையோ தடவை உலகைச் சுற்றி வந்து விடுமாம். அதனை உன்னாலும் என்னாலும் கண்ணால் பார்க்க இயலவில்லை என்ப தற்காக அப்படி இல்லவே இல்லை என்று சாதிக்க இயலுமா? ரேடியோவும் டெலிவிஷனும் அந்த அடிப்படை உண்மை யின் காரணமாக எழுந்த பொறிகள் தாமே. சரி, அது போகட்டும். ஈன்ஸ்டீனின் ரிலேட்டிவிடி தத்துவத்தைப் படித் துப்பார். அதனை நான் எத்தனையோ தடவை படித்த போதி

னும் அதனை என்னால் ஒழுங்காக விளங்கிக் கொள்ள இயல வில்லை. அதனை ஒழுங்காக விளங்கிக் கொண்டவர்கள் உல கில் ஏழு அல்லது எட்டுப்பேர்தாம் இருப்பர் என்று கூறப்படு கிறது. மனித அறிவிற்கே எட்டாதிருந்த அந்தப் புதுத் தத் துவத்தைக் கண்டு பிடித்த அவரால் கூட அதனைப் பிறருக் குத் தெளிவாக எடுத்துரைக்க இயலவில்லை. ஈன்ஸ்டீனுக்கு ஒரு சீமாட்டி விருந்து வைத்தாள். அதற்குப் பிரமுகர்கள் பலரும் வந்திருந்தனர். விருந்து முடிந்ததும் எல்லாரும் மகிழ் வுடன் உரையாடிக் கொண்டிருக்குங்கால் அந்தச் சீமாட்டி ஈன்ஸ்டீனைப் பார்த்து அவருடைய ரிலேட்டிவிடி தத்துவத் தைத் தனக்கு விளக்குமாறு கூறினாள். உடனே ஈன்ஸ்டீன் சிரித்துக்கொண்டு அதற்குப் பதிலாக நான் உங்களுக்கு ஒரு கதை கூறுகின்றேன் என்றார். 'சரி, என்றாள் அந்தச் சீமாட்டி. அப்பொழுது ஈன்ஸ்டீன் சொன்னார்: 'நான் ஒரு தடவை பிறவிக் குருடன் ஒருவனுடன் உரையாடிக்கொண் டிருக்கும் பொழுது எனக்குப் பால் வேண்டும் என்றேன். அப் பொழுது அந்தக் குருடன் என்னை நோக்கி பால், என்றால் என்ன, என்றான். அது வெள்ளை நிறத் திரவப் பொருள் என்றேன். அதற்கு அவன் திரவப் பொருள் என்றால் என்ன வென்பதை அறிவேன். ஆனால் வெள்ளை என்றால் என்ன, என்று வினவினான். அதற்கு நான் அன்னப்பறவையின் இறக் கைகளின் நிறம் என்றேன். அப்படியா! இறக்கைகள் என் றால் என்னவென்று எனக்குத் தெரியும். ஆனால், அன்னப் பறவை என்றால் என்ன என்றான். அதற்கு நான் வளைந்த கழுத்துடைய பறவை என்றேன். கழுத்து என்றால் எனக்குத் தெரியும். ஆனால், வளைவு என்றால் என்ன என்று வினவினான். உடனே நான் அவனுடைய கையைப் பிடித்து வளைத்துக் காண்பித்தேன். அவன் என்னை நோக்கி அப்படியா? இப் பொழுது பால் என்றால் என்னவென்பதை நான் அறிந்து கொண்டேன் என்று மகிழ்ச்சியுடன் பெருங்குரல் எழுப்பிக் கூறினான். நான் ரிலேட்டிவிடி தத்துவத்தைப் பற்றி உங்க ளுக்கு விளக்க முனைந்தால் அதே போன்று ஆகிவிடும் என்று அஞ்சுகின்றேன் என்றார். இதைக் கேட்டதும் வந்திருந்த விருந்தினர்கள் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தார்க ளாம். ஆனால், அந்த ரிலேட்டிவிடி தத்துவத்தைக் கண்டு பிடித்த அவராலேயே அதனை விளக்க இயலாமல் இருக்கிறது

என்பதற்காக உனக்கும் எனக்கும் அது விளங்காமல் இருக்கின்றது என்பதற்காக அது உண்மையன்று, அதனை நம்ப இயலாது என்று நாம் கூற இயலுமா? ஹிரோஷிமாவிலும் நாகசாகியிலும் வெடித்த அணுகுண்டுகளின் அணு அந்த ரிலேட்டிவிடி தத்துவம் தான். ரிலேட்டிவிடி தத்துவத்தை ஈன்ஸ்டீன் கண்டுபிடித்திராவிட்டால் அணுகுண்டு உற்பத்தி செய்யப்பட்டே இராது.

இவற்றைப் பற்றிச் சிந்தித்து அடுத்த மடலில் மேற்கொண்டும் எழுதுகின்றேன். இப்பொழுது எனக்கு உடல் நிலை சரியாக இல்லாததால் என் மனம் எழுத விரும்பினாலும் உடல் அதற்கு இடங்கொடுக்கவில்லை.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்

11

அன்புள்ள அருட் செம்மல்!

உன் மடல் கிடைத்தது. உன்னை இதுகாறும் நான் ஓர் அறிவாளி என்றே எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் நீ எழுதி இருக்கும் இந்த மடலானது என்னுடைய இந்தக் கருத்தை மாற்றிக் கொள்ளுமாறு என்னைக் கட்டாயப் படுத்தி விட்டது. மூட நம்பிக்கையின் இருப்பிடமாக நீ இருப்பதைக்கண்டு நான் பெரிதும் வருந்துகின்றேன். நீ எவ் வாறு இப்படி ஆனாய் என்பது எனக்குப் புரியாத புதிராய் இருக்கிறது. சிலர் தங்களின் தாய் தந்தையர், ஆசிரியர், உறவினர் ஆகியோர் நம்பும் எல்லாவற்றையும் நம்பும் இயல் புடையவர்களாக இருக்கின்றனர். தங்களின் கொள்கை களைத் தங்களின் மூதாதையரிடமிருந்து பரம்பரையாய்ப் பெற்று அந்தக் கொள்கைகளுக்குத் தாங்கள் வாரிசாய்ப் பிறந்ததனால் தங்களின் சொத்துக்களைப் பாதுகாப்பது போன்று பாதுகாக்கின்றார்கள். அவற்றைக் குறை சொல்ல அவர்கள் எவரையும் அனுமதிப்பதில்லை. அப்படியே நீயும் இந்த மூடக் கொள்கைகளையும் மூட நம்பிக்கைகளையும் பெற்று விட்டாயோ என்று நான் அஞ்சுகின்றேன். இந்த அபத்தங்களை (nonsense) இனிமேல் விட்டுவிடு. இதைப் பற்றி மேலும் எழுதுவதாய்க் கூறியுள்ளாய். தயை கூர்ந்து உன்னுடைய மூடக் கொள்கைகளை என்னுடைய மூளையிலும் திணிக்க வேண்டாம் என்று உன்னைப் பெரிதும் வேண்டிக் கொள்கிறேன்.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்.

# 12

அன்புள்ள அறிவண்ணல்!

உன்னுடைய காரசாரமான கடிதம் கிடைத்தது. இம் மாதிரியான எத்தனையோ அனுபவங்களை என்வாணாளில் பெற்றுள்ள எனக்கு உன்னுடைய கடிதம் சினத்தை அல்ல, சிரிப்பைத்தான் உண்டுபண்ணியது. உன் கடிதம் வரும் பொழுது நண்பர் இளவழகனாரும் என் இல்லம் வந்திருந் தார். நான் உன் கடிதத்தைப் பிரித்துப் பார்த்து விட்டுச் சிரித்ததும் அவர் என்னைப் பார்த்து 'என்ன சிரிக்கின்றீர்கள்? தங்களின் இன்பத்தில் நானும் பங்கு கொள்ளக்கூடாதா?' என்றார். உடனே நான் அவரை நோக்கி, 'சொன் னால் அனுபவிக்க இயலாது. படித்து அனுபவியுங்கள்' என்று கூறி உனக்கும் எனக்கும் இடையே நிகழ்ந்து வரும் கடிதப் போக்குவரத்தின் கட்டை அவர்முன் கொண்டு வந்து போட்டேன். அவரும் அதனை முழுவதும் படித்து விட்டுச் சிரித்தார். உன்னுடைய அனுமதியின்றி நான் அவருக்கு நம்முடைய கடிதப் போக்குவரத்தின் கட் டைக் காட்டியதற்காக நீ என்னை மன்னிப்பாய் என்று எண்ணுகின்றேன். அதன்பின் நாங்களிருவரும் நீ எங் களுக்குச் சிரிப்பு விருந்து நல்கியதற்காக உனக்கு நன்றி செலுத்தினோம். அதன்பின் எங்களின் பேச்சு சிரிப்பு பற்றித் திரும்பியது. சிரிப்புப் பற்றிய தத்துவங்களை நானும் அவரும் சற்றுநேரம் சிரித்துக்கொண்டே பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது அவர் பல விகடக் கதைகளைக் கூறினார். அவற் றைக் கேட்டுச் சிரித்து எனக்கும் வயிறு புண்ணாகிவிட்டது. அவர் கூறிய கதைகளில் ஒன்று கலீபா ஹாரூன் அர் ரஷீதின் அரசசபையில் விகடகவியாகிய இருந்த அபூநவாஸைப் பற்றிய தாகும். எவ்வாறு தம் வாணாள் முழுவதும் விகடகவியாய்

இருந்த அபூநவாஸ் தம் இறப்புப் படுக்கையிலும் ஒரு விகட கவியாக இருந்தார் என்பதற்கு ஒரு சான்று கூறினர். அதுவே நண்பர் இளவழகனர் கூறிய விகடக் கதைகளின் மணி மகுடம் போன்றிருந்தது. அது என்னவென்ருல் அபூ நவாஸ் இறப்புப் படுக்கையில் கிடக்கும் பொழுது ஒருவர் அபூநவாஸை அணுகித் 'தங்கள் இறந்துபோன என் தந்தையை மறுமையில் சந்திப்பீர்களாயின் அவருக்கு என் வணக்கத்தைத் தெரிவியுங்கள்' என்ருர். உடனே அபூ நவாஸ் அவரை நோக்கி, 'என்ன இவ்வாறு கூறுகின்றீர்கள்? நான் சுவர்க்கத்திற்கல்லவோ போகிறேன்' என்று சட்டென மறுமொழி கூறிஞராம். இதைக் கேட்டதும் நான் விழுந்து விழுந்து சிரித்தேன். உன் தந்தை நரகத்தில் கிடந்தல்லவோ அவதிப்பட்டுக் கொண்டிருப்பான். நான் அங்கேயா செல்கிறேன் என்று அபூநவாஸ் சொல்லாமற் சொல்லி இருப்பதைக் கண்டு எனக்கு அபூநாவஸ் மீதும் அவருடைய விகட ஆற்றல் மீதும் அளவற்ற மதிப்பு ஏற்பட்டது. வயிறு குலுங்கச் சிரித்ததனல் எனக்குப் பசி ஏற்பட்டது. உடனே என் வேலையாளை அழைத்து ஏதாவது சிற்றுணவு வாங்கி வருமாறுசெய்து நாங்களிருவரும் உண்டோம். இவ்வாறு உன் கடிதமானது எங்களுக்குச் சிரிப்பு உணவு மட்டுமல்லாது சிற்றுணவும் தந்ததற்காக மீண்டும் ஒருமுறை உனக்கு நன்றி செலுத்தினேம் அதன்பின் நண்பர் இளவழகனர் சிரிப்பின் தத்துவங்களைப் பற்றிக் கூறினர். சிரிப்பானது உணவை நன்கு செரிக்க வைக்கின்றதென்றும் அக்காலத்தில் அரசர்கள் விருந்துண்டபின் விகடகவிகளோடு உரையாடிச் சிரித்து மகிழ்ந்ததற்குக் காரணம் கவலைப்பேயை விரட்டியடிப்பதற்காக மட்டுமல்லாது உண்ட உணவை விரைவில் செரிக்கச் செய்வதற்காகவுமாகும் என்றும் அவர் கூறினர். ஆனல், சிரிப்பு ஓர் அளவோடுதான் இருக்கவேண்டுமென்றும் அளவுக்கதிகமான சிரிப்பு தன்னுடன் ஏக்கத்தையும் துன்பத்தையும் அழைத்து வருமென்றும் அவர் எச்சரித்தது என்னுடைய சிரிப்பிற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தது. அவர் இறுதியாக ஒருவனின் சிரிப்பிலே தான் எவ்வளவு ஆழிய பொருள் புதைந்து கிடைக்கிறது. சிரிப்பு என்னும் அளவுகோலை வைத்துக் கொண்டு ஒருவனை முழுவதும் அளந்து நிதானித்து விடலாமே' என்று கார்லைல் கூறிய

பொன் மொழியைக் கூறினார். உடனே நான் ஆம், ஆம், ஒருவனுடைய சிரிப்பே ஒருவனை ஆழ்ந்த அறிவினன் என்றோ, அறிவற்றவன் என்றோ, ஏமாளி என்றோ காட்டி விடத் தானே செய்கிறது என்றேன். அவரும் 'ஆம்' என்று கூறி என்னிடமிருந்து விடை பெற்றுச் சென்றார். இச்செய்திகளை நீயும் தெரிந்திருந்தால் நல்லது என்றே இக்கடிதம் வரைகின்றேன். நீ எழுதியிருந்த கடிதத்திற்குப் பதில் இன்னும் சில நாட்களில் எழுதுகின்றேன். இப்போழுது இரவு மணி பத்தாகிவிட்டது. தூக்கம் கண்ணைக் கொண்டுபோய்ச் செருகுகிறது.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்

குறிப்பு :—நான் இவ்வாறு மனம் விட்டு எழுதி இருப்பதைக் கண்டு நான் உன்னை இழித்து நகையாடியதாகத் தவறாக நீ எண்ணிக் கொள்ளக் கூடாது. அது அன்பின் சிரிப்பேயன்றி அவமதிப்பின் சிரிப்பு அன்று.

## 13

அன்புள்ள அருட்செம்மல்!

உன் மடல் பெற்றேன். நான் எழுதிய கடிதத்திற்கு நீ என்னதான பதில் எழுதி இருப்பாய் என்ற ஆவலுடன் உறையை அவசரம் அவசரமாகக் கிழித்துக் கடிதத்தை எடுத்துப் பார்த்தேன். அந்த அவசரத்தில் உன் கடிதத்தில் ஒரு பகுதி கிழிந்துவிட்டது. அதன்பின் கடிதத்தின் கிழிந்த பகுதிகளை ஒருங்கு சேர்த்துப் பார்க்கும் பொழுது எனக்குப் பெறிதும் ஏமாற்றமாய் இருந்தது. நீ என்னவோ கதை எழுதி இருந்தாய். எனினும், நீயும் நண்பர் இளவழகனும் என் பொருட்டு மகிழ்ச்சியடைத்தீர்கள் என்பதை அறிந்து எனக்கும் ஒரு வகையில் மகிழ்ச்சிதான். உன்னுடைய கடிதத்தைத் தவருகப் பொருள்படுத்திக் கொண்டு அதற்காக மன வருத்த மடையும் போலி நண்பன் என்று நீ என்னை எண்ணிக் கொண்டாயா? உன்னுடைய கடிதத்தை நானும் சிரித்துச் சிரித்துப் படித்தேன். ஒரு முறை படித்து போதாதென்று மறுமுறையும் படித்தேன். அப்பொழுதும் எனக்குச் சிரிப்புச் சிரிப்பாகத்தான் வந்தது. ஆனல் நீ கடிதத்தின் இறுதியில் குறிப்பு என்று எழுதி இருந்ததுதான் எனக்குச் சற்று வருத்தத்தை அளித்தது. நாம் என்ன இன்றைய நேற்றைய நண்பர்களா? இளமையிலிருந்து நாம் ஒருவரை மற்ருெருவர் நன்கு அறிவோம். இளமையில் ஏற்படும் நட்புக்கு நிகராக வேறு எக்காலத்தில் ஏற்படும் நட்பைக் கூறுவது? அது மாசு மறுவற்ற அன்பினல் ஏற்படும் நட்பேயன்றித் தன்னலத்தின் அடிப்படையில் ஏற்படுவதல்லவே. இளமையில் நம அன்பு மாசு மறுவற்றவ்தாகவும் வேகமானதாகவும் இருபதால் அது நம் மனத்தில் நீங்காத முத்திரையைப் பதித்து நட்பின் பிணைப்பை இறுக்கி விடுகிறது. ஆனல், பிற்காலத்

தில் ஏற்படும் நட்போ யாதோ மறைமுகமான உட்கருத்திற்காக ஏற்படுகிறது. எனவே, அது விரைவில் முறிந்து விட ஏதுவாகிறது. எனவே, இளமை நட்பே மேலானது. இங்கிலாந்தின் மன்னனாக இருந்த ஜேம்ஸ் வெளியே செல்லும் பொழுது தன்னுடைய பழைய காலணிகளையே அணிந்து கொண்டு செல்வானாம். அவையே அணிந்த கொள்வதற்கு இலகுவாகவும் நடப்பதற்கு எளிதாகவும் இருக்கின்றனவென்று கூறுவானாம். அதுபோன்று தான் இளமை நண்பர்களும் என்பதுதான் என் கருத்து.

நட்பு என்றால் என்ன? ஒருவனைப் புகழ்ந்து புகழ்ந்து அவனைக் குட்டிச் சுவராக்குவதா? அல்லது அவன் சொல்லுவதற்கெல்லாம் ஆமாப்சாமி என்று தலையை ஆட்டிக்கொண்டிருப்பதா? ஒரு நண்பனிடம் அவனுடைய குறைகளை எடுத்துரைப்பது பெரிய சோதனையான செயல்தான். எனினும், தன் நண்பனிடத்தில் ஒரு மாசைக் கண்டால், அந்த வருத்தமளிக்கும் உண்மையை அவனிடம் அன்பு மொழிகளால் இனிமையாக எடுத்துரைப்பதும் அதனை அவன் காது தாழ்த்தி நன்றியுணர்ச்சியுடன் கேட்டுத் தன்னுடைய தவற்றைத் திருத்திக் கொள்வதும் தாம் உண்மையான நட்பு என்று நான் கூறுவேன். ஆதலின் நண்ப! உன்னுடைய மடலை நான் அணுவத்தனை அளவு கூடத் தவறாகப் பொருள் படுத்திக் கொள்ளவில்லை. என்னவோ கதை சொல்லி பிரச்சினையைத் தட்டிக் கழித்து விடலாமென்று நீ எண்ணிக்கொள்ள வேண்டாம். என்னுடைய முன் மடலுக்கு உன்னிடமிருந்து சரியான பதில் பெறாது நான் உன்னை விடமாட்டேன். ஆதலின் உடனே அதற்குச் சரியான பதில் எழுது.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்.

## 14

அன்புள்ள அறிவண்ணல்!

இன்று மாலை நான் வெளியே உலவச் செல்லும் பொழுது தபால்காரன் உன்னுடைய முடங்கலைக் கொண்டு வந்து நீட்டினான். அதனை வாங்கிப் பிரித்துப் படித்த வண்ணம் சாலை ஓரத்தில் நடந்து சென்றேன். என்னுடைய மடலானது உன்னுடைய ஆத்திரத்தை யெல்லாம் அவித்து உன்னை நிதானத்துடன் பதில் எழுதச் செய்ததற்காக என்னையே நான் பாராட்டிக்கொண்டேன். உன்னுடைய ஆத்திரம் எல்லாம் அடங்கவேண்டும். அதன்பின்தான் நான் என்னுடைய கருத்தை உனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கருதியே நான் முன் மடலில் வேடிக்கை விநோதங்களைக் குறிப்பிட்டிருந்தேன். அது நல்ல பலனளித்தது கண்டு நான் என் மனத்திற்குள்ளே மகிழ்கின்றேன்.

அறிவுக்கு அப்பாற்பட்டுள்ளவற்றை நம்புவது பற்றி நான் கூறின் தற்கால இளைஞர்கள் அதனை அபத்தம் (nonsense) என்றுதான் வெஞ்சினத்துடன் கூறுவார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். அதற்கு நீ விதி விலக்காக இல்லாமலிருப்பது எனக்கு எவ்வித வியப்பையும் அளிக்கவில்லை. ஆனால், எதைக் கூறினாலும் அபத்தம், அபத்தம் என்று கூக்குரலிடுகின்றீர்களே அபத்தம் என்றால் என்ன என்று அவர்களை வினவின் அவர்கள் சடாரென முட்டாள் தனமானது என்று கூறுவார்கள். ஆனால், அபத்தம் என்றால் உண்மையின் நிழல் என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். அபத்தம் என்றால் என்னவென்று ஹூடிப்ராஸ் என்ற அறிஞன் பின்வருமாறு ஒரு விளக்கம் கூறுகின்றான், கேள்.

உண்மையென்றே அல்லது பொய்யென்றே கூற இயலாத ஒன்றுதான் அபத்தம் எனப்படும். அதனை நாம் ஏற்றுக் கொள்ளவும் இயலாது; மறுக்கவும் இயலாது. அது ஒன்றை வலியுறுத்திக் கூறினுல் அந்தக் கூற்றை நாம் உண்மையென்று பற்றிப் பிடிக்கவும் இயலாது அது ஒன்றை மறுத்துக் கூறினுல் அந்தக் கூற்றை நாம் பொய் என்று மறுத்துக் கூறவும் இயலாது.'

அதே போன்று தான் மூட நம்பிக்கையும் என்பது என் கருத்து. எனவே தான் ரூஸோவும் மூட நம்பிக்கையைப் பற்றிக் குறிப்பிடுங்கால் 'மூட நம்பிக்கையானது சமுகத்தில் பெரும் குழப்பத்தை உண்டுபண்ணிய போதினும் அதனை நாம் அளவுக்கதிகமாகக் கண்டிக்கக் கூடாது என்று எண்ணுகிறேன்' என்று கூறுகின்ருன். இவ்வாறு அவன் கூறுவதற்குக் காரணம் மூட நம்பிக்கை சில பொழுது நல்ல பலன்களையும் நல்குவதனுலேயன்றி வேறில்லை.

இவ்வாறு நான் கூறுவதற்காக மூட நம்பிக்கையை நான் ஆதரிப்பதாக நீ எண்ணிக் கொள்ளக் கூடாது. மூட நம்பிக்கையினுல் உலகில் ஏற்பட்டுள்ள அழிவு சிறிதன்று என்பதை நான் அறிவேன். ஆனுல், தான் பிரெஞ்சு நாட்டுக்கு நல்வாழ்வளிப்பதற்காகக் கடவுளினுல் அனுப்பப்பட்டுள்ளதாக ஜோன் ஆப் ஆர்க் கொண்ட மூட நம்பிக்கை எவ்வாறு நல்ல பலனையளித்தது என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும், டாக்டர்களால் கைவிடப்பட்ட நோயாளி தான் பிழைத்தெழுவேன் என்று கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையினுல் பிழைத்தெழுந்து நீண்ட நாள் வாழ்வதையும் நீயும் நானும் பார்த்திருக்கிருேம். இவற்றை நாம் எவ்வாறு கூறுவது? நல்லது என்ரு, கெட்டது என்ரு? நீயே கூறு, இவ்வித நம்பிக்கையையே நெப்போலியனும் கூறுகின்ருன். கடக்க முடியாது என்று கருதப்பட்ட ஆல்ப்ஸ் மலையையும் கடந்தவனல்லவா அவன்.

ஆதலின், நம் அறிவுக்கு எட்டாத நல்ல செயல்களில் நல்லன நினைந்து நம்பிக்கையோடிருப்பது தீயன நினைத்து அவ நம்பிக்கை கொள்வதை விட எவ்வளவோ மேலானது.

ஏனெனில் நம் அறிவுக்கும் சிந்தனைக்கும் ஓரளவு எல்லைதான் உண்டு. அதற்குமேல் நாம் அதிகமாகச் சிந்திப்போமாயின் எல்லாம் குழப்பமாகிவிடும்.

தீமீது நடந்ததால் கால் வெந்துவிடும் என்பது விஞ்ஞான உண்மை. ஆனால், சிலர் பக்தி மேலீட்டால் தீக்குழியில் நடந்து செல்கின்றார்களே. அவர்களின் கால்களை அந்தத் தீயால் யாதொன்றும் செய்ய இயலவில்லையே. இதற்கு நீ என்ன சொல்கின்றாய்? நம் மக்கள் இவ்வாறு செய்வதைக் கண்ட ஒரு மேனாட்டான் தானும் தன் காலணி, கால் உறை ஆகியவற்றையெல்லாம் கழற்றி விட்டு வெறுங்காலுடன் தீக்குழிமீது நடந்து சென்றான். குழியின் கால்பகுதியைக் கூட அவனால் கடக்க இயல வில்லை. சுருண்டு அவ்விடத்தி லேயே வீழ்ந்து விட்டான். உடனே பக்கத்திலிருந்தவர்கள் பாய்ந்து அவனை வாரி எடுத்துச் சிகிச்சைக்காக மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனர். இதைப் பற்றி நீ என்ன சொல்கின்றாய்? தீ மீது அச்சமின்றி நடப்பது ஒரு மூட பக்தி தான். அந்த மூடபக்தி, தீ சுடாது என்று ஒருவன் கொள்ளும் மூட நம்பிக்கை தீயின் சுடும் தன்மையையும் போக்கடித்து விடுகின்ற புதுமையைப்பார். அவ்விதமானால் நம் அறிவுக்கு அப்பாற்பட்டவற்றில் அவநம்பிக்கையுடன் செயலாற்றுவதை விட நம்பிக்கையுடன் செயலாற்றுவது எத்துணை நற்பலனை நல்குகின்றது என்பதைப்பார்.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்

## 15

அன்புள்ள அருட் செம்மல்!

நம் அறிவுக்கு அப்பாற்பட்டுள்ளவை பற்றி நாம் அவ நம்பிக்கை கொள்வதைவிட நம்பிக்கை கொள்வது நல்லது என்று நீ எழுதியுள்ளாய். அவை பற்றி அதிக சிந்தித்தால் ஒரே குழப்ப மயமாகிவிடும் என்றும் எழுதியுள்ளாய். நீ கூறு வதை என்னுல் முற்றிலும் நம்ப இயலாதிருந்த போதினும் அதனை என்னுல் மறுத்துக் கூற இயலவில்லை. ஏனெனில் நான் கூடத்தான் மக்கள் தீக்குழியில் நடந்து செல்வதைப் பார்த்துள்ளேன். ஆனுல், என்னவோ என் மனம்மட்டும் என் அறிவுக்கு எட்டாதவற்றை உண்மையென ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. ஆனுல் அதற்காக அவற்றை உண்மை யென நம்பி மூட நம்பிக்கையாளனுக இருப்பதைவிட அவற்றைக் ஐயக் கண்கொண்டு நோக்கி, பொய்யென்று கூறி, அறிவாளன் போன்று நடிக்கிறுர்களே சிலர் அவர்களில் ஒருவனுக நீ என்னையும் கருதிக்கொள்ள வேண்டாம் என்று உன்னை நான் கேட்டுகொள்கிறேன். நான் உன்னை உண்மை நண்பனுகக் கருதுவதனுல்தான் என் மனத்திலுள்ளவற்றை ஒளிவு மறைவின்றிக் கூறுகிறேன். அறிவுக்கு எட்டாதவற்றை மெய்யென்று நம்பாத போதினும், பொய்யென்று கருதாது இருந்துவிட்டுப் போகலாம் என்றுகூட எண்ணுகின்றேன். ஆனுல் அதற்காக என்னை மத பக்தி அற்றவன் என்ருே, இறை வனின் உள்ளமையில் அவநம்பிக்கை உள்ளவன் என்ருே நீ கருதிக்கொள்ள வேண்டாம்.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

அன்புள்ள அறிவண்ணல்!

உன் முடங்கல் வந்தது. பார்த்தேன். அதனைப் படித்து முடித்ததும் எனக்கு ஒரே வியப்பு மயமாக இருந்தது. உன் அறிவுக்கு எட்டாதவற்றை உண்மையென நம்பாவிட்டாலும் பொய்யென்று கருதாது இருந்துவிட்டுப் போக எண்ணுவதாகவும் அதற்காக நான் உன்னை மதபக்தி அற்றவன் என்றோ அல்லது இறைவனின் உள்ளமையில் அவநம்பிக்கை உள்ளவனென்றோ கருதிக்கொள்ளக்கூடாது என்றும் எழுதியுள்ளாய். இது எவ்விதம் சாலும் என்றுதான் என்னால் விளங்கிக்கொள்ள இயலவில்லை. ஏனெனில், தங்களின் அறிவுக்கு எட்டாத மறைவாக உள்ளவைபற்றி நம்பிக்கை கொள்பவர்கள்தாமே மத பக்தியுள்ளவர்கள். அவர்கள் தாமே இறைவனின் உள்ளமையில் நம்பிக்கையுள்ளவர்கள். ஆனால் நீ கூறுவதைப் பார்த்தால் பூவும் வேண்டும், பழமும் வேண்டும் என்பது போலல்லவோ இருக்கின்றது.

நீ எழுதியிருப்பதைக் கண்டு உலகில் அறிவாளிகள் என்று கருதப்படுபவர்களின் நூல்களைப் படித்ததனால் அவர்களின் வாடை உனக்கும் ஏற்பட்டுவிட்டதோ என்றுதான் நான் அஞ்சுகிறேன். எண்ணச் சுதந்திரம் என்று கூறிக்கொண்டு தங்களின் எண்ணங்களைக் கட்டவிழ்த்துவிடும் அந்த அறிவாளிகள் உலகிலுள்ள எல்லாவற்றையும் பற்றி ஐயுறுவார்கள். ஆனால், தங்களின் அந்த எண்ணச் சுதந்திரம் ஒழுங்கான அடிப்படைமீது எழுப்பப்பட்டுள்ளதா என்பது பற்றி ஐயுறமாட்டார்கள். எண்ணச் சுதந்திரம் எண்ணச் சுதந்திரம் என்று பிதற்றித் திரியும் சில போலி மனிதர்களோ உண்மையில் எதனையும் ஆழ்ந்து எண்ணுவதே இல்லை. ஆனால்

அறிஞர்கள் என்று கருதப்படும் சிலரோ மனிதனுடைய சிந் தனைக்கு விதிக்கப்பட்டுள்ள எல்லையைக் கடந்து சிந்தனை செய்து அறிவு விளக்கத்தைப் பெறுவதற்குப் பதிலாக இருட் குகையில் போய் மாட்டிக்கொண்டு இழிந்த மனிதனும் வெளியில் கூற நாணும் கருத்துக்களை வெளியிடுகின்றார்கள். அதனைத் தங்களின் ஆராய்ச்சியின் கனி என்றும் கூறுகின்றா கள். பிளேட்டோ, பெட்ரண்ட் ரஸ்ஸல் ஆகியோரை உல கம் அறிவு மேதைகள் என்று ஏற்றுகிறது. ஆனால், அவர் களோ, 'பெண்கள் பொதுச் சொத்தாக இருக்கவேண்டும்' என்று கூறுகிறார்கள். இக் கருத்தை எந்த இழிந்த மனிதனும் கூறுவானா என்று கேட்கின்றேன். அவ்விதமானால் குடும்பம் என்பதும் ஏது? தன் மனைவி, தன் மகன், தன் மகள் என்னும் அன்பின் பிணைப்பும் ஏது? விலங்குகளின் வாழ்வு போன்றல் லவோ மனிதர்களின் வாழ்வும் ஆகிவிடும் என்பது அவர்களின் ஆராய்ச்சிக்கு எட்டாதது ஏனோ என்றுதான் எனக்கு விளங்க வில்லை. ஆதலின் ஒருவன் எவ்வளவுதான் அறிஞனாக இருந்த போதினும் அவனும் ஒரு வரம்புக்கு உட்பட்டுச் சிந்தனை செய் தால்தான் அவனால் சிறந்த கருத்துக்களை வெளியிட இயலுமே யன்றி மனம்போன போக்கில் சிந்தித்தால் இருட் படுகுழி யில் விழ வேண்டியே ஏற்பட்டுவிடும்.

ஒருவன் உலகிற்கே பேரரசனாய் இருக்கின்றான் என்று வைத்துக்கொள். அப்படி இருந்த போதினும் அவனுக்கும் சில வரம்புகள் இருக்கின்றன. அவற்றை மீறி அவன் தேவை யற்ற முறையில் மக்களின் உரிமைகளில் தலையிடுவானாயின் முதலாவது சார்லஸ் மன்னனை ஆங்கில மக்கள் தூக்கு மேடை யில் ஏற்றியது போன்று அவனையும் உலக மக்கள் தூக்கி லிடவோ அல்லது துரத்திவிடவோ செய்வார்கள் என்பதில் ஐயமில்லை.

நாம் சுதந்திர இந்தியாவின் மக்கள். நமக்கு இங்கு எல்லா விதமான சுதந்திரங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதற்காகச் சட்டம் என்றும் ஒன்று உண்டு. அதனைச்

செயலாற்ற அரசாங்கம் என்றும் ஒன்று உண்டு என்பதை மறந்துவிட்டு மனம்போன போக்கில் பிறரைத் துன்புறுத்த வும் பிறருக்குத் தீங்கிழைக்கவும் இயலுமா? இடப்பக்கத்தில் காரை ஓட்டிச் செல்ல வேண்டுமென்று சட்டம் இருக்கும் பொழுது ஒருவன் வலப்பக்கம் காரை ஓட்டிச்செல்வானு யின் அதனுல், போக்குவரத்துக்கு எவ்வளவு குந்தகம் ஏற்பட வும் ஆபத்துக்கள் ஏற்படவும் செய்யும். அவ்விதம் செய்யும் ஒருவனை அரசாங்கம் தண்டிக்காது வெறுமனே விடுமா? ஆத லின் சட்ட வரம்பிற்குட்பட்டுச் செயலாற்றுவதுதான் சுதந்திரம்; சட்ட வரம்பிற்கு அப்பாற்பட்டுச் செயலாற்று வது ஒருபோதும் சுதந்திரமாகாது. அவ்விதம் ஒவ்வொரு வரும் செய்யின் நாட்டில் காட்டுமிராண்டி அரசாங்கமே நடக்கும். ஒருவருக்குமே சுதந்திரமே இல்லாதொழிந்துவிடும். ஆதலின் ஒருவனுடைய சுதந்திரம் எப்பொழுது தன்னு டைய அண்டை வீட்டுக்காரனுக்குத் துன்பத்தை இழைக் கின்றதோ அப்பொழுதே அவனுடைய சுதந்திரத்திற்கும் முடிவேற்பட்டுவிடுகிறது.

எனவே, உண்மையான சுதந்திரம் என்ருல் சட்ட வரம் பிற்குட்பட்டுச் செயலாற்றுவதுதான். நாம் யாராக இருக்க வேண்டுமோ அதை நமக்கு நல்கக் கூடியதும் நாம் எதைப் பெற்றிருக்க வேண்டுமோ அதைப் பெற்றிருக்க நமக்கு உத வக் கூடியதுமே உண்மையான சுதந்திரம். ஆதலின் மக்களின் சுதந்திரம் என்ருல் அவர்கள் தங்களுக்கே தாங்கள் செய்து கொண்ட சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பதுதான். தனி மனிதனின் சுதந்திரம் என்ருல் இறைவனுடையவும் நாட்டி னுடையவும் சட்ட வரம்புகளுக்கு உட்பட்டுத் தன்னுடைய நேரத்துடையவும் செயல்களுடையவும் தலைவனுய் இருப்பது தான்.

உண்மை இவ்வாறிருக்கும்பொழுது மனம்போனபடி யெல்லாம் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவது எவ்வளவு பெரும் பேதமை என்று பார். அது மனிதனை எத்தகைய தவ றுப் படுகுழியில் வீழ்த்திவிடும் என்பதையும் சிந்தித்துப்பார். ஆதலின் நம்முடைய அறிவுக்கு எட்டாதவை பற்றி வீணே நம் மனத்தைக் குழப்பிக் கொள்வதற்குப் பதிலாக அவற்றைப்

பற்றி நம்பிக்கையோடிருப்பது எவ்வளவோ நற்பலன்களை நல்கும். அதனால் ஆதாயமேயன்றி இழப்பில்லை. இதனை நான் சொல்வதற்காக நீ ஏற்றுக்கொள்ள வேண்டாம். அவ்விதம் நீ கண்மூடித்தனமாய் ஏற்றுக்கொள்வதை நான் விரும்பவும் இல்லை, நீயும் சிந்தித்துப்பார். ஏற்றவையாய் இருந்தால் கொள். இல்லையேல் தள்ளிவிடு.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்

பின் குறிப்பு:—உலகப் பெரும் பேரறிஞராகிய பெட்ரண்ட் ரஸ்ஸலின் மனைவிக்கே அவர் பெண்களைப் பற்றிக் கொண்டுள்ள கருத்து அருவருப்பை நல்கி அவள்—அவரல்ல—அவரை மண விடுதலை செய்து விட்டாள் என்பதும் எனக்கு இப்பொழுது நினைவு வருகிறது. இதனை நீயும் சிந்தித்துப் பார்.

17

அன்புள்ள அருட் செம்மல்!

உன் கடிதம் கண்டேன். அதிலே நீ என்னை மட்டுமல்லாது உலகப் பெரும் அறிஞர்களான பிளேட்டோ, பெட்ரண்ட் ரஸ்ஸல் ஆகியோர்களையும் குறை கூறி எழுதியுள்ளாய். அவர்கள் கூறிய ஒரு தவறான வலுவற்ற கூற்றைப்பற்றிப் பிடித்துக்கொண்டு உன்னுடைய குறைகூறுதலை வன்மையானதாகவும் சரியானதாகவும் தோன்றுமாறு செய்ய நீ முயன்றிருப்பதைக் கண்டு நான் ஒரு வகையில் மகிழ்வுறத்தான் செய்கிறேன். ஆனால் ஒருவனுடைய கருத்துக்களைக் குறைகூறுவது எளிது; ஆனால், அவற்றைப் பாராட்டுவதுதான் சிரமமானது என்பதை நீ உணரவேண்டும். உலகிற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் சிறந்த அரசியல் தத்துவங்களை அருளிய பிளேட்டோவின் அறிவுத்திறமையை நாம் பாராட்ட வேண்டுமேயன்றி அவர் கூறியவற்றிலுள்ள தவற்றினை எடுத்துக்கொண்டு வாதாடுவது ஒருபோதும் பெருந்தன்மையாகாது என்று நான் எண்ணுகிறேன். பெட்ரண்ட் ரஸ்ஸல் இறைவன் பற்றியும் பெண்கள் பற்றியும் கூறியுள்ள கருத்துக்களைப்பற்றிப் பிடித்துக்கொண்டு அவருடைய அறிவு நுணுக்கத்தையும் ஆராய்ச்சித் திறனையும் நீயும் நானும் குறை கூற முடியுமா? நீயும் நானும் அவரைவிட மேலான அறிவு படைத்தவர்களாயிருந்தால் அவ்விதம் செய்வது ஒருவகையில் பொருந்தும் என்று கூறலாம். அவ்விதமானால் உன்னை அறிஞன் என்று யாராவது கூறுகின்றார்களா? கணிதம் பற்றிய அவருடைய ஆராய்ச்சி நூலானது உலகிலுள்ள நூறு பெரும் நூல்களில் ஒன்றென மதிக்கப்படுகிறது. அவ்விதப் பெருநூல் ஒன்றை நீ எழுதியுள்ளாயா? சொல். அவ்விதமானால் நீ கூறுவதை முழுக்க முழுக்க நான் ஒப்புக்கொள்

கிறேன். அவர் கணிதம்பற்றி எழுதியுள்ள ஆராய்ச்சி நூலை நானும் ஆவலுடன் வாங்கிப் படித்துப் பார்த்தேன். அதனை இத்துணைப் பெருமையுடன் கூறுகின்றார்களே, அதில் அவர் என்னதான் எழுதியுள்ளார் என்பதைப் பார்ப்போம் என்று. ஆனால் அதனைப் படித்துப் பார்க்கும்போழுது அதில் எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அப்படியானால் அவருடைய அறிவுடன் என்னுடைய அறிவை எப்படி ஒப்பிடுவது? அவர் கண்டுபிடித்த உண்மைகளை என்னால் விளங்கிக்கொள்ளவே இயலவில்லை! எவ்வளவோ சிரமத்துடன் அவர் காட்டை வெட்டிச் சாய்த்துப் பாதை உண்டுபண்ணித் தந்துள்ளார். அதில் அடியெடுத்துவைத்து நடந்து செல்ல எனக்குத் தெரியவில்லை. அவ்விதமானால் என்னுடைய ஆற்றலை நான் எவ்வாறு கூறுவது? இப்படி இருக்கும்பொழுது அவர்களை நீ எள்ளி நகையாட முனைந்துவிட்டாய்! அவ்விதமானால் மனிதர்கள் ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுத்தான் சிந்திக்க வேண்டுமா? அவர்கள் தங்களின் எண்ணங்களைக் கட்டவிழ்த்துவிட்டுக் கற்பனைவானில் சிறகடித்துப் பறக்கக் கூடாதா? நீ கூறுவதை மக்கள் பின்பற்றி இருப்பார்களாயின் உலக நாகரிகமே தோன்றி இருக்காது. விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிகழ்ந்து புதுக்கண்டுபிடிப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டும் இரா. உலகம் இத்துணை அளவு முன்னேறி இருக்கவும் செய்யாது.

நம் அறிவுக்கு எட்டாதவற்றைப்பற்றி மனத்தை குழப்பிக்கொள்ளக் கூடாது என்று கூறுகின்றாய். உன்னுடைய இக்கூற்று எனக்குப் பெரும் வியப்பை நல்கியது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், ஆராய்ச்சி முடிவுகள் ஆகியவை யெல்லாம் முதலில் மனிதனுடைய அறிவுக்கு எட்டாமல்தானே இருந்தன. அப்படியானால் அவை தன்னுடைய அறிவுக்கு எட்டாதவை என்று கூறி அவைபற்றி யாதொன்றும் சிந்தியாதிருந்தால் உலகம் இத்துணை அளவு முன்னேறி இருக்க இயலுமா என்று கேட்கிறேன்.

விஞ்ஞான முடிவுகள் என்றால் என்ன? அறிவுப் பூமியில் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நாடுகளைக் கண்டுபிடிப்பது தான். சுருங்கக் கூறின் உண்மையைத் தேடித்திரிந்து கண்டு

பிடிப்பதுதான். கீழ்த்திசையில் கதிரவன் தோன்றியதும் எவ்வாறு இருட்படலங்கள் ஓடி மறைகின்றனவோ அவ்வாறே அறிவுக் கண்டுபிடிப்புக்கள் தோன்றியதும் மூட நம்பிக்கைகள் வெருண்டோடுகின்றன. நூதன விஞ்ஞான உண்மைகள் பாமரர்களுக்குத் தெரியவந்ததும் அவை தங்களின் திருமறைகளில் கூறப்பட்டிருப்பதற்கு நேர் முரணானவை என்று கூறுகின்றார்கள். அதன்பின் சிலகாலம் சென்றதும் அவை ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகள்தாம் என்று கூறுகின்றார்கள. அதன்பின் சிலகாலம் சென்றதும் அவற்றைத் தாங்கள் எப்பொழுதும் உண்மையெனத்தானே நம்பி வருகிறோம் என்று கூறுகின்றார்கள். இஃதென்ன வேடிக்கை!

உலக நிலை இவ்வாறிருக்கும்பொழுது நீ என்னவோ போலித் தத்துவங்களை என் மூளையில் கொண்டுவந்து திணிக்க முற்படுகிறாய். அறிவுக்கு எட்டாதவற்றை மெய் என்று கருதி மூட நம்பிக்கை கொள்வதைவிட பொய்யென்று கருதாமல் இருந்துவிட்டுப் போகலாம் என்று நான் என்னுடைய முன் மடலில் குறிப்பிட்டிருந்தேன். என்னுடைய அந்தக் கூற்றை நான் வாபஸ் பெற்றுக்கொண்டு அறிவுக்கு எட்டாதவற்றைப் பொய்யென்று கருதி ஒவ்வொருவரும் உண்மையைக் கண்டுபிடிக்க முனையவேண்டும் என்று கூறலாமோ என்றுகூட எனக்கு இப்பொழுதுபடுகிறது.

அன்புள்ள நண்பன்

அறிவண்ணல்.

## 18

அன்புள்ள அறிவண்ணல்!

நீ மனிதனின் அறிவுக்கு அளவற்ற மதிப்புக் கொடுத்து இறைவனின் அருளுக்கு மதிப்புக் கொடுக்காது—இல்லை—அதனை அறியாது எழுதியுள்ளாய். உன்னுடைய இந்த அறியாமைக்காக நான் வருந்துகின்றேன். படைப்புகளிலெல்லாம் மேலான படைப்பு மனிதனாக இருந்த போதினும் இறைவன் மனிதனுக்கு மகத்தான அறிவை நல்கி இருந்த போதினும் அதனை அவனுடைய அளப்பரும் அறிவுடன் ஒப்பிட்டுப் பார்ப்பின் அணுவினும் சிறியதாக ஒரு பொருள் இருக்குமாயின் அதனைக்கூட அதற்கு உவமையாகக் கூற இயலாது.

இறைவன் படைத்துள்ள இந்த அண்டகோளமானது எப்படிப்பட்டது என்பதை நீ அறிவாயா? வில்ஸன் மலை மீதிருந்து நூறு அங்குல அகலமுள்ள தொலைநோக்கிகொண்டு வான நூல் வல்லுனர்கள் வானத்தை ஆய்ந்து கொண்டுள்ளார்கள். இன்னும் அவர்களால் இந்த அண்ட கோளத்தை அணுவத்தனைகூட ஆராய இயலவில்லை. உலகிலுள்ள மண்ணை எண்ணிய போதினும் வானிலே உள்ள விண் மீன்களின் எண்ணிக்கையை எண்ண இயலாதென்றும் தங்களின் தொலை நோக்கி மூலம் இருபது லட்சம் விண்மீன் தொகுதிகளைக்காண இயலுமென்றும் அந்த ஒவ்வொரு விண்மீன் தொகுதியிலும் கோடிக்கணக்கான விண்மீன்கள் அடங்கி இருக்கின்றனவென்றும் அவற்றிற்கப்பால் கோடானுகோடி விண்மீன்கள் இருக்கலாமென்றும் அவற்றைத் தங்களின் தொலை நோக்கியால் பார்க்க இயலவில்லை என்றும் அந்த விண்மீன்களிலிருந்து வரும் வெளிச்சம் உலகத்தை அடைய ஐந்து கோடி ஆண்டுகள் ஆகுமென்றும் வானிலுள்ள பெரிய விண்மீன் ஒன்றில் நாம் வாழும் பூமியைப் போன்று

கோடானு கோடிப் பூமிகளைக் கொண்டுபோய் வைத்த போதினும் மேற்கொண்டும் இடம் இருக்குமென்றும் அப்படிப்பட்ட பெரு விண்மீன்கள் எண்ணமுடியாத அளவு இருக்கின்றன என்றும் கூறுகிறார்கள்.

இவற்றைக் கேட்டதும் 'ஆ! அப்படியா' என்று வியப்பால் நீ வாயைப் பிளக்கலாம். இவ்வாறு வானநூல் வல்லுனர்கள் கூறுவதற்காக அவற்றை உண்மையென நம்புவாய். ஆனால், அவை பற்றி மதநூல்களில் கூறப்பட்டிருப்பின் பொய். புரட்டு, மூட நம்பிக்கை என்று கூத்தாடுவாய்.

விஞ்ஞானமும் மதமும் ஒன்றுக் கொன்று முரண்பட்டவை என்று சிலர் கூறுவார்கள். அவர்களில் நீயும் ஒருவன் என்று நான் திடமாகக் கூற இயலாத போதினும் அவ்விதம் கூறுபவர்கள் யாராக இருந்தபோதினும் அவர்கள் விஞ்ஞானத்தில் கற்றுக் குட்டிகளாக இருக்க வேண்டும். அல்லது மதம் பற்றி அறிவிலிகளாக இருக்க வேண்டும் என்றுதான் நான் கூறுவேன்.

விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பனவற்றை எல்லாம் உண்மை என்று நாம் கூறமுடியுமா? முன்னால் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞான உண்மைகளைப் பின்னால் கண்டுபிடிக்கப்படும் விஞ்ஞான உண்மைகள் பொய்யாக்கி விடுகின்றனவே. இப்பொழுது நீயும் நானும் உண்மையெனக் கொண்டிருக்கும் விஞ்ஞான உண்மைகளை வருங்காலத்தில் ஒரு விஞ்ஞானி பொய்யாக்கி விடுவான். நியூட்டனின் தத்துவங்களை ஈன்ஸ்டீனின் ரிலேட்டிவிடி தத்துவம் பொய்யாக்கி விடவில்லையா?

நீயும் நானும், பூமியிலிருந்து ஒரு துண்டு பிளந்து விழுந்தது. அதுதான் சந்திரமண்டலமானது என்று விஞ்ஞானிகள் இதுகாறும் கூறிவந்த கூற்றை உண்மையென நம்பிவந்தோம். ஆனால், இப்பொழுது டாக்டர் ப்ராங்க் பிரஸ் என்ற விஞ்ஞானி அது முற்றிலும் தவறு என்று ஆதாரத்துடன நிரூபிக்கின்றார். அப்படியானால் எதை உண்மையென்று—

எதைப் பொய்யென்று கொள்வது? ஆதலின் விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களை ஓர் அனுமானம் என்று நாம் கொள்ள வேண்டுமேயன்றி அவைதாம் அசைக்க முடியாத உண்மை என்று நாம் கூறமுடியாது. இவ்வாறு நான் மட்டும் கூற வில்லை. பெரும் அறிவியல் அறிஞர் ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸே கூறுகின்றார். 'அறிவு வெளிச்சத்தில் அணுவத்தனை அள வைத்தான் நம்மால் காண இயல்கின்றது. அதுகூட அனுமா னம்தான். விஞ்ஞான விற்பன்னர்கள் தாங்கள் புதுக் கண்டு பிடிப்புக்களைக் கண்டுபிடித்து விட்டதாய்ச் செய்யும் பிரகட னங்களைக் கூட இனிமேல் விட்டொழிக்க வேண்டிவரும். ஏனெனில், அறிவின் ஆறானது மேற்கொண்டும் முன்னே பாய்ந்தோடாது அடிக்கடி வந்த வழியே திரும்பி விடுகிறது' என்று அவர் கூறுகின்றார்.

ஆதலின் நம் அறிவின் எல்லையோ குறுகியதுதான். அதைக்கொண்டு நம்மால் அண்ட கோளங்களையும் அளந்து அறிந்துவிடலாம் என்று எண்ணுவது நம்முடைய அறியா மையைக் காட்டுமேயன்றி நம்முடைய அறிவுடைமையைக் காட்டாது.

உலகப் புதுமைகளில் பல நம்முடைய அறிவுக்கே எட் டாமல் இருக்கின்றன. சான்றாக, வானிலிருந்து கற்கள் விழு வதைக் கூறலாம். வானிலிருந்து கற்கள் விழுகின்றன என்று நான் கூறுவதைக் கேட்டதும் இஃதென்ன பொய் என்று நீ கூறலாம். நீ மட்டுமல்ல, அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜெப்பர்ஸன் கூட அதைப் பொய்யென்றே கூறினார். ஆனால், அதனை மெய்யென்று நிரூபிக்கப் பிரிட்டிஷ் பொருட் காட்சிசாலையில் அவ்விதக் கற்கள் அறுநூறு சேகரித்து வைக் கப்பட்டிருக்கின்றன. அவற்றில் முந்நூற்று இருபத்தைந்து கற்கள் பூமியில் விழும்பொழுது கண்ணால் கண்டு எடுத்துப் பாதுகாக்கப்பட்டவையாகும். இவ்விதம் விழுந்த கற்களில் இருநூற்று அறுபது இராத்தல் கனமுள்ள கற்கள் கூட இருக் கின்றன. இவை இதுவரை அறிவியல் அறிஞர்களின் அறி வைக் கலக்கிக் கொண்டுதான் இருக்கின்றன. எனினும்,

இதுகாறும் அவைபற்றி யாதொரு தெளிவான உண்மையும் கண்டுபிடிக்கப் படவில்லை. அப்படியானால் மனிதனுடைய அறிவை என்னென்று கூறுவது?

நீயோ மனிதனுடைய அறிவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றாய் ஆனால், நானோ இறைவனுடைய அருளுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறேன். இறைவனுடைய அருள் ஒருவன் மீது இல்லையாயின் அவன் எத்துணைப் பெரிய அறிஞனாய் இருந்தபோதினும் சரியே, அவனால் எப்பெரும் செயலையும் ஆற்றமுடியாது, எப்பெரும் உண்மைகளையும் கண்டுபிடிக்க இயலாது. காந்தியடிகளையும் ஜின்னாவையும் போன்ற எத்தனையோ பாரிஸ்டர்கள் இவ்வுலகில் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால், அவர்களுக்கு இறைவன் சுரந்த அருள்போன்று மற்றப் பாரிஸ்டர்களுக்குத் தந்தருளினனா என்று நான் கேட்கிறேன். இல்லையே. எத்தனையோ பேர் எத்தனையோ ஆண்டுகளாக இமயத்தின் சிகரத்தின்மீது ஏறி நிற்கப் பெரும் முயற்சி செய்தார்கள்தாம். ஆனால், இறைவன் டென்ஸிங்குக்கும் ஹில்லாரிக்கும் அருள் கூர்ந்தது போன்று அவர்களுக்கெல்லாம் அருள் கூர்ந்தானா? இல்லையே. அறிவியல் அறிஞர்களை எடுத்துக்கொள். அவர்கள் கண்டுபிடித்த கண்டுபிடிப்புக்கள் எல்லாம் அவர்களே அறியாமல் அவர்களுக்கு இறைவன் காட்டியருளியதாய் இருக்கின்றனவே யொழிய அவர்கள் அறிந்து கண்டுபிடித்ததாக இல்லை. ஆப்பிள்பழம் கீழே வீழ்ந்ததை நியூட்டனின் கண்களுக்குத் தென்படும்படியாய்ச் செய்து மண்ணுக்கு இழுப்பு ஆற்றல் உள்ளது என்னும் உண்மையை அவருக்குக் காட்டியருளினான் இறைவன். ஓர் ஆய்வின் போது ஊசி ஒன்றை எடிஸனின் விரலில் பாயுமாறு செய்து அவருக்குக் கிராமபோனைக் கண்டுபிடிக்கும் வழியைக் காட்டியருளினான் இறைவன். சிலருக்குச் சில சாதனங்களை இல்லாது ஆக்கி அவர்களைத் தோல்விப் படுகுழியில் தள்ளுகின்றவனும் இறைவன்தான். மற்றும் சிலருக்குச் சில சாதனங்களை அருளி அவர்களை வெற்றிச் சிகரத்தில் ஏற்றுகின்றவனும் இறைவன்தான். ஹிட்லருக்கு உரேனியம் என்னும் உலோகம் மட்டும் கிடைத்திருப்பின் அவனே முதலில் அணுக்குண்டை உற்

பத்தி செய்து உலகத்தை அழித்துப் போரை வென்றிருப் பான். அவனும் அதனைப் பெறுவதற்குத் தவியாய்த்தான் தவித்தான். கிடைக்கவில்லை. ஆனால், இறைவன் நேசநாட் டினருக்கு அணுக்குண்டின் மூலப்பொருளான அந்த உரேனி யத்தைக் கிடைக்குமாறு செய்து போரில் வெற்றி நல்கிய தைப் பார்! ஆதலின் மனிதனுடைய அறிவுக்கும் திறனுக் கும் ஓர் எல்லை உண்டு. ஆதலின் மனிதனுக்கு முழுக்க முழுக்க வேண்டற்பாலது இறைவனுடைய அருள்தான். அவன் மனி தனுக்கு ஆற்றலும் அறிவும் அளித்தால்தான் மனிதன் ஆற்ற லுள்ளவனுகவும் அறிவுள்ளவனுகவும் இருப்பான். இல்லையெனில் இல்லை. காற்றின் வேகத்தில் நாடுகளைக் கைப் பற்றி வந்த ஹிட்லருக்குப் பின்னர் இந்த மண்ணிலே தன் இரண்டு கால்களையும் வைத்து நிற்பதற்கு இரண்டடி நிலம் கூட இல்லாமற் போய்விட்டதைப் பார்.

இறைவன் எங்கே என்று தனக்கே தான் கேள்வியைப் பிறப்பித்துக் கொண்டு ''அவன் என்னுடைய படையணியில் ஒரு வீரன். நான் என் படையணியை நோக்கி 'முன்னே றுங்கள்' என்று சொல்லின் அவனும் என் ஆணைக்குக் கீழ்ப் படிந்து மற்றவர்களோடு சேர்ந்து ஒத்து நடப்பான்'' என்று கூறிய ஜெர்மானியப் பேரரசன் கெய்சர் பின்னர் போரில் தோற்று ஹாலந்தில் அடைக்கலம் புகவேண்டியதேற்பட்டு விட்டதையும், ஒரு காலத்தில் செங்கோலைத் தாங்கிய அவ னுடைய கைகள் பின்பு ரம்பத்தைப் பிடித்து மரம் அறுக்க வேண்டியதேற்பட்டு விட்டதையும் பார். ஏறக் குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் எகிப்து நாட்டை ஈடிணையற்ற முறையில் ஆண்டு நான்தான் ஆண்டவன், என் னைத்தான் எல்லோரும் வணங்கவேண்டுமென்று கூறிய இரண்டாவது ரமேஸஸ் என்னும் பிர்ஔன் நீலநதியால் மூழ் கடிக்கப்பட்டுச் சாகவில்லையா? அவர்களுடைய ஆற்றல்கள் எல்லாம் அப்பொழுது எங்கே என்று கேட்கிறேன். அவ்வித மானல் மனிதனின் ஆற்றலையும் அறிவையும் நாம் என் னென்று கூறுவது?

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்

ERSITY EXTENSION LIBR

## 19

அன்புள்ள அருட்செம்மல்!

உன் மடல் வரப்பெற்றேன். அது எனக்கு நல்ல அறிவு விளக்கம் தந்தது. இதுகாறும் நான் அறிவுக்கும் திறனுக்கும் தாம் அதிக முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருந்தேன். ஆனுல்' அதைவிட ஒரு மனிதன் வாழ்க்கையில் வெற்றிபெற முக்கியமானது இறைவனுடைய அருள் என்பதை உன் மடல் மூலம் அறியலானேன். இறைவனுடைய அருள்மீது நம் பிக்கை கொண்டவர்களாலேயே பெரும் செயல்களை ஆற்ற இயல்கின்றது என்பதையும் அறியலானேன். அறிவாளிகள் மயிர்பிளந்து ஒவ்வொன்றையும் சிந்தித்து ஒன்றையுமே வெற்றிகரமாய்ச் செய்து முடிக்காது தத்தளித்துத் தடுமாறும்பொழுது இறைவனின் அருள்மீது அளவற்ற நம்பிக்கை வைத்துச் செயலாற்றும் சாதாரண மனிதர்கள் பெரும் செயல்களை ஆற்றிவிடுகிறுர்கள். அந்நன்னம்பிக்கையே அவர் களுக்கு அளவற்ற ஆற்றலை நல்கி அவர்களை வெற்றிச் சிகரத் தின் உச்சியில் ஏற்றிவிடுகின்றது என்னும் உண்மையையும் அறியலானேன். ஆனுல், உன் மடலைப் படித்து முடித்ததும் எனக்கு ஓர் ஐயம் ஏற்பட்டது. அப்படியானுல் எல்லாம் இறைவனிட்ட விதிப்படித்தான் நடக்கும்; அவன் எதனையும் மனிதனுக்குக் காட்டிக்கொடுக்க விரும்பினுல்தான் கொடுப் பான், இல்லையெனில் இல்லை என்று நீ கூறுகின்றுயா? அப்படி யானுல் மனிதனுடைய முயற்சி தனிப்பட்ட முறையில் யாதொரு பலனும் நல்காதா? என்றும் நான் ஐயுற்றேன். அவ்விதமானுல் 'நமக்கு எது இறைவனுல் விதிக்கப்பட்டுள் ளதோ அதுதான் நடக்கும். நம்முடைய விதியானது ஏற் கனவே முடிவு செய்யப்பட்டதாகும். ஒன்றும் எதிர்பாராமல் நடப்பதல்ல. ஒவ்வொரு மனிதனுடைய துக்கமும் மகிழ்ச்சி

யும் ஏற்கனவே இறைவனால் முடிவு செய்யப்பட்டவையே யாகும்' என்று கிரேக்க அறிஞன் சேனேகாவுடன் சேர்ந்து நீயும் எதிரொலி செய்கின்றாயோ என்றுகூட எண்ணினேன். இவ்வாறு எண்ணிக்கொண்டு ஒரு நூலைப் படித்துவருங்கால் 'உனக்கென இறைவனால் ஒதுக்கப்படாததை உன்னுடைய கைகளால் பற்றிப் பிடிக்க இயலாது. ஆனால், அதற்கு மாறாக உனக்கென ஒதுக்கப்பட்டவற்றை நீ எங்குச் சென்றபோதி னும் காண்பாய்' என்று பாரசீக அறிஞர் ஸஅதி ஒரு பக்கல் முழங்கினார். 'மனிதனுடைய வாழ்வே விதியின் கைப்பிடி யில் இருக்கும்பொழுது மனிதனோ, தானே தன்னுடைய வாழ்க்கையைச் செலுத்திச் செல்வதாகவும், தன்னுடைய செயல்களை நிர்ணயித்து ஆட்சி செய்வதாகவும் எண்ணிக் கொண்டுள்ளான்' என்று ஜெர்மானியக் கவிஞர் கதே மறு பக்கல் எக்காளம் ஊதினார். இவை போதாவென்று சீன அறிஞர் கன்ப்யூஸியஸோ 'வாழ்வும் இறப்பும் விதிபோல் நடைபெறுகின்றன. ஒருவனுடைய செல்வமும் மதிப்பும் இறைவனுடைய நாட்டத்தைப் பொறுத்திருக்கின்றன' என்று கர்ச்சித்தார். இவற்றையெல்லாம் கேட்டதும் இவர் கள் எல்லாம் நம்முடைய நண்பன் அருட்செம்மலுக்கு ஏற்ற வண்ணமல்லவோ ஒத்து ஊதுகின்றார்கள் என்று எண்ணி னேன். நம்முடைய விதி ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டிருப் பின் நமக்கு நல்வாழ்வை, புகழ் வாழ்வை, பெருவாழ்வைத் தருமாறு நாம் இறைஞ்சும் இறைஞ்சுதலுக்கும், கெஞ்சும் கெஞ்சுதலுக்கும், மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும் சற்றே னும் செவிசாய்த்து அருள்பாலிக்காத கொடுங்கோலனா இறைவன் என்றுகூட எனக்கு வெஞ்சினம் ஏற்பட்டது. எனி னும், அவசரப்பட்டுத் தவறான முடிவுக்கு வந்துவிடக்கூடாது என்று எண்ணி என்னுடைய ஐயத்தை உனக்கு எழுதுகின் றேன். அன்புகூர்ந்து ஐயம் தவிர்த்தருள வேண்டுகிறேன்.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

# 20

அன்புள்ள அறிவண்ணல்!

நீ அவசரப்பட்டு இறைவன்மீது உன்னுடைய வெஞ்சினக் கணைகளைத் தொடுத்துவிடாது ஐய விளக்கம் வேண்டி எனக்கு மடல் வரைந்தது கண்டு மகிழ்கிறேன். ஏனெனில், காரணமில்லாமல் அவசரப்படுவது ஒருவனைத் தவறுப் படுகுழியில், பாவப் படுகுழியில் கொண்டுபோய்த்தான் இறக்கி விட்டுவிடும் என்று நான் அஞ்சுகிறேன். ஆனால் இதுபற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பதில் எழுதலாமென்று எண்ணிக்கொண்டிருக்கும்பொழுது 'என் முன்மடல் கிடைத்திருக்கலாம். உடனே பதில் எழுத வேண்டியது' என்று இரண்டு அஞ்சலட்டை தீட்டிவிட்டாய். இஃதென்ன, இவன் இவ்வளவு அவசரப்படுகிறான் என்று நான் என் மனத்திற்குள் எண்ணிக் கொண்டேன். மேலும் அந்த அஞ்சலட்டைகளில் ஒன்றில் 'இன்று செய்யவேண்டியதை நாளைக்கு ஒத்திப்போடாதே' என்று சிவப்பு மையால் எழுதியிருந்தது எனக்கு ஒரு வகையில் சிரிப்பை உண்டுபண்ணியது. நான் என்றுமில்லாது இப்பொழுது உடனே பதில் எழுதாதிருப்பதைக் கண்டாவது 'சரிதான், அதைப்பற்றி அவன் திடமான முடிவுக்கு வரவில்லை. எனவேதான் இந்தச் சுணக்கம் என்பதையாவது நீ உய்த்துணர்ந்து கொள்ளவேண்டாமா? நீயோ 'இன்று செய்ய வேண்டியதை நாளைக்கு ஒத்திப்போடாதே' என்று எனக்கு அறிவுரை பகர்ந்திருந்தாய். ஆனால் நானோ, 'நாளைக்கு ஒத்திபோட இயன்றதை இன்றைக்கே செய்துவிடாதே. ஏனெனில் அப்படிப்பட்டவற்றில் சிறிது தாமதிப்பின், மேற்கொண்டு செய்யவேண்டியவை பற்றி உனக்கு அதிகமான விளக்கம் ஏற்படும்' என்று எனக்கே நான் அறிவுரை பகர்ந்து கொண்டேன். அதனால்தான் இந்தச் சுணக்கமேயன்றி வேறில்லை.

நான், நீ எண்ணியபடி இறைவனின் நாட்டப்படித்தான் எல்லாம் நடக்கும் என்று நம்பிக்கை கொண்டவனாக இருந்த போதினும், விதியில் அதிகமான நம்பிக்கை வைத்து அதன் அடிமையாக இருக்கவில்லை. என்னால் தவிர்க்க முடியாததைக் கண்டு எல்லாம் விதிப்போல்தான் நடக்கும், நாம் என் செய்தும் என்ன பயன் என்று கூறுவேனேயொழிய செய்யவேண்டிய அட்டகாசங்கள், அநீதி ஆகியவற்றையெல்லாம் செய்துவிட்டு அதன்பின் அவற்றிற்கான பலனை நுகரும்பொழுது நாம் என்ன செய்வது. எல்லாம் விதிப்போல்தான் நடக்கும் என்று தங்கள்மீதல்லாது விதியின்மீது பழிசுமத்துவார்களே சிலர், அவர்கள் போன்று நான் ஒருபோதும் இருக்கமாட்டேன். அல்லது எல்லாம் விதிப்போல்தான் நடக்கும் என்று கூறித் தங்களின் முழங்காலைக் கட்டிக்கொண்டிருக்கும் வீணர்களைச் சேர்ந்தவனுமல்லன் நான். மனிதனுடைய செயல் வெற்றியில் நான் நம்பிக்கை கொண்டவன்தான். முன்னோர் வகுத்த முறையாம் அறங்களைத் தவறவிடாது உண்மையும் நேர்மையும் ஒருங்கே அமைந்தவனாய், இறைவனுக்கு அஞ்சிச் செயலாற்றும் இயல்பினனாய் ஒருவன் இருப்பானாயின் அவன்மீது இறைவனின அருள் சார்ந்திருக்கும்; இறைவன் அவன்மீது தன்னுடைய நற்பேறுகளைச் சொரிவான்; அவனுக்குப் பெரும் வாழ்வையும், பெறும் வெற்றியையும் நல்குவான்: அவனுடைய இறைஞ்சுதலை ஏற்று அருள்கூர்வான் என்று நான் முழு மனத்துடன் நம்புகின்றேன். ஆனால், ஒருவன் தீயவனாகவும், ஒழுக்கமற்றவனாகவும், கொடுமை நிரம்பியவனாகவும் மேலும் இறைவனின் அருளைப் பெறுவதற்கு அருகதையற்றவனாகவும் இருந்து எவ்வளவுதான் முயற்சியாற்றியபோதினும் அவன் உண்மையில் வெற்றி பெறவேமாட்டான், அவன் வெற்றி பெறுவதுபோல் தோன்றியபோதினும் கானலை நீரென நினைத்து விரட்டிச் செல்வதுபோல்தான் இறுதியில் ஆகிவிடும். ஆனால், ஒருவன் நான் மேலே கூறியபடியுள்ள நல்லோனாய் இருப்பானாயின் இறைவனிடம் சண்டையிட்டுத் தனக்குப் பெரும் வெற்றிகளைப் பெறலாம். அவனுக்கில்லாது வேறு யாருக்குத்தான் இறைவன் வெற்றியை நல்க வைத்துள்ளான் என்று நான் கேட்கிறேன். இதைக் கேட்டதும் சில கெட்ட மனிதர்கள்கூடப் பெரும் வெற்றிகளைப் பெற்றிருக்கின்றார்களே, இதற்கு நீ என்ன கூறுகின்

ருய் என்று என்னை நீ வினவலாம். நீ கேட்பது சரியான கேள்வியாகும். ஆனால், நீயும் நானும் அவர்களைக் கெட்டவர்களென்று எண்ணிக் கொண்டிருக்கும் போழுது அவர்களோ தங்களின் உள்ளின் உள்ளே மேலான நற்பண்புகளைப் பெற்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் பெரும் கெடுதல்களை நீக்குவதற்காகச் சிறு கெடுதல்களைச் செய்பவர்களாக இருப்பார்கள். ஒரு மனிதனுக்கு இராஜ பிளவை ஏற்பட்டிருக்கின்றது என்று வைத்துக்கொள். அதனைக் கீறிச் சீழை வெளியே எடுத்து மருந்திடாவிட்டால் அது அவனுடைய உயிருக்கே இறுதி விளைவித்து விடும் என்று கருதிய ஒரு ரணசிகிச்சை வல்லுனன் அதனைக் கத்தியால் கீறும் பொழுது நோயாளி வேதனை தாங்க இயலாது கதறினால் அதைக் கண்டு அந்த ரணசிகிக்சை வல்லுனனைக் கொடுமைக்காரன் என்று நாம்கூற இயலுமா? அவன் செய்யும் அந்தக் கொடுமை நன்மைக்காகவல்லவோ? அவன் அவ்வாறு செய்யும் நோக்கம் மேலானதல்லவோ? கோடானுகோடி மக்களுக்கு நல்வாழ்வு நல்குவதற்காக ஒரு சிலரைத் தூக்குமேடையில் ஏற்றுவதும் இது போன்றதுதான் என்றுநான் கூறுவேன்.

ஆதலின் யார் நல்லன நினைந்து, நல்லனபேசி, நல்லன செய்து, நல்லவர்களாய் இருக்கின்றார்களோ அவர்களே இவ்வுலகில் இறைவனின் செயலாளர்களாய் இருப்பார்கள். அவர்கள் மூலமாக இறைவனும் உலகத்தினருக்குப் பல்வேறு உண்மைகளைக் காட்டியருளுவான். பல்வேறு நன்மைகளைச் செய்தருள்வான். அவர்களுக்கு இன்பமேயன்றித் துன்பமில்லை. அவர்களே வெற்றிபெற்றவர்கள்.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்

# 21

அன்புள்ள அருட்செம்மல்!

உன் மடல் வந்தது. அது என் உள்ளத்தில் மண்டிக் கிடந்த ஐய எண்ணங்களை எல்லாம் விரட்டியடித்து விட்டது. முன்பு அறியாத்தனமாகச் செய்த பாவச் செயல்களுக்கெல்லாம் இறைவனிடம் மனம் உருகி மன்னிப்புக் கேட்டு அதன்படி நல்வாழ்வு வாழ்ந்து நல்லன செய்து நல்லன நினைந்து வந்தால்கூட இறைவன் நமக்கு நல்வாழ்வு அளிப்பான், நம்முடைய நல்ல நாட்டங்களை நிறைவேற்றி வைப்பான் என்று நான் உள உறுதிகொண்டேன். உன் மடல் கிடைத்த அக்கணத்திலிருந்து நான் முன்பு அறியாத்தனமாகச் செய்த பாவங்களுக்கு இறைவனிடம் உள்ளம் உருகிக் கண்ணீர் சிந்தி மன்னிப்புக் கேட்பதோடு என்னால் இயன்றவரை மிகவும் பேணுதலுடன் செயலாற்றி நல்வாழ்வு வாழ்ந்து வருகிறேன். மேலும் என்னுடைய மன விருப்பத்தை அவனிடம் ஒவ்வொரு நாளும் எடுத்துரைத்து எனக்குப் புகழ்வாழ்வு நல்குமாறும் இறைஞ்சி வருகிறேன். நேற்று நான் அலைவாய்க்கரைக்குச் சென்றிருந்தபொழுது அங்கு வந்த பெரியவர் ஒருவர் என்னைப் பார்த்துத் 'தம்பி, உனக்கு எந்த ஊர்' என்றார். 'இந்த ஊர்தான்' என்றேன். அதன்பின் எங்களிடையே உரையாடல் தொடர்ந்தது. 'நான் என்ன சொல்வது? ஊர் மிகவும் கெட்டுவிட்டது. பட்டணம், பட்டணம் என்று பெருமையுடன் கூறுகின்றார்களே யொழிய பட்டிகளில் காணப்படும் நாகரிகமோ, பண்பாடோ, ஒழுக்கமோ அணுவேனும் இங்கு இல்லை. ஒவ்வொரு நாளும் இங்கு வாழும் மக்கள் நாகரிகம், நாகரிகம்

என்று கூறிக்கொண்டு செய்யும் பாவங்கள் கொஞ்சமல்ல எனினும், அவற்றிற்காகப் பின்னர் வருந்தி இறைவனிடம் மன்னிப்புக்கேட்டு நேரிய வாழ்வு வாழ்கின்றூர்களா என்றால் அதுவுமில்லை. தாங்கள் செய்வது தவருன செயல், பாவச் செயல் என்ற உணர்ச்சியே அவர்களிடம் இல்லாதபொழுது அவர்கள் எவ்வாறு அவ்விதம் செய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியும். இந்த நாகரிகம் எதில் போய் முடியுமோ யாரறிவார்? இறைவனிடம் தாங்கள் செய்த தவறுகளை மன்னித்தருளுமாறு இறைஞ்சி அதன்பின் தூய வாழ்வு வாழின் இறைவன் அந்தப் பாவங்களை மன்னிப்பதோடல்லாது அவ்விதம் இறைஞ்சியதற்காக நன்மைகளையுமல்லவோ நல்குகின்றான். இது இந்த 'நாகரீக' மக்களுக்கு விளங்கவா போகிறது? இதனை நாம் அவர்களிடம் எடுத்துரைத்தால் என்னவோ கிழம் வாயை மூடிக்கொண்டு சும்மா இராது எதையோ தத்துப் பித்தென்று உளறிக்கொண்டுள்ளது என்று நம்மை இழித்துரைத்து இகழ்வார்கள்' என்று கூறி வருத்தப்பட்டுக் கொண்டார். அவர் அப்பொழுது கூறிய மொழிகள் என் மனத்தில் நன்கு பதிந்தன. இச்செய்தியை எனக்குத் தெரிவிப்பதற்காகத்தான் அவரை இறைவன் இந்த ஊருக்கு அனுப்பி என்னை இங்குச் சந்திக்குமாறு செய்தானே என்று கூட எண்ணினேன். அதுமுதல் நான் புகழ்-வாழ்வு வாழ்வதற்கான சரியான வழியைக் கண்டு பிடித்து விட்டதாக உணர்கிறேன். நான் நிச்சயமாகப் புகழ் வாழ்வு வாழ்வேன், பெரு வாழ்வு வாழ்வேன் என்று என் மனத்தில் என்னவோ கூறுகிறது. நான் இப்பொழுது சாதாரண வாழ்வு வாழ்ந்தபோதினும் என் வாழ்வின் முடிவு மகத்தானதாக இருக்குமென்றும், நான் இவ்வுலகை விட்டுப் பிரிந்து இறைவனிடம் செல்லுங்கால் புகழ்மாலைகளால், வாகைமாலைகளால் நிரப்பப்பட்டுச் செல்வேனென்றும் திட்டமாக நம்புகிறேன். இப்பொழுது என்னுடைய வாழ்வு சாதாரணமாக இருந்தபோதினும் என் முடிவுதானே மேலானதாக இருக்க வேண்டும். வாழ்வின் சிகரம் முடிவுதானே. இது பற்றி உன்னுடைய கருத்துக்களை அறிய நான் பெரிதும் ஆவலுள்ளவனுயுள்ளேன். விரைவில் பதில் எழுது.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

# 22

அன்புள்ள அறிவண்ணல்!

'வாழ்வின் முடிவுதான் மேலானதாக இருக்கவேண்டும். வாழ்வின் சிகரம் முடிவுதான்' என்று நீ உன் மடலில் கூறியுள்ள கருத்தை நான் முழுக்க முழுக்க ஒப்புக்கொள்கிறேன். அதுவே என்னுடைய கருத்துமாகும். வாழ்வின் முடிவு மேலானதாயிருப்பதும் இல்லாதிருப்பதும் நம்மையே பொறுத்திருக்கிறது. நாம் நல்வாழ்வு வாழ்ந்தால் நம்முடைய முடிவும் நல்ல முடிவாக இருக்கும். தீயவாழ்வு வாழ்ந்தால் நம்முடைய முடிவும் தீயமுடிவாக இருக்கும். சிலர் தங்களின் வாழ்வின் துவக்கத்தில் வளவாழ்வு வாழ்வார்கள். பின்னர் தங்களின் வாழ்வின் மத்தியபாகத்திலும் இறுதியிலும் வறுமையுறுவார்கள். அவர்களின் வாழ்வு வறுமையிலும் துன்பத்திலும் துயரத்திலும் முடிவுறும். சிலர் தங்கள் வாழ்வின் துவக்கத்தில் துன்பவாழ்வு வாழ்வர். ஆனால் அவர்களின் வாழ்வின் முடிவோ வளங்கொழித்துக் கொண்டிருக்கும். சிலர் தங்களின் வாழ்வின் மத்திம பாகத்தில் வளவாழ்வு வாழ்வர். ஆனால் துவக்கமும் முடிவும் துன்பமயமாக இருக்கும். சிலர் தங்கள் வாழ்நாள் முழுவதும் செழிப்பான வாழ்வு வாழும் பிறவிச் செல்வர்களாய் இருப்பர். அதுபோன்றே சிலர் தங்கள் வாழ்நாள் முழுவதும் வறிய வாழ்வு வாழும் பிறவி வறிஞர்களாக இருப்பர். வாழ்நாள் முழுவதும் பிறவிச் செல்வர்களாக இருப்பதற்கு அடுத்தபடியாக மக்களால் பெரிதும் விரும்பப்பட வேண்டியது தங்களின் இறுதிக்காலம் தங்கள் வாழ்க்கையின் உச்சகாலமாக இருக்கவேண்டுமென்பதுதான். வளத்தைப் பற்றி நான் கூறிய விளக்கமே புகழுக்கும் பொருந்தும். சிலர் தங்களின் வாழ்வின் துவக்கத்தில் பெரும் புகழ் வாழ்வு வாழ்வர்; பின்பு அவர்களை ஏறிட்டுப்

பார்ப்பார் யாருமில்லாமல் போய்விடும். சிறுவர்களில் சிலர் இளமையில் தங்களுடைய வயதுக்கு மேற்பட்ட அறிவுடைய வர்களாக இருப்பார்கள். அவர்கள் பேசும் பேச்சும் கருத்தும் எல்லார் மனத்தையும் அவர்கள்பால் ஈர்த்து நின்று அவர்க ளின் புகழை எங்கணும் பரத்தி நிற்கும். ஆனால் வயது ஏற ஏற அவர்களின் அறிவு வளர்ச்சி குன்றி மற்றச் சாதாரண மனிதர்கள் போன்று ஆகிவிடுவர். மற்றும் சிலரோ, இளமை யில் மண்டுக்களாய் இருப்பார்கள். அவர்களின் வயது ஏற ஏற அவர்களின் அறிவும் வளர்ந்தோங்கி அவர்கள் பெரிய அறிவு மேதைகளாக விளங்குவர். மற்றும் சிலர் தங்களின் வாழ்வை யாருக்கும் தெரியாத எளிய முறையில் துவங்கி இருப்பர். ஆனால், அவர்களின் வயது ஏற ஏற அவர்களின் புகழும் ஏறி அவர்கள் தங்களின் இறுதிக் காலத்தைப் புகழ்ச் சிகரத்தின் மீது வீற்றிருந்து கழித்து உயிர்நீப்பர். காந்தி யடிகளுடையவும் ஜின்னாவுடையவும் வாழ்வை இதற்குச் சிறந்த மேற்கோள்களாகக் கூறலாம். அவர்களிருவரும் இவ் வாறு புகழ்ச் சிகரத்தின் மீது வீற்றிருந்து மிகப்பெரும் தலை வர்களாகத் திகழ்ந்ததற்குக் காரணம் அவர்களின் தெளி வான சிந்தனையும் மக்கள் பால் அவர்கள் காட்டிய மாசுமறு வற்ற அன்பும், இரக்கமும்தாம் என்று நான் கூறுவேன். அப்பண்புகளை யார் ஒருங்கே பெற்று மக்களுக்கு ஊழியம் செய்யத் தூயமனத்துடன் விரும்புகின்றாரோ அவரை, மக் கள் தங்களின் உச்சிமீது ஏற்றித் தங்களின் தலைவர் என்று கொண்டாடுவார்கள். ஆதலின் ஒரு மனிதன் தலைமைப் பதவியைப் பெறுவது ஆடைகளாலும் அலங்காரங்களாலும் அல்ல. மக்களை ஈர்த்து நிற்கவல்ல பண்பாடு, ஒழுக்கம், உணர்ச்சி ஆகியவற்றால்தான். அவற்றை எவர் அபிவிருத்தி செய்து கொள்கின்றாரோ அவர் தலைவராக விளங்குவார். புகழை அவர் தேடித் துரத்திச் செல்வதற்குப் பதிலாகப் புகழ் அவரைத் துரத்தித் துரத்திப் பிடிக்கும். அவர் புக ழுருவாக வாழ்ந்து புகழுருவாக இறப்பார். அவ்வித வாழ்க் கையே நம்மால் பெரிதும் விரும்பத்தக்கதாகும்.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்.

## 23

அன்புள்ள அருட்செம்மல் !

உன் மடல் கிடைத்தது. அதிலே நீ கூறியுள்ள பெரும் பாலான கருத்துக்களை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், யாரும் சில பண்பாடு, ஒழுக்கம், உணர்ச்சி ஆகியவற்றை அபிவிருத்தி செய்துகொண்டால் தலைவராகிவிடலாம் என்று நீ கூறியிருக்கும் கருத்தானது எனக்குப் பெரும் வியப்பை அளித்தது. ஏனெனில், நான் இதுகாறும் தலைவர்கள் பிறவி யிலேயே தலைவர்களாகப் பிறக்கிறார்கள், அவர்கள் உண்டு பண்ணப்படவில்லை என்று எண்ணிக்கொண்டிருந்தேன். எனவே, நாம் பெருவாழ்வு, புகழ் வாழ்வு வாழ விரும்புகின் றோமே, ஆனால், நம்மால் தலைவராக இயலாதுபோல் இருக் கிறதே, ஏனெனில், தலைவர்கள் என்போர் பிறவியிலே யன்றோ தலைவராகப் பிறக்கவேண்டுமாம். நம்முடைய விதியை இறைவன் அவ்வாறு ஆக்கியுள்ளானோ என்னவோ தெரியவில்லையே என்று எண்ணிக்கொண்டிருந்த எனக்கு உன்னுடைய கடிதம் பெரும் வியப்பை அளிக்குமா அல்லவா என்பதை நீயே கூறு.

நீ கூறுவதைப் பார்த்தால் எல்லோரும் தலைவராகிவிட லாம் போன்றல்லவோ தோன்றுகின்றது! லட்சத்தில் ஒரு வர், கோடியில் ஒருவர்தானே தலைவராயிருக்கிறார்? நீ கூறு வது போன்று எல்லோரும் சில பண்பாடு, ஒழுக்கம், உணர்ச்சி ஆகியவற்றை அபிவிருத்தி செய்துகொண்டு தலைவராகி விட்டால் அவர்களைப் பின்தொடர்பவர்கள் யார்? எல்லோ ரும் தளபதிகளாகி விட்டால் படைவீரர்கள் யார்? டச்சுப் படையைப் பற்றிக் கூறுங்கால் அதில் எல்லோரும் தளபதி கள், ஒரு படைவீரன்கூடக் கிடையாது என்று கிண்டலாகக் கூறுவார்கள். அப்படியென்றால் யார் உத்திரவிடுவது, யார் கீழ்ப்படிவது என்ற முறையின்றி ஒழுங்கு தவறி எல்லாம்

குழப்ப மயமாகிவிடுமே. எல்லோரும் பல்லக்கிலேறுபவர் என்றிருந்துவிட்டால் பல்லக்கைத் தூக்குபவர் யார் என்ற நிலை ஏற்பட்டுவிடுமே! இதற்கு நீ என்ன சமாதானம் கூறப் போகின்றாயோ நானறியேன்.

மேலும் தலைவர்களாயிருப்போர் அதிமேதைகளாகத் தாம் இருக்கின்றார்கள். இவ்வாறு அதிமேதைகளே தலைவராக இயலும் பொழுது நடுத்தர அறிவு படைத்த நம்மால் எவ்வாறு பெருந் தலைவராக இயலும்? எனினும், உழைத்து அருஞ்செயல் ஆற்றிப் புகழ் வாழ்வாவது வாழலாமென்று எண்ணியிருந்தேன். ஆனால், உன்னுடைய மடலைப் பார்த்தால் என்னாலும் தலைமைத்தனத்தைப் பெற இயலும், என்னைவிடக் குறைந்த அறிவு படைத்தவர்களாலும் தலைமைத்தனத்தைப் பெற இயலும் என்று கூறுமாப்போன்றுள்ளது. உன்னுடைய இக் கூற்று எனக்கு மயக்கத்தை நல்குகிறது. தயவுசெய்து உன்னுடைய அடுத்த மடலில் அதைப்பற்றித் தெளிவு படுத்து.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

## 24

அன்புள்ள அறிவண்ணல் !

உன்னுடைய மூளையில் இந்த விசித்திரமான எண்ணங்களெல்லாம் எவ்வாறு புகுந்தன என்றுதான் எனக்குப் பெரிதும் வியப்பாய் இருக்கிறது. ஒரு வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு அந்த வகுப்பின் பொறுப்பை மேற்கொண்டிருக்கும் ஆசிரியர் அடிக்கடி தேர்வு வைக்கிருர் என்று வைத்துக்கொள். அதன் காரணமாக, மாணவர்கள் சோம்பலுடன் சுற்றித் திரியாமல் நன்கு படிப்பார்கள். அதனுல் அரசாங்கத் தேர்வுகளில் நல்ல எண்கள் எடுத்துப் பெரும்பாலோர் தேர்ச்சிபெற்று அந்தப் பள்ளிக்கு நற்பெயரை ஈட்டிக் கொடுப்பர். அவர்கள் பெற்றிருக்கும் எண்களின் தரமும் அதிக மதிப்புடையதாக இருக்கும். ஆனுல், அவர்களுக்கு அடிக்கடி பள்ளியில் தேர்வு வைத்துப் பழக்கியதனுல் எல்லோரும் பள்ளியில் முதல் பையனுக இருப்பார்கள் என்பது பொருளன்று. அப்படி ஒருபோதும் இருக்க இயலாது. அவர்களின் படிப்புத் தரம்தான் உயரும். அதேபோன்று எல்லோரும் தலைவர்களாவதற்குரிய பண்பாடு, ஒழுக்கம், உணர்ச்சி ஆகியவற்றை அபிவிருத்தி செய்வார்களாயின், அவர்களின் தரம் உயரும். ஒருவன் ஐந்துபேர்களுக்குத் தலைவனுவான்; மற்ருெருவன் ஐம்பதுபேர்களுக்குத் தலைவனுவான்;வேருெருவன் ஐந்நூறு பேர்களுக்குத் தலைவனுவான்; பிரிதொருவன் ஐயாயிரம் பேர்களுக்கும், ஐந்தாமவன் ஐந்து லட்சபேர்களுக்கும், மற்ருெருவன் ஐந்துகோடிப் பேர்களுக்கும் வேருெருவன் ஐம்பதுகோடிப் பேர்களுக்கும் தலைவனுவான். பொதுவாகப் பார்க்கும்பொழுது எல்லோரும் தலைவர்கள் தாம். அவர்கள் தலைவர்களாவதற்கான இயல்புகளை எத்துணை அளவு ஊக்கத்துடன் மேற்கொள்கிருர்களோ அதற்கேற்றபடி அவர்களின் தரம் அமையும்.

இரண்டாவதாக நீ, தலைவர்கள் பிறக்கின்றார்களே யொழிய உண்டுபண்ணப்படவில்லை என்ற கருத்தை எடுத்து ரைத்துள்ளாய். மேலும், அதி மேதைகள்தாம் தலைவர்களாக வர இயலும் என்றும் கூறியுள்ளாய். ஆனால், அதிமேதை களாக இல்லாதார் தலைவர்களாவதை நீ அறியமாட்டாயா, என்ன? அல்லது அறிந்துகொண்டுதான் என்னை ஆழம் பார்ப் பதற்காக அவ்வாறு கூறுகின்றாயோ என்னவோ என்பதை நான் அறியேன். பிரிட்டனில் தொழிற்கட்சி அரசாங்கத்தை அமைத்து அதற்குத் தலைமை தாங்கிய அட்லி ஓர் அதி மேதையா? இல்லையே நடுத்தர அறிவு படைத்தவர் தாமே. அவரையும் அவருடைய அமைச்சரவையையும் கூடச்சர்ச்சில் ஒருதடவை நடுத்தர அறிவு படைத்தவர்களின் கூட்டம் என்று இடித்துரைத்தது உனக்கு நினைவிருக்கலாமே. அமெ ரிக்க ஜனாதிபதியாய் இருந்த ட்ரூமனை யாரவது அதிமேதை என்று எப்பொழுதாவது கூறினார்களா? அவர் எப்படி அமெ ரிக்க ஜனாதிபதி ஆக இயன்றது? பிராங்க்ளின் டி ரூஸ் வெல்ட் திடீரென்று இறந்துவிட்டதால் அவர் அப்படி ஆக இயன்றது என்று நீ எளிதாகக் கூறிவிடுவாய். ஆனால் அவர் இரண்டாவது தடவையும் எவ்வாறு ஜனாதிபதி ஆக இயன் றது என்பதை நீ சிந்தித்துப் பார்க்க வேண்டும். மக்கள்மீது அவர் கொண்டிருந்த அன்பினாலும், மக்கள் அவர்மீது கொண்டிருந்த நம்பிக்கையாலும் தாம்.

ஆதலின் நீ கூறுகின்றபடி அதிமேதைகள்தாம் தலைவர் களாவார்கள் என்ற நியதியே கிடையாது. அதிமேதைத் தன்மை என்றால் என்ன? 'அதிமேதாத் தன்மையில் பத்தில் ஒன்பது பாகம் வியர்வைதான்' என்ற பழமொழியை நீ கேள் விப்படவில்லையா? அதிமேதைகள் என்போர் யாரெனில், தங் களின் முழுக்கவனத்தையும் ஒருதுறையில் செலுத்திச் செய லாற்றுகின்றவர்கள்தாம். யார் ஒவ்வொன்றையும் கூர்மை யாகக் கவனித்து எச்சரிக்கையுடன் கண்காணித்து, உறுதி யுடன் செயலாற்றுகின்றானோ அவன் அவனறியாமல் ஓர் அதி மேதையாகிவிடுவான்.

நீ என்னவோ அதிமேதைகள்தாம் தலைவர்கள் ஆவ்ார் கள் என்று கூறுகின்றாய். ஆனால் அதிமேதைகளில் சிலர் சிறு

பைத்தியம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் அதிமேதைத் தன்மைக்கும் பைத்தியத்திற்கும் வெகு நெருங்கிய தொடர்பு இருக்கின்றதென்பதையும் அவை இரண்டையும் ஒரு மெல்லிய திரைதான் பிரித்து நிற்கின்ற தென்பதையும் நீ அறிவாயா? மேலும் அதிமேதைகளில் சிலர் மக்களுடன் பழகும் பொழுது மிகவும் மந்தமாக இருப் பதும், அறிவு வானில் எரிவெள்ளியாக ஒளிர்விடும் அவர்கள் மண்ணுலகை அடைந்ததும் மண்ணாங்கட்டி போன்று ஆகி விடுவதும், அவர்களுக்குரிய மரியாதை அவர்களுக்களிக்கப் படாமல் போவதும் உனக்குத் தெரியாதா? ஆதலின் நான் என்னுடைய முன் அஞ்சலில் குறிப்பிட்டுள்ளபடி யார் தலை வர்களுக்குரிய பண்பாடு, ஒழுக்கம், உணர்ச்சி ஆகியவற்றை அபிவிருத்தி செய்து கொள்வாரோ அவர் திட்டமாகத் தலை வராகி விடுவார். அவரை மக்கள் தங்களின் தலைவரென உச்சிமீது வைத்துக் கொண்டாடுவார்கள் என்பதில் ஐய மில்லை.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்

## 25

அன்புள்ள அருட்செம்மல் !

உன் அஞ்சல் எனக்கேற்பட்ட சிறு ஐய்த்தைத் தெளி வித்தது. ஒவ்வொருவரும் முயன்ருல் தலைவராகலாம் என்று நீ கூறும் கருத்தை நான் இப்பொழுது ஒப்புக்கொள்கிறேன். ஆனுல், சிலர் பிறவித்தலைவராகவே பிறக்கின்ருர்கள் என்ற என்னுடைய கருத்தை நீ ஒப்புக்கொள்ளாதிருக்க இயலாது. அப்படிப்பட்ட பிறவித்தலைவர்களைப் பார்ப்பின் அவர்களின் உடலமைப்பு, முகவெட்டு, பேச்சு, குரல், நடை, உடை ஒழுக்கம் ஆகிய அனைத்தும் அவர்கள் மக்களுக்குத் தலைமை தாங்கத்தான் பிறந்துள்ளனரோ என்று உன்னை எண்ணுமாறு செய்யும்.

சரி, அதிருக்கட்டும். சிலர்மீது சூழ்நிலைகளின் காரணமா கத் தலைமைத்தனம் திணிக்கப்படுவதில்லையா? ஜனதிபதி ட்ருமனைப்பற்றி நீ குறிப்பிட்டுள்ளாய். அவர் ஜனதிபதிப் பதவி ஏற்ற அன்றுகாலை அவர் அமெரிக்க மக்களைப் பார்த்து 'உங்கள்மீது ஓர் எருது பாய்ந்து குத்திய அனுப வத்தையோ அல்லது ஒரு பெருமரம் திடீரென விழுந்த அனு பவத்தையோ நீங்கள் பெற்றிருக்கின்றீர்களா? அவ்வித அனு பவம் ஒன்றை நீங்கள் பெற்றிருந்திருப்பீர்களாயின் சென்ற இரவு நான் எப்படிப்பட்ட அனுபவத்தைப் பெற்றேன் என் பதை நீங்கள் விளங்கிக்கொள்வீர்கள்' என்று கூறியது உனக் குத் தெரியாதா? அவர்மீது தலைமைத்தனம் திணிக்கப்பட் டதா அல்லவா என்று நான் கேட்கிறேன். பின்னர் அவர் இரண்டாவது முறை ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார் என்ருல் அப்பொழுது நிலவிய சூழ்நிலை இன்னும் ஒருதடவை அவரே ஜனதிபதியாய் இருந்தால் நல்லது

என்று மக்கள் எண்ணும் வண்ணம் இருந்தது என்றுதான் நான் கூறுவேன்.

சரி; அது போகட்டும். நீ உன்னுடைய முன்மடல் ஒன்றில் காந்தியடிகளைப்பற்றியும் காயிதெ அஃலம் ஜின்னுவைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தாய். அவர்கள் இத்துணை மாபெரும் தலைவர்களானதற்கு மிகவும் முக்கியமானது சூழ்நிலை தான் என்பதை நீ மறுக்க முடியுமா? அவர்கள் பிறக்கும் பொழுதும் வயதெய்தி வாழும் பொழுதும் இந்தியா விடுதலை பெற்ற இந்தியாவாக இருந்திருப்பின் அவர்கள் இருவரும் இத்துணை அரும்பெரும் செயல்களை ஆற்றி அளப்பரும் புகழ்வாழ்வை எய்தி இருக்க இயலுமா?

ஆதலின் 'சிலர் பிறக்கும்பொழுதே பெருமையுடன் பிறக்கின்றார்கள். சிலர் பெருமையடைகின்றார்கள்; சிலர்மீது பெருமை சுமத்தப்படுகிறது' என்று ஷேக்ஸ்பியர் கூறியதை நாம் முற்றிலும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆதலின் இதுவரை நாம் இருவரும் இது பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் பாதி உண்மையேன்றி முழு உண்மையல்ல. சிலர் பிறவியிலேயே தலைவர்களாய்ப் பிறக்கவும்தான் செய்கின்றார்கள். சிலர்மீது சூழ்நிலையினால் தலைமைப்பதவி சுமத்தப்படவும்தான் செய்கிறது. சிலர் நீ கூறிய வண்ணம் சில நற்பண்புகளை அபிவிருத்தி செய்து தங்களைத் தலைமைப்பதவிக்கு அருகதையுள்ளவர்களாக ஆக்கித் தலைமைப் பதவியைப் பெறவும்தான் செய்கிறார்கள்.

நல்லது; உன்னுடைய அடுத்த முடங்கலில் தலைவனாக விரும்பும் ஒருவன் மேற்கொள்ளவேண்டிய நற்பண்புகள் என்னவென்பதைப் பற்றித் தயவு செய்து எழுதி அனுப்பு.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

## 26

அன்புள்ள அறிவண்ணல்!

உன் அஞ்சல் கிட்டியது. அதனை நான் திருப்பித் திருப்பி ஆழ்ந்து படித்தேன். படித்து முடித்ததும் நீ கூறுவது சரி யென்றே என் வாய் என்னையறியாமல் கூறியது. நீ தலைவரா கிறவர்கள் மூன்று வகையினராவர் என்று கூறியிருப்பது முற் றிலும் சரியேயாகும். நான்தான் என் முன்மடலில் அவசரப் பட்டு ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். அதற்காக நான் வருந் துகிறேன். ஆனால், யாரும் தங்களைத் தலைவர்களாக்கிக் கொள்வதற்குத் தகுதிப் படுத்திக்கொள்ளலாம் என்ற என் கருத்துக்கு நீ இணங்கிவந்தது கண்டு எனக்கு ஒரு வகையில் மகிழ்ச்சியே.

தலைவனாக விரும்புகின்றவன் மேற்கொள்ள வேண்டிய நற்பண்புகள் என்னவென்று நீ உன்னுடைய மடலில் வினவி யிருந்தாய். அதற்கு நான் ஒரே வாக்கியத்தில் பதில் சொல்வ தென்றிருந்தால் அதற்கு நம்மைத் தகுதிப்படுத்திக் கொள் வதுதான் என்று நான் கூறுவேன்.

ஆனால், நம் மக்களோடு பெரும் தொந்தரவு என்னவென் றால் அவர்கள் அவ்வாறு செய்வதில்லை. சிறிது விவரம் அறி யக் கூடிய வயதை எய்தியதும் உடனே அவர்கள் தலைவர் நாயகங்களாக ஆகிவிட்டதாகக் கூட எண்ணிக்கொள்கின் றார்கள். இங்குமங்கும் அலைந்து திரிந்து ஊர் வம்புகளை யெல் லாம் பேசி, தேவையற்ற செயல்களிலெல்லாம் ஈடுபட்டுத் தங்களைப் பற்றியே அதிகமாகப் புகழ்ந்துரைத்துத் தருக்கித் திரிகின்றார்கள். இவ்வாறு செய்வது தங்களுடைய வருங் கால வாழ்வையே பாழ்படுத்திவிடும் என்பதை அவர்கள்

அறிகின்றார்களில்லை. எங்கே தங்களுக்குப் பேச வாய்ப்புக் கிடைக்கிறது. எந்த மேடையில் தாங்கள் அமர்ந்திருக்க இடம் கிடைக்கிறது என்று ஏங்கித் தவிர்த்துத் திரிகின்றனர். பூமாலை அவர்களின் கழுத்தில் ஏறிவிட்டால் போதும்; கை தட்டுதல்கள் சில கிடைத்துவிட்டால் போதும்; அவர்களின் வாழ்வின் குறிக்கோளே நிறைவேறிவிட்டதாக அவர்களின் மனம் விம்மிப் பெருத்துப் பூரிப்படைந்து விடுகிறது. அதனால் அவர்களின் முன்னேற்ற வாயில்களெல்லாம் தாமாகவே அடைத்துக் கொள்கின்றன. அதன்பின் அவர்கள் முன்னேறுவது என்பது ஏது?

கைதட்டுதல்களானவை பெரும் குறிக்கோளை மனத்திற் கொண்டவர்களுக்கு ஊக்கமளிக்கும் அருமருந்தாக இருக்கும் பொழுது அற்ப அறிவு படைத்து அற்பமான குறிக்கோளைக் கொண்டு திரிபவர்களின் வாழ்விற்கு இறுதிகாணும் நஞ்சாகவும் இருக்கின்றது. பொது மக்களிடமிருந்து கிடைக்கும் கை தட்டுதல்கள் இருக்கின்றனவே, அவை நிலையற்ற தன்மையுடையனவாகும். அவற்றைப் பேரறிவு படைத்த பெருமக்கள் ஒருபோதும் உண்மையெனக்கொள்ளமாட்டார்கள். தங்களைச் சோதித்தறிய வந்திருக்கும் மோகனப் பெண் என்றே கருதுவார்கள். அவை அவர்களுக்குக் கிடைப்பின் அவற்றைப் பெறத் தாங்கள் அருகதையுள்ளவர்களா என்று சிந்தித்துப் பார்ப்பார்கள். ஏனெனில், அவற்றைப் பெற அருகதையற்றவர்களாக இருந்து கொண்டு அவற்றைப் பெறுவது அருவருக்கத்தக்கது என்று அவர்கள் கருதுவார்கள். தங்களின் தகுதிக்கு அருகதையான புகழ்தான் நிலைத்து நிற்குமென்பதையும் அருகதையற்ற புகழ், மழை காலத்தில் காளான் முளைப்பது போல் முளைத்துப் பின்பு ஒரு நொடியில் மறைந்துவிடும் என்பதையும் அவர்கள் உணர்வார்கள். எனவே, புகழானது தங்களுக்குப் பின்னால் வந்துகொண்டிருக்க வேண்டுமேயன்றி அவற்றைத் தாங்கள் பின்தொடர்ந்து விரட்டிக்கொண்டு செல்வது இழிவுடைத்து என்று அவர்கள் எண்ணுவார்கள்.

ஆனால், அற்பப் புகழ்களை விரட்டிச் செல்லுபவர்களோ பெரும்பாலும் தங்களையே தாங்கள் பெரிதும் விளம்பரப்

படுத்திக் கொள்வார்கள். தங்கள் ஒரு கூட்டத்தில் பேசிய செய்தியைத் தாங்களே 'ஒரு நிருபர்' என்ற புனைபெயருடன் செய்தித்தாள்களுக்கு அனுப்பிவைப்பார்கள். உண்மையான புகழ் படைத்தவர்களாகத் தாங்கள் இருந்தால் செய்தித்தாள் குறிப்பெடுப்போர் அவர்களின் வீட்டுவாயிலில் வந்து காத்து நின்று அவர்களின் வாயிலிருந்து உதிரும் சொற்களை முணியே போன்று பொறுக்கிச் செல்வார்களென்பதையும் அவற்றைச் செய்தித்தாள் ஆசிரியர்கள் நான் முந்தி நீ முந்தி என்று தங்களின் செய்தித் தாள்களில் வெளியிடுவார்களென்பதையும் அவர்களின் செய்தி அன்றைச் செய்தித்தாளில் வராவிட்டால் அதனை வெளியிடாத செய்தித்தாளின் தரமே குறைந்துவிட ஏதுவாகும் என்பதையும் அவர்கள் உணர்வதில்லை.

மற்றொரு புதுமை என்னவென்றால் அவர்கள் தாங்களே தங்களுடைய புகைப் படத்தை எடுத்துத் தங்களின் பேச்சுடனோ அல்லது கட்டுரையுடனோ வெளியிடுவதற்குச் செய்தித் தாள்களுக்கு அனுப்பி வைப்பதுதான். காந்தியடிகளிடம் ஓர் ஆங்கில ஓவியர் வந்து அவரைப் படம் தீட்ட விரும்புவதாகக் கூறியதும் 'உங்கள் முன் 'போஸ்' கொடுத்துக் கொண்டு என்னால் வெறுமனே மணிக்கணக்காக உட்கார்ந்திருக்க இயலாது' என்று கூறி மறுத்துவிட்டார் அவர். 'தங்களைப் புகைப்படம் பிடிப்பதற்காவது அனுமதியுங்கள்' என்று அவர் காந்தியடிகளை வேண்டிய பொழுது 'என்னுடைய வேலைகளுக்கு இடையூறின்றி உங்களால் அதனைச் செய்ய இயன்றால் செய்து கொள்ளுங்கள். ஆனால், நீங்கள் படம் எடுப்பதற்காக உங்களின் முன் நான் நிற்க இயலாது' என்று கூறிவிட்டார். காந்தியடிகள் ரோமன் ரோலந்தைப் பார்க்க ஸ்விட்ஸர்லாந்து சென்றபொழுது அவர் போட்டோவுக்கு நிற்பதில்லை என்று கேள்வியுற்றிருந்த செய்தித்தாள் நிருபர்கள் அவரைப் படம் எடுப்பதற்காக ரோமன் ரோலந்தின் வீட்டுக்கு முகப்பிலுள்ள தோட்டத்தில் புதர்களினூடே மறைந்திருந்து அவரைப் படம் பிடித்துத் தங்களின் செய்தித்தாளில் வெளியிட்டார்கள். அவரின் புகைப்படத்தைத் தங்களின் செய்தித்தாளில் வெளியிட்டதால் தங்களின் செய்

தித்தாளின் மதிப்பு மிகுந்தது என்று அவர்கள் கருதினார்கள். உண்மையான புகழ் என்றால் இதுதான். இதனை புகழ்வேட்டைக்காரர்கள், விளம்பரப் பேர்வழிகள் உணராதது வருந்தத்தக்கதாகும். ஆனால், அதைவிட மிகவும் வருந்தத்தக்கது என்னவென்றால் அவர்கள் ஒருபோதும் பெருவாழ்வோ அல்லது புகழ்வாழ்வோ வாழமாட்டார்கள் என்பதேயாகும்.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்.

பிற் குறிப்பு :—மடல் நீண்டுவிட்டது. எனவே, இத்துடன் நிறுத்தியுள்ளேன். உன்னுடைய கேள்விக்கு அடுத்த மடலில் விளக்கம் பகர்கின்றேன். கேட்ட கேள்விக்கு நேரிடையாகப் பதில் கூறாது எதெதையோ சுற்றிக்கொண்டு வருவதைக் கண்டு நீ வருத்தப்பட மாட்டாய் என்று நம்புகிறேன். உன்னுடைய கேள்விக்கான பதிலுக்குரிய பீடிகைதான் இது.

## 27

அன்புள்ள அருட்செம்மல் !

உன்னுடைய மடல் வரும்பொழுது என்னுடன் ஒரு நண்பன் உரையாடிக்கொண்டிருந்தான். அவனே தான் இப்பொழுதே பெரும் தலைவனாகிவிட்டதாகக் கருதிக்கொண்டு என்னுடன் பேசிக்கொண்டிருந்தான். அவனிடம் நான் உன்னுடைய கடிதத்தைக் காட்டி 'இதனைப்பார். என் நண்பன் அருட் செம்மல் உனக்கே அறிவுரை பகர்வதுபோன்று இம்மடல் அமைந்துள்ளது' என்று கூறி அவனிடம் அதனைக் கொடுத்தேன். அவன் அதனைப் படித்துவிட்டு என்னிடம் அதனைத் திருப்பித்தந்தான். அவன் அதனைப் படிக்கும் பொழுதே அவனுடைய மனோநிலையை அறிய விரும்பி அவனுடைய முகநிலையைக் கவனித்தேன். அவனுடைய முகத்தில் ஓர் அசட்டுப் புன்னகை மட்டும் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. அதைப்பற்றி அவனுடைய கருத்து என்னவென்று வினவினேன். அவன் வாய்திறந்து யாதொன்றும் கூறாத போதினும் மீண்டும் ஓர் அசட்டுப் புன்னகையை உதிர்த்தான். அவனிடம் நானும் எவ்வளவோ கூறிவிட்டேன். நீ பெரும் தலைவனாகிப் பிறருக்கு உதவி செய்து புகழ்மாலைகளைப் பெறுவதற்குமுன் நீ உன்னையே அதற்குத் தகுதிப்படுத்திக்கொள். உன்னுடைய கல்வி, ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றை உயர்த்திக்கொள். மேலும் உனக்கு ஒரு நிலையான வருமானத்தை உண்டுபண்ணிக் கொள். உன் குடும்பத்தினர் வறுமையில் உழலும்பொழுது நீ என்னவோ உலகத்தார்க்கு உதவி செய்யப் போவதாகக் கூறித் தெருத்தெருவாக அலைந்து தேவையில்லாத வேலைகளில் ஈடுபட்டுழல்வது சரியன்று. உன்னுடைய முதல் உதவி உனக்கும் உன் குடும்பத்தினருக்காகவுமே இருக்க வேண்டும்.

அறங்களிலெல்லாம் பெரும் அறம் ஒருவன் தன்னுடைய வயோதிகத் தாய் தந்தையர்களையும், தன்னுடைய மனைவி மக்களையும் காப்பதற்காகப் பாடுபடுவதுதான். ஆனால் அதற்காகச் சில செல்வந்தர்கள் போன்று தங்களின் ஒருசிறு மூச்சைக்கூடப் பிறருக்காகச் செலவழியாது தன்னலமே பெரிதெனக் கொண்டு, பணம், பணம் என்று பேயாய் அலைந்து திரிவது பெருந் தவறு. நீ உனக்கு ஒரு நிலையான வருமானத்தை உண்டுபண்ணிக் கொள்வாயாயின் அதற்குமேல் உனக்கு எஞ்சியுள்ள நேரத்தை நீ பொது வேலைகளில் செலவிடலாம். அவ்விதம் செய்தால் நீ நேரிய முறையில் பொது வேலைகளில் ஈடுபட ஏதுவாகும். அதனால் உன்னுடைய பேரும் புகழும் பெருகும். உன்னுடைய நேர்மையானது மக்களுக்கு இப்பொழுதில்லாவிட்டாலும் பின்பு தெரியவரும் பொழுது அவர்கள் உன்னைத் தங்களின் தலைவனெனத் தேர்ந்தெடுத்துக் கொண்டாடுவார்கள்.

ஆனால் பொது வேலையில் ஈடுபடும் சிலருக்கு அவர்களின் வருமானத்திற்கான வழி பொது வேலையாகவே இருக்கிறது. அவர்கள் தங்களை மூடிக்கொண்டிருக்கும் பொதுநலத் திரையைக் கிழித்தெரிந்தோமானால் அவர்களினுள்ளே தன்னலப் பிசாசு கோர நர்த்தனம் செய்துகொண்டிருப்பதைக் காணலாம். இப்படி மக்களை ஏய்த்து அவர்களைச் சுரண்டி வாழ்பவர்கள் ஒருசில காலத்திற்குத் தலைவர்களாய் இருக்கலாம். ஆனால் நீடித்து ஒருபோதும் இருக்க இயலாது.

மேலும் நீ பெருந் தலைவனாக விரும்புவது பாராட்டத் தக்கதுதான். ஆனால், அதற்காக இப்பொழுதே பெருந் தலைவனாகிவிட்டதாக எண்ணிக்கொண்டும் அதற்கான தகுதி உனக்கு ஏற்கனவே ஏற்பட்டுவிட்டதாகக் கருதிக்கொண்டும் தருக்கித் திரிவது தவறு. வானமளாவிய பொற் கோபுரத்தை எழுப்ப விரும்பின் அதற்கான கடைக்காலிடவும் அதற்கான பொருள்களைத் தயார்படுத்தவும் வேண்டுமல்லவா? சில பனைமரக் கைகளையும் தென்னங் கிடுகுகளையும்

வைத்துக்கொண்டு பொற்கோபுரம் நிறுவ இயலுமா? சிறு குடில்தானே கட்ட இயலும். 'பல்லக்கு ஏற; ஆசையுண்டு. உன்னி ஏறச் சீவனில்லை' என்றால் எவ்வாறு பல்லக்கு ஏறுவது? என்று நான் அவனிடம் கூறினேன். அவன் மீண்டும் ஓர் அசட்டுப் புன்னகையை உதிர்த்தான். அது அறியாமைப் புன்னகையோ அல்லது ஏளனப் புன்னகையோ நானறியேன்: இவ்வாறு இளைஞர் சிலர் இருக்கின்றனரே, இவர்களைப்பற்றி நான் என்ன கூறுவது?

என்னுடைய மடலைப் படித்ததிலிருந்து இவ்விஷயம் பற்றி உன்னுடைய கருத்தே என்னுடைய கருத்தும் என்பதை நான் சொல்லாமலேயே நீ விளங்கி இருக்கலாம். நான் முன்முடங்கலில் கேட்ட கேள்விக்கு அடுத்த மடலிலாவது விளக்கமான பதில் எழுதுவாய் என்று பெரிதும் ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமுள்ளேன்.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

# 28

அன்புள்ள அறிவண்ணல்!

உன்னுடைய கருத்தும் என்னுடைய கருத்தும் இது பற்றி ஒன்றுபட்டிருப்பது கண்டு பெரிதும் மகிழ்வுறுகிறேன். உன் நண்பன் ஒருவனைப்பற்றி எழுதியிருந்தாய். அதைக் கண்டதும் நான் முன்பொரு தடவை ஒரு பெரிய மனிதரைக் காணச் சென்றபொழுது நடந்த நிகழ்ச்சி ஒன்று என் நினைவுக்கு வந்தது. நான் அவரைக் காணச் சென்றபொழுது அவருடைய வீட்டின் வரவேற்பு மன்றத்தில் யாரோ ஓர் இளைஞர் வீற்றிருந்தார். அவரைப் பார்த்ததும் 'இன்னார் வீட்டிலிருக்கின்றாரா' என்று வினவினேன். 'அண்ணனையா கேட்கிறீர்கள்? அவருடைய தம்பிதான் நான்' எனக் கூறித் தம் அண்ணனைப்பற்றிப் பெரிதும் புகழத் துவங்கிவிட்டார். 'சரி, தயைகூர்ந்து உள்ளே சென்று நான் வந்திருப்பதாகக் கூறுங்கள். வெளியில் வேறு அலுவல்களும் இருக்கின்றன' என்று கூறி அவரை உள்ளே அனுப்பிவைப்பதற்குள் எனக்குப் பெரும்பாடாய்ப் போய்விட்டது. உலகில் இப்படிப்பட்ட மனிதர்களும்தான் இருக்கின்றார்கள். பிறருடைய புகழில், பிறருடைய நிழலில் அவர்கள் வாழ்வதில் இன்பம் காண்கின்றார்கள். 'இன்னாருடைய தம்பிதான் நான்' என்று நாம் கேட்காமலேயே அவர்கள் தங்களை நமக்கு அறிமுகப்படுத்திக் கொள்கிறார்கள். அதற்கு மாறாக, இன்னாருடைய அண்ணன் நான் அவர் என்று, அவர்களின் அண்ணனை மக்கள் சொல்லுமாறு அவர்கள் தங்களை உயர்வுபடுத்திக்கொள்வார்களாயின் அவர்களின் வாழ்வு எவ்வளவோ போற்றத்தக்கதாயிருக்கும் என்பதை அவர்கள் உணர்வதில்லை. இப்படிப்பட்ட மனிதர்களை நாம் என்னவென்று கூறுவது?

அது போகட்டும். இப்பொழுது நான் இம் மடலில் ஒருவன் தலைவனுவதற்குத் தேவையான பண்பாடுகள் என்னவென்பதை எழுதவேண்டுமென்று ஏற்கனவே முடிவு செய்துவிட்டேன். எனினும், இடையிடையே என்னென்னவோ சிந்தனைகளெல்லாம் வந்து குறுக்கிடுகின்றன. அதற்காக நீ என்னை மன்னிப்பாய் என்று நம்புகின்றேன்.

தலைமைத்தனம் என்ருலே மற்றவர்களுடன் ஒத்து நடந்தோ அல்லது அவர்களுக்கு முன்சென்ருே வழி காட்டுவது என்றுதான் பொருள்படும். ஆனுல் தலைவர்களைப் பார்த்தோமானுல் பல்வேறு திறப்பட்டவர்கள் இருக்கின்ருர்கள். வெளிப்பார்வைக்கு அவர்கள் வெவ்வேறு வகையினராகத் தென்பட்டாலும் அவர்களின் அடிப்படைப் பண்பாடுகள் ஒன்ருக இருப்பதைக் காணலாம். காந்தியடிகளும் ஜின்னுவும் இரு வேறு துருவங்கள் போன்று நம் பார்வைக்குத் தென்பட்ட போதினும், அவர்கள் இருவரும் மக்களிடம் மறைந்துகிடக்கும் ஆற்றலை வெளிக்கொணர்ந்து அவர்களுக்கு வழிகாட்டிச் செல்வதில் வெவ்வேறு முறைகளைக் கையாண்டபோதினும் மக்களின் அன்பைப் பெறவேண்டும், மக்கள் தங்களின் கருத்துக்களுக்கு விருப்பத்துடனும், அறிவுடனும், திறமையுடனும் செயலாற்றவேண்டும் என்று அவர்கள் கொண்ட அடிப்படை எண்ணம் ஒன்றேயன்றி வேறில்லை. இக்கட்டத்தில் வைத்து, காந்தியடிகள் ஜின்னுவை ஒரு தடவை சந்தித்தபொழுது, 'நீங்கள் முஸ்லிம்களை மெஸ்மரிஸத்தால் கட்டுப்படுத்திவிட்டீர்கள்' என்று கூறியதும் அதைக் கேட்டு ஜின்னு, காந்தியடிகளை நோக்கி, 'நீங்கள் ஹிந்துக்களை ஹிப்னுடிஸத்தால் கவர்ந்துவிட்டீர்கள்' என்று கூறியதும், அதைக் கேட்டு இருவரும் சிரித்ததும், எனக்கு நினைவு வருகிறது.

மனித இயல்பை நன்கு உணர்ந்து அதற்கேற்றவண்ணம் செயலாற்றி, அவர்களின் ஆசையை அவர்களைக் கண்டுபிடித்து, அது உருவாகும் வண்ணம் சரியான முறையில் வழிகாட்டி, அவர்கள் மனம் சோர்ந்திருக்குங்கால் ஊக்கமொழிகள் கூறி, அவர்களை வெற்றி நகர் நோக்கித் திறமையுடன் நடத்திச் செல்பவனே உண்மையான தலைவனுவான்.

தலைவனாக விரும்பும் ஒவ்வொருவனும் மனித இயல்பை நன்கு அறிந்தவனாக இருக்கவேண்டும். ஒவ்வொரு மனிதனுடைய உள்ளின் உள்ளேயும் ஒருவித ஆசை மறைந்துகிடக்கின்றது. அந்த ஆசையை உருவாக்குவதற்காகவே மனிதன் இங்குமங்கும் ஓடிச் செயலாற்றுகின்றானே யன்றி, அந்த ஆசை மட்டும் இல்லாவிட்டால் அவன் ஒருபோதும் செயலாற்றமாட்டான். பெட்ரோல் இல்லாது கார் ஓடாதது போன்று இந்த ஆசை என்ற பெட்ரோல் இல்லாது மனித இயந்திரமும் வேலை செய்யாது: ஆதலின் நாம் ஒருவனிடம் வேலை வாங்க விரும்பின், அவனுடைய தேவையை நாம் எடுத்துரைத்து அவன் நாம் விரும்பும் இன்ன செயலைச் செய்வானாயின் அவனுடைய தேவை நிறைவுபெறலாம் என்பதை அவனுக்குத் திறமையுடன் எடுத்துரைக்கவேண்டும். அதற்கு மாறாக 'நான் இன்ன இன்ன செயல்கள் நடைபெற வேண்டுமென்று விரும்புகிறேன்' என்று கூறின், 'போடா, போ, உனக்கென்ன நான் வேலைக்காரனா?' என்று கூறிவிட்டுச் சென்றுவிடுவான். எனவே, உண்மைத் தலைவர்கள் என்பவர்கள் பிறர்மீது தாங்கள் அதிகாரம் செலுத்துவதாகவோ, தங்களின் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக அவர்களைத் தாங்கள் பயன்படுத்திக்கொள்வதாகவோ அவர்கள் உணருமாறு ஒருபோதும் நடந்துகொள்ளமாட்டார்கள். அவர்களின் நலனுக்காகவே தாங்கள் பாடுபடுவதாகக் காட்டிக்கொள்வார்கள். 'நாங்கள் உங்களின் ஊழியன்' என்று கூறுவார்கள். ஆனால், மக்களோ அவர்களைத் தங்களின் தலைவர்களாக ஆக்கிவிடுவார்கள்.

என்னுடைய இக்கருத்தை நீயும் ஆதரிப்பாய் என்று நம்புகிறேன். ஐயம் ஏற்படின் எழுது. நாம் இருவரும் அதனை அலசி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவோம்.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்.

## 29

அன்புள்ள அருட் செம்மல்!

தலைவர்க்கான பண்பு பற்றி நீ என்னவோ பிரமாதமாக எழுதுவாய் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த எனக்கு உன்னுடைய மடல் பெரிதும் ஏமாற்றத்தைத்தான் தந்தது. உன்னுடைய மடலைப் படிக்கும்போது தலைவனாக விரும்புகிறவன் தன்னை மக்களின் ஊழியன் என்று கூறி அவர்களை ஏமாற்றி அவர்களுக்குத் தலைமை தாங்க வேண்டுமென்றல்லவோ கூறுவது போன்றுள்ளது. இவ்வாறு கூறுகின்றவன் எப்பொழுதாவது தலைவனாவானா? அப்படி ஒரு வேளை தலைவனான போதினும் அவனுடைய தலைமைத்தனம் நீடித்து நிற்குமா? இதனை நீயே சற்று யோசித்துப்பார்.

போலி நடிப்பும் நயவஞ்சகத் தன்மையும் எப்பொழுதாவது நற்பலன்களை நல்கி இருக்கின்றனவா? தன்னலமே கருத்திற்கொண்டு மக்களுக்குத் தொண்டு செய்வதாகச் சிலர் கூறி முன் வந்து, சில நாட்கள் அவர்களுக்குத் தலைமை தாங்கிய போதினும் பின்னர் அவர்களின் தன்னலத் திரை கிழித்தெறியப்பட்டு, அவர்களின் உருவம் வெளிப்படுத்தப்பட்டு அவர்கள் தலைமைப் பதவியிலிருந்தும் விரட்டியடிக்கப்படுவதை நீபார்த்ததில்லையா? பலரைச் சில காலம் ஏமாற்றலாம்; சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம்; எல்லார்ரையும் எல்லாக் காலங்களிலும் ஏமாற்றிக்கொண்டிருக்க இயலாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன் கூறிய இறவா வரம் பெற்ற பொன்மொழி உனக்குத் தெரியாதா என்ன? தெரிந்திருந்தும் தெரியாததுபோல் இவ்வாறு நீ எழுதி இருப்

பது தான் எனக்கு விந்தையினும் விந்தையாய் உள்ளது. அல்லது நான் தான் உன்னுடைய கருத்தைத் தவருகப் பொருள் செய்து கொண்டேனே என்பதையும் நான் அறியேன். தயவுசெய்து உன் கருத்தைச் சிறிது விளக்கமாக எழுது.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

## 30

அன்புள்ள அறிவண்ணல்!

என் மடலை நீ இத்துணைத் தவறாகப் பொருள் கொண்டு விடுவாய் என்று நான் கனவிலும் எண்ணவேயில்லை. ஆனால் உன் மடலைக் கண்டதும் தான் சிறிது விளக்கமாக முன்பு எழுதி இருந்தால் நன்றாய் இருந்திருக்குமே என்று எண்ணலானேன். நான் முன் மடலில் தலைவர்களாக விரும்புபவர்கள் 'நாங்கள் உங்களின் ஊழியர்கள் என்று மக்களைப் பார்த்துக் கூறுவார்கள். ஆனால், மக்களோ அவர்களைத் தங்களின் தலைவர்களாக ஆக்கி விடுவார்கள்' என்று குறிப்பிட்டிருந்தது அவர்கள் அவ்வாறு போலி நடிப்பு நடித்து, பசப்பு மொழிகள் பேசித் தலைவர்களாகி விடவேண்டும் என்று ஒரு போதும் பொருளல்ல. அவர்கள் உளப்பூர்வமாக அவ்வாறு எண்ணவேண்டும், கூறவேண்டும். ஏனெனில், மக்களின் ஊழியன்தான் அவர்களின் தலைவனாவான்' என்ற பொன்மொழியை நீ கேள்விப்பட்டதில்லையா?

மேலும் தலைவன் என்பவன் மக்களின் ஊழியனாகவே உண்மையில் உழைக்கவேண்டும். அவர்களின் கவலைச் சுமைகளையெல்லாம் தன் தோள் மீது தூக்கிப் போட்டுக்கொண்டு அவன் அல்லும் பகலும் அயராது பாடுபடவேண்டும். அவன் பொது நலம் என்ற பீடத்தில் தன்னலம் என்பதனைப் பலி கொடுத்து விட வேண்டும். தன்னலம் தலைதூக்க அவன் அனுமதிப்பானாயின் அவன் இவ்வுலகில் தலைவனென ஒருபோதும் தலைதூக்க இயலாது.

மக்கள்மீது அவன் அளவற்ற முறையில் அன்பு செலுத்த வேண்டும். அவ்விதம் அவன் அன்பு செலுத்தினால்தான்

அவர்கள் அவன்மீது அவ்விதமே அன்பு செலுத்தி அவனைத் தங்களின் தலைவனென உச்சிமீது வைத்துக் கொண்டாடுவார்கள். அவர்கள் அவனைத் தங்களின் உயிர் நண்பன் என்று கருதுமாறு செயலாற்றவேண்டும். அவ்விதம் செய்யும் பொழுது எவ்விதப் பிரதி பலனையும் எதிர்பாராது எவ்விதத் தன்னலத்தையும் மனத்திற் கொள்ளாது அவர்கள் மீது மாசு மறுவற்ற அன்பு செலுத்திச் செயலாற்ற வேண்டும். ஆனால், இதனைத்தான் பெரும்பாலோர் செய்யமாட்டார்கள். அவர்களின் பொதுநலத் தொண்டின் அடிப்பீடத்திலே தன்னலப் பேய் ஒளிந்து கொண்டிருக்கும். மக்கள் மீது போலி அன்பு செலுத்தி நேசிப்பதைவிட உண்மை அன்பு செலுத்தி நேசித்தால் என்ன? மக்களை நேசிக்கத்தான் செய்கின்றோம். அது ஏன் உதட்டளவிலே உள்ள நேசமாக இருக்கவேண்டும்; அது ஏன் உள்ளத்தளவுள்ள நேசமாக இருக்கக்கூடாது என்பதை அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. அவ்விதம் செய்தால் என்ன குறைந்து விடுகிறது? அதற்கு மாறாக அளவற்ற ஆதாயமல்லவோ ஏற்படுகிறது என்பதை அவர்கள் நினைவு கூர்வதுமில்லை. தன்னலம் கருதிப் பொது வேலைகளில் ஈடுபடுவதனால் அதிகமான இழப்பு ஏற்படும்பொழுது பொதுநலமே தன்னலமாகக் கருதிப் பொது வேலைகளில் ஈடுபடுவதனால் அதிகமான நன்மையும் ஆதாயமுமல்லவோ அவர்களையறியாமல் அவர்களை வந்தடைகின்றன என்பதை அவர்கள் அறியாதது வருந்தத்தக்கதாகும்.

உண்மையான தலைவன் யாரெனில், மக்களின் நலனே தன்னுடைய நலனாகக் கருதி அவர்கள் சிரிக்கும்பொழுது சிரித்து அழும்பொழுது அழுது அவர்களின் இன்ப துன்பங்களில் முழுமனத்துடன் பங்கு கொண்டு செயலாற்றுகின்றவன்தான். அவ்விதம் செய்யாது அதற்கு மாற்றமாகச் செயலாற்றுபவன் தலைமைப் பதவிக்கே அருகதை அற்றவன் என்றுதான் நான் கூறுவேன். காந்தியடிகள் முதன் முறையாகத் தமிழ்நாடு போந்ததும் இங்குள்ள உழவர்கள் முழங்காலளவு துணி உடுத்திக் கொண்டு வயல்களில் உழுது பயிரிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு அவர் மதுரையில் வைத்

துத் தாம் உடுத்தி இருந்த ஆடைகளைத் துறந்து இன்று முதல் தாமும் ஏழை உழவர்கள் போன்றே உடை உடுத்தப் போவதாகக் கூறி அவ்விதமே தம் வாழுநாள் முழுவதும் உடை உடுத்திக் கொண்டதில் சாதாரணக் கவர்ச்சியா இருக்கின்றது என்று எண்ணிக்கொண்டாய். இவ்வாறு செய்த அவரை இந்தியாவின் ஏழைமக்கள் தங்களின் உற்ற நண்பர் என்றும் அருந்தலைவர் என்றும் கொண்டாதிருப்பார்களா, என்ன? ஆப்ரஹாம் லிங்கனை அமெரிக்க மக்கள் தங்களின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் என்ன? வானத்திலிருந்து தங்களுக்கு நீதி பகர்வோன் போன்றில்லாது தங்களைப் போன்று வாழ்ந்து, தங்களில் ஒருவனாக இருந்து, தங்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்பவனாக அவன் இருந்ததுதான்.

இக்கட்டத்தில் வைத்து என் பள்ளி வாழ்வில் நடந்த நிகழ்ச்சி ஒன்று என் நினைவுக்கு வருகிறது. மாவட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்ந்த காலை விளையாட்டு வெளியைச் சுற்றி மாணாக்கர்களாகிய நாங்கள் எல்லோரும் குழுமி நின்றோம். அக்காலை திடீரெனத் தூறத்துவங்கியது. அப்பொழுது கையிலே குடை வைத்திருந்த மாணாக்கன் ஒருவன் ஓடோடிச் சென்று தலைமை ஆசிரியரின் மீது தூற்றல் விழாது தன்னுடைய குடையைப் பிடித்தான். உடனே அந்தத் தலைமை ஆசிரியர் சிறிது சினத்தை வரவழைத்துக்கொண்டு, 'வேண்டாம், வேண்டாம். மற்றவர்களெல்லாம் மழையில் நனையும் பொழுது நானும் நனைந்தால் என்ன' என்று கூறிக் குடையை விட்டு ஒதுங்கி மற்றவர்கள் போன்று தானும் மழையிலே நனைந்து வீடுபோய்ச் சேர்ந்தார். இவ்வாறு நடந்து கொண்ட தலைமை ஆசிரியரை மாணாக்கர்கள் நேசிக்காமல் இருப்பார்களா, என்ன?

சில நாட்களுக்கு முன் ஒரு நண்பருடன் உரையாடிக் கொண்டிருக்குங்கால் தான் ஒரு தலைவரை ஒரு கூட்டத்திற்குத் தலைமை தாங்க அழைத்ததாகவும் அவர் அருந்துவதற்கென மேசை மீது பால் வைத்திருந்ததாகவும், அவர் கூட்டத்திற்கு வந்ததுதான் தாமதம்—அவர் செய்த முதல்வேலை மற்றவர்களெல்லாம் வெறுமனே இருக்கும் பொழுது தான்

மட்டும் அவர்களின் முன்னிலையில் பால் அருந்துவது ஒருபோதும் சரியாகாது என்று கூறி அதனை உடனே அப்புறப்படுத்துமாறு கூறியதாகவும் சொன்னார். உண்மைத் தலைவர்கள் மக்களின் அன்பைத் தங்கள்பால் ஈர்த்து நிற்பதற்காக இவ்வாறு செய்யும் பொழுது மற்றவர்கள் பிறர் முன்னிலையில் தாங்கள் மட்டும் அறுசுவை உணவுகளை உண்ணவும் உல்லாச இன்பங்களை அனுபவிக்கவும் செய்யின் அவர்களை மக்கள் எப்பொழுதாவது தங்களின் தலைவரென ஏற்றுக் கொள்வார்களா? ஒரு வேளை ஏமாந்து ஏற்றுக் கொண்டாலும் நீடித்து ஏற்றுக் கொள்வார்களா?

ஆதலின், எவன் தன்னைத் தலைவன் என்று கருதித் தருக்கி நின்று நான் தலைவன், நான் தலைவன் என்று பிதற்றிக் கொண்டு திரிகின்றானோ அவனை மக்கள் ஒருபோதும் தலைவனென ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதற்கு மாறாக 'நான் உங்களின் ஊழியன்' என்று கூறி எவன் தாழ்மையுடன் நடந்து திறமையுடன் செயலாற்றுகின்றானோ அவனையே தங்களின் தலைவனென ஏற்றுக்கொள்வார்கள். அவன் மக்கள் தனக்களித்தத் தலைமைப் பதவியைப் பெற்று ஒருபோதும் தருக்கித் திரியமாட்டான். அதற்கு மாறாக மக்கள் தனக்குப் பெரும் கௌரவத்தை அளித்திருப்பதாகவும் தன்னிடம் ஒரு மாபெரும் அடைக்கலப் பொருளை ஒப்படைத் திருப்பதாகவும் அவர்களைக் கௌரவப் பாதை வழியாக நடத்திச் சென்று வெற்றி நகரை அடையச் செய்வது தன்னுடைய தலையாய கடமை என்றும் உணர்ந்து அதனைச் சாதிப்பதற்கான ஆற்றலையும் அறிவையும் தனக்குத் தந்தருளுமாறு இறைவனிடம் இறைஞ்சுவான். ஏனெனில், அவன் செய்யும் ஒரு சிறு தவறினால் அவனைப் பின் தொடரும் பல்லாயிரக் கணக்கானோரின் விதி பாதிக்கப்படுமல்லவா?

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்.

## 31

### அன்புள்ள அருட்செம்மல்!

உன்னுடைய அருமைக் கடிதம் கிடைத்தது. அகமகிழ்ந் தேன். தன்னலத்தை மனத்திற்கொண்டு செயலாற்றுகின்ற வன் உண்மையான தலைவனாகமாட்டான், தலைவனாக நீடித்து இருக்க இயலாது என்பது பற்றி நாம் இருவரும் ஒருமித்த கருத்துள்ளவர்களாயுள்ளோம். அதேபோன்று எவன் தனக்கு வேண்டியவர்களுக்கும் உறவினர்களுக்கும் அதிகமான சலு கைகள் காட்டுகின்றானோ அவனும் உண்மையான தலைவனாக மாட்டான். அவனும் நீடித்துத் தலைமைப் பதவி வகிக்க இய லாது என்பதுதான் என் கருத்து. மற்றவர்களின் வயிற்றெரிச் சலின்மீது எவ்வளவு நாள்தான் ஒருவன் தலைமைப் பதவி தாங்க இயலும் என்று நான் கேட்கின்றேன். பாக்கிஸ்தானின் முதல் அமைச்சராக இருந்த குவாஜா நாஜிமுத்தீனுடைய வீழ்ச்சிக்கு அவர் அளவுக்கதிகமாகத் தம்முடைய உறவினர் களுக்கு அதிகாரங்களும் பதவிகளும் அளித்ததும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. உறவினர்களுக்கு அதிகமான அதிகா ரங்களும் பதவிகளும் சலுகைகளும் அளிப்பதனாலுள்ள பெரும் கேடுகள் என்னவென்றால் தகுதிவாய்ந்தவர்கள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றனர்; தகுதியற்றவர்கள் பெரும் பதவிகளில் வீற்றிருந்து தூங்கி விழுந்து கொண்டிருக்கின்றார்கள். அல்லது தங்களுக்குக் கிடைத்த பதவியைத் தவறான முறைகளில் பயன் படுத்திக் கொள்கின்றார்கள். அதனால் நிர்வாக ஊழல் ஏற்பட்டு அரசாங்கக் கட்டடமே ஆட்டம் கொடுத்து விடுகி றது. அதன்பின் என்ன? புரட்சிதான். அப்பொழுது யாரோ ஒருவன் திடீரெனத் தோற்றமளிக்கின்றான்; புரட்சிக்குத் தலைமை தாங்குகின்றான். மக்கள் அவனைத் தங்களின் தலைவ

னென ஏற்றுக்கொள்கின்றார்கள். இவ்வாறே ஆங்கிலப் புரட்சி ஒரு கிராம்வெல்லைத் தோற்றுவித்தது. பிரெஞ்சுப் புரட்சி ஒரு நெப்போலியனை உண்டுபண்ணியது. ஆனால், இவ்வாறு தங்களையே தாங்கள் தலைவர்களாகிக் கொண்ட தலைவர்களுக்கு ஏற்படும் பெரும் பிரச்சினை என்னவென்றால் தங்களுக்குப்பின் யார் தங்களின் வாரிசாக இருப்பர் என்பதே யாகும். கிராம்வெல்லின் மகனும் நீண்ட நாள் ஆளவில்லை. நெப்போலியனுடைய மகனோ அரியணைமீது ஏறக்கூட இல்லை.

தன்னலமே பெரிதெனக் கொண்டு தலைமை தாங்குகின்ற வர்கள் நாட்டில் நிர்வாக ஊழல்களையும் அதனால் புரட்சி யையும் தாம் ஏற்படுத்தி விடுகின்றார்கள். தங்களின் நண் பர்களுக்கும் உறவினர்களுக்கும் பெரும் பதவியை யளித்தால் அவர்கள் தங்களுக்கு உதவியாக இருப்பார்கள் என்று அவர் கள் எண்ணுகிறார்கள். அது தவறான எண்ணம் என்பதை யும் அதனால் பெரும்பாலான மக்களின் வெறுப்புக்களாகித் தங்களுக்கே தாங்கள் பெருந்தீமை செய்து கொள்கின்றார்கள் என்பதையும் அவர்கள் உணர்கின்றார்களில்லை. ஆனால், அதற்குமாறாக எல்லா மக்களையும் தங்களின் மக்களாகக் கருதி ஒர வஞ்சகம் இன்றிச் செயலாற்றி வருவார்களாயின் அவர்களை மக்கள் தங்களின் தந்தைபோன்று கருதி மரி யாதை செய்துவர மாட்டார்களா, என்ன? ஆப்ரஹாம் லிங் கனை அமெரிக்க மக்கள் தந்தை ஆப்ரஹாம் என்றும் காந்தி யடிகளை இந்திய மக்கள் பாபு என்றும் அழைக்கவில்லையா?

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

## 32

அன்புள்ள அறிவண்ணல்!

உன்னுடைய மடலில் ஒரு தலைவன் தன் கீழ்ப்பட்ட மக்கள் அனைவரையும் எவ்வாறு ஒரே கண்ணுடன் நோக்க வேண்டுமென்று எழுதி இருந்தாய். உண்மையான தலைவர் களென்போர் அவ்விதமே இருப்பார்கள். ஆனால், அதற்காக அவர்கள் தகுதியானவர் யார், தகுதியற்றவர் யார் என்ப தைப் பகுத்தறிந்து, தகுதியும் திறமையும் வாய்ந்தவர்களுக்கு உயர் பதவி கொடுக்கத் தவறிவிடக்கூடாது என்று நான் கருதுகிறேன். ஊழியம் செய்பவர்களின் வயதையும் ஊழி யம் செய்த ஆண்டையும் மட்டும் கவனத்திற் கொண்டு பதவி உயர்வளிப்பது எப்பொழுதும் விரும்பத்தக்கதல்ல. தலைவன் என்பவன் கழுகுக்கண் படைத்தவனாக இருக்க வேண்டும். எவ்வாறு வானிலே பறக்கும் கழுகு தரையிலே நடந்து செல்லும் கோழிக்குஞ்சைத் தன் கண்களால் கண்டு அதன்மீது ஒரே பாயச்சலாய்ப் பாய்ந்து உயரத் தூக்கிச் செல்கின்றதோ அதேபோன்று திறமைசாலிகளைக் கண்டு பிடித்து அவர்களுக்கு உயர் பதவி அளித்து நல்ல பயிற்சி நல்கத் தலைவன் என்னும் பெயருக்கு அருகதையுள்ளவன் ஒருபோதும் தயங்கக்கூடாது. ஆதலின், ஒரு தலைவனுடைய வேலை அவன் வசமுள்ள அலுவலாளர்களைப் பயன்படுத்திக் கொள்வது மட்டுமன்று; அலுவலாளர்களைத் தன் கழுகுப் பார்வையால் கண்டெடுத்து உண்டுபண்ணுவதுமாகும். இம்முறையையே இங்கிலாந்திலுள்ள கன்ஸர்வேடிவ் கட்சி யினர் பின்பற்றுகின்றார்கள். வருங்காலத்தில் திறமை வாய்ந்த அரசியல்வாதிகளாகத் திகழக்கூடிய இளைஞர்கள் எவரேனும் இருக்கிறார்களா என்று அவர்கள் பல்கலைக் கழ கங்களைத் துருவித் துருவி ஆராய்கின்றார்கள். அவ்விதம்

யாராவது கிடைப்பின் அவர்களைப் பொறுக்கி எடுத்து ஒரு கல்லூரியில் சேர்த்து, அவர்களை வருங்காலத்தில் சிறந்த அரசியல்வாதியாக்குவதற்கான நல்ல பயிற்சி அளிக்கின்றார்கள். அக்கல்லூரியில் அவர்கள் திறம்படப் பயின்று சிறப்புடன் வெளிவருவார்களாயின் அவர்களுக்கு ஆங்கிலப் பாராளுமன்றத்தில் ஓர் இடம் பெற்றுத்தரக் கட்சி முயல்கிறது. அவர்கள் அங்கு இடம் பெற்றபின் அப்பொழுது கட்சி அரசாங்கம் நடப்பின் உடனே தலைமை அமைச்சர் அவர்களுக்குப் பார்லிமெண்டரிச் செயலாளர் பதவியோ உதவிச் செயலாளர் பதவியோ கொடுத்து அவர்களுக்கு நிர்வாக அனுபவம் அளிக்கின்றார். பின்னர், அவர்கள் அமைச்சர்களாகவும், அரசாங்க தலைவர்களாகவும் ஆகிவிடுகின்றனர்.

உண்மையான தலைவர்களெல்லாம் இவ்வாறே செய்கின்றார்கள். ஆனால், அதற்காக அவர்கள் சிலருக்கு மட்டும் தனிச் சலுகை காட்டுகின்றார்கள் என்று நாம் அவர்களைக் குறை கூறக்கூடாது. அவர்கள் அந்நபர்களுக்குத் தனிச் சலுகை அளிப்பது அவர்களுக்காகவன்று. அவர்களின் திறமைகளுக்காகத்தான். காந்தியடிகள் நெஹ்ருவையும், ஜின்னா லியாகத் அலிகானையும், வின்ஸ்டன் சர்ச்சில் அந்தோனி ஈடனையும் தேர்ந்தெடுத்து அவர்கள்மீது தனி அன்பு செலுத்தினார்களென்றால் அவர்களின் திறமையை உணர்ந்து அவர்களைத் தங்களின் வாரிசாக்குவதற்கேயன்றி வேறில்லை, அவர்கள் அவ்வாறு செய்தது பொதுநலமேயன்றி வேறில்லை.

ஓர் உண்மைத் தலைவன் தகுதிக்கு மதிப்பளிக்கவேண்டுமேயன்றி வேறு எதற்கும் மதிப்பளிக்கக்கூடாது. அவ்விதம் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து ஒருவன் தன்னைச் சூழ வைத்துக்கொள்வானாயின் அவனைச் சூழவுள்ளவர்களைப் பார்த்த அடுத்தகணமே அவன் எப்படிப்பட்ட தலைவன் என்பதைப் பிறர் கூறாமலே நாம் விளங்கிக்கொள்ளலாம்.

ஆதலின், ஒரு தலைவன் தகுதியானவர்களுக்கு மதிப்பளித்து அவர்களைத் தன்வயப்படுத்திக்கொள்ளவேண்டு

மென்று நான் கூறுவதை நீயும் ஒப்புக்கொள்வாய் என்று நம்புகிறேன். தங்களின் நண்பர்கள், உறவினர்கள் என்பதற்காக உதவாக்கரைகளுக்கெல்லாம் உயர் பதவியளித்துத் தங்களைச் சூழ வைத்துக் கொள்வதை நானும் உன்னைப் போல்தான் வெறுக்கிறேன்.

ஆனால், சில தலைவர்கள் தகுதிவாய்ந்த இளைஞர்களைக் கண்டு அஞ்சி அவர்களைத் தலை கிளப்பவிட்டால் தங்களின் பதவிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அவர்களைத் தங்களின் கைப்பிடியிலிருந்து நழுவவிடாமலும் அதே பொழுதில் அவர்களைத் தங்களுக்கு நெருக்கமாக வைத்துக்கொள்ளாமலும் இருப்பதைக் கண்டுதான் எனக்குப் பெரிதும் வியப்பாக இருக்கிறது. தகுதியான இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து அவர்களுக்கு நல்ல பயிற்சி அளித்தால் அவர்கள் தங்களை அவர்களின் தலைவர் நாயகம் என்று உச்சிமீது வைத்துக் கொண்டாடமாட்டார்களா, என்ன? காந்தியடிகள் நெஹ்ருவுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து மதித்ததால் அவர் காந்தியடிகளின் தலைமைத்தனத்தைத் தூக்கி எறிந்துவிட்டுத் தான்தோன்றித் தலைவராக ஆகிவிட்டாரா, என்ன? காந்தியடிகள் ஹரிஜனச் சேரியில் வதிந்தபோதினும் அங்கு ஓடோடிப் போய் அவரிடம் ஆலோசனை கேட்டு வரவில்லையா? அதற்கு மாறாகக் காந்தியடிகள் அவரை மட்டந்தட்டி இருப்பின் நெஹ்ரு வெறுப்புற்று காந்தியடிகளின் தலைமைத் தனத்தைத் தூக்கி எறிந்துவிட்டு ஒரு புதுக் கட்சி அமைத்திருப்பாரா, மாட்டாரா என்று கேட்கிறேன். இதனைச் சிலர் உணராது செயலாற்றுவது தற்கொலை செய்துகொள்வதற்கு ஒப்பாகுமேயன்றி வேறில்லை. ஆனால் அவர்கள் இதனை உணர்வதில்லை.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்

## 33

அன்புள்ள அருட்செம்மல்!

உன்னுடைய கருத்துமிக்க மடல் வந்தது. அதில் நீ கூறியுள்ள கருத்துக்கள் அனைத்தும் என் மனத்திற்கும் பொருத்தமானவையாகவே இருக்கின்றன. சில தலைவர்கள் தங்களை அறிவின் இமயம் என்று எண்ணிக்கொண்டு தங்களுக்குக் கீழே உள்ளவர்களையெல்லாம் இழிவுக் கண்களுடன் நோக்கவும் அலட்சிய மனப்பான்மையுடன் பார்க்கவும் செய்கின்றார்கள். அதனால் அவர்களின் பகையை விலைக்கு வாங்கித் தங்களுக்கே தாங்கள் உலை வைத்துக் கொள்கின்றார்கள். ஆனால், மற்றும் சிலரோ தங்களின் கையில் அதிகாரம் இல்லாத பொழுது அமைதியும், அடக்கமும் வாய்ந்த நல்ல மனிதர்களாய் இருக்கின்றார்கள். ஆனால், அதிகாரம் அவர்களின் கைக்கு வந்ததும் அவர்கள் ஆணவமும் அட்டகாசமும் நிரம்பிய அரக்கர்களாகி விடுகின்றார்கள். அவ்வாறு ஆகித் தங்களுக்கே தாங்கள் அளப்பரும் தீமை இழைத்துக் கொள்கின்றார்கள். இப்படிப்பட்ட அறிவிலிகளை நானும் மற்றவர்கள் போன்று வெறுக்கத்தான் செய்கின்றேன்.

ஆனால், நீ ஒரு தலைவன் தன் கீழுள்ளவர்களைத் தனக்கு நெருக்கமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்னும் கருத்துப்பட எழுதி இருப்பதுதான் எனக்குச் சிறிது மயக்கத்தைத் தருகிறது. அவ்விதம் நெருக்கமாக வைத்துக்கொண்டால் அது அவர்களின் வலுவற்ற தன்மைகளை எல்லாம் அருகிலிருந்து பார்க்குமாறு செய்து அவர்களை இழிந்தவர்களாகத்

தோன்றுமாறு செய்யாதா? 'அதிக நெருக்கமாகப் பழகுவது அவமதிப்பைத்தான் வளர்க்கிறது' என்ற பழமொழியை நீயும் அறிந்திருப்பாய் என்றுதான் எண்ணுகின்றேன். இதற்கு நீ என்ன கூறுகின்றாய்?

தலைவன் எனப்பட்டவன் காட்சிக்கு எளியவனாகவும் கடுஞ் சொல் அல்லனாகவும்தான் இருக்கவேண்டும் என்பதை நான் அறிவேன். அவனுடைய கடமை தன்னுடைய ஊழியர்களிடமிருந்து வரக்கூடிய அறிக்கைகளைப் பற்றி மன நிறைவு பெறாது—ஏனெனில், அந்த அறிக்கைகளில் பெரும்பாலானவை அவற்றைத் தயாரிப்பவர்களின் மனோ நிலைக்கேற்ற வண்ணம் மிகைப்படுத்தப்பட்டோ, குறைக்கப்பட்டோ, திரிக்கப்பட்டோ தாம் இருக்கும்—நேரடியாகச் சென்று நிலைமைகளைக் கண்டு வரவேண்டும்தான். மேலும் தலைவன் எனப்பட்டவன் மக்களிடம் எழும்பி இருக்கும் அதிருப்தியைத் தன்னுடைய நுண்ணறிவால் முற்கூட்டியே அறிந்து தன்னிடம் அது பற்றிய குறைபாடுகள் வருவதற்கு முன் அவற்றினைக் களைவதற்குமுன் எச்சரிக்கையுடன் செயலாற்றக் கூடியவனாகவும் இருக்கவேண்டும்தான். அதற்காக அவன் மக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியதுதான். அவர்கள்மீது அன்பு செலுத்தி அவர்களின் அன்பைப் பெற வேண்டியதுதான். ஆனால், அவன் அவர்களுடன் மிகவும் அதிக நெருக்கமாகப் பழகினால் அவனால் அவர்கள்மீது அதிகாரம் செலுத்தி வேலை வாங்க இயலுமா? எல்லாம் 'வள வளா' என்று ஆகிவிடுமே என்று கருதுகின்றேன். நீயும் இது பற்றிச் சிந்தித்து எனக்குத் தெளிவான பதில் எழுது.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

## 34

அன்புள்ள அறிவண்ணல்!

மெக்கியவல்லி எழுதிய 'இளவரசன்' என்ற நூலைப்பற்றி நீ கேள்வியுற்றிருப்பாய். அதுவே அக்காலத்தில் சிலருக்கு அரசியல் வேதமாய் இருந்தது. அதிலே அவன் கூறியுள்ள கருத்துக்களும் கொள்கைகளும் கொடுமை நிரம்பியவையாகவும் அநியாயக்காரர்களால் பின்பற்றக் கூடியவையாகவும் இருந்தபோதினும் அதிலே சில நல்ல கருத்துக்களும் கொள்கைகளும் இல்லாமல் இல்லை. அதிலே அவன் ஓர் இளவரசன் தன்னை மக்கள் வெறுக்குமாறோ அவமதிக்குமாறோ நடந்து கொள்ளக் கூடாது என்று கூறுகின்றான். அவன் மக்களுக்குக் கொடுமை இழைத்து மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டானானால் அதன்பின் அவன் ஒவ்வொரு பொருளைப் பார்த்தும், ஒவ்வொரு மனிதனைப் பார்த்தும் அஞ்சவேண்டியதுதான் என்று கூறுகின்றான். அதன்பின் அவன் ஓர் இளவரசன் மக்களால் இழிவுக் கண்களால் நோக்கும் வண்ணம் நடந்து கொள்ளக்கூடாது என்று கூறுகின்றான். நீயும் இதே கருத்தையே கொண்டுள்ளாய் என்றும் எனவேதான் ஒரு தலைவன் மக்களுடன் அதிக நெருக்கமாகப் பழகக் கூடாது என்று கருதுகின்றாய் என்றும் எண்ணுகின்றேன். உன்னுடைய இக்கருத்துச் சிறந்த கருத்தேயாகும். முன் மடல் ஒன்றில் நான் ஒரு தலைவன் சிலரைத் தனக்கு நெருக்கமாக வைத்துக்கொள்ளவேண்டுமென்று கூறியிருப்பது பொதுமக்கட் கும்பலையன்று; தேர்ந்தெடுக்கப்பட்ட திறமையான சிலரைத்தாம் என்பதையும் நெருக்கமாக என்றால் மரியாதை எல்லைக் குட்பட்ட நெருக்கத்தோடுதான் என்பதையும் நீ அறிய வேண்டுகிறேன்.

தலைவன் என்பவன் மக்களின் அன்பையும் மரியாதையையும் பெறவேண்டியவன். மரியாதையில்லாத அன்பு மட்டுமோ அன்பு இல்லாத மரியாதை மட்டுமோ பெற்ருலும் அவனுடைய தலைமைத் தன்மை நிறைவுருது என்றே நான் கூறுவேன். அன்பும் ஓரளவு அச்சமுமே மரியாதையை உண்டுபண்ணக் கூடியது என்பதை அவன் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. ஆதலின் மக்களின் அன்பைப் பெற வேண்டுமென்பதற்காக அவன் யாரைக் கண்டாலும் பல்லை இளித்துக் கொண்டிருக்கவோ, மக்கள் தன்னைக் கண்டு அஞ்ச வேண்டுமென்பதற்காக எப்பொழுதும் கடுகடுப்பாக இருக்கவோ கூடாது. புன்முறுவல் பூக்க வேண்டிய பொழுது புன்முறுவல் பூக்கவேண்டும். கடுகடுப்பாக இருக்க வேண்டிய பொழுது கடுகடுப்பாக இருக்கவேண்டும். அவன் வாயிலிருந்து உதிரும் ஒவ்வொரு மொழியும் மிகவும் மதிப்பு வாய்ந்ததாயிருக்குமாகையால் அவன் ஒவ்வொரு மொழியையும் ஆழ்ந்து சிந்தித்து அளந்தே பயன் படுத்தவேண்டும். அவன் அதிகமாகப் பேசுவதை விட அதிகமாகக் கேட்கத்தான் வேண்டும். எனவே ரிஷிலு என்ற பிரெஞ்சு அரசியல் வாதியும் 'ஒரு நாட்டை ஒழுங்கான முறையில் ஒருவன் ஆள விரும்பினுல் அவன் அதிகமாகக் கேட்கவேண்டும்; குறைவாகப் பேசவேண்டும்' என்று கூறினுன். இதையறியாது சிலர் தாங்கள் அதிகமாகப் பேசினுல்தான் தங்களை மக்கள் மதிப்புடன் எண்ணிக் கொள்வார்களென்று எண்ணி அவ்வாறே பேசித் தங்களுக்கே தாங்கள் அவமதிப்பையும் இழிவையும் வாங்கித் தங்களையே தாங்கள் தலைமைப் பதவிக்கு அருகதையற்றவர்களாக ஆக்கிக்கொள்கின்ருர்கள். பேச்சு எண்ணங்களின் ஆற்றலைக் குறைத்து விடுகின்றது என்பதையும் அது மனவன்மையைக் குன்றச் செய்து விடுகின்றது என்பதையும் வாய்பேசாது மௌனமாக இருப்பது போன்று ஒருவனுடைய அதிகாரத்தை வலுப்படுத்துவது வேருென்றுமில்லை என்பதையும் அவர்கள் உணர்வதில்லை. ஆனுல், இதனை உலகப் பெரும் தலைவர்களானோர்களெல்லாம் நன்கு உணர்வர். உலகைக் கிடுகிடுக்கவைத்த நெப்போலியன் நன்கு உணர்வான். அமெரிக்க மகாதளபதி கிராண்ட் நன்கு உணர்வான். அமெரிக்க ஜனதிபதியாயிருந்த கூலிட்ஜ் நன்கு உணர்வான். பிரெஞ்சுப் பேரரசன் பதினுன்காவது லூயி

நன்கு உணர்வான். ஆனால், அதற்காக அவர்கள் எப்பொழுதும் வாய் பொத்தி இருந்தார்கள் என்பது பொருளன்று. சொல்ல வேண்டிய செய்தியைச் சொல்ல வேண்டிய ஆளிடம் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லிவிட்டு அதன்பின் வாய் பொத்தி இருந்தார்கள்; தேவையில்லாமல் பேசுகின்றவர்களின் வாயைப் பொத்தச் செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்களாயும் இருந்தார்கள் என்றுதான் பொருள். அவ்விதம் இருப்பதுதான் ஒரு தலைவன் மீது மக்களுக்குப் பயபக்தியையுண்டு பண்ணும். அந்தப் பயபக்தியைப் பெறுவதுதான் ஒரு தலைவனுக்கு இன்றியமையாத செயலாகும்.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்.

பிற் குறிப்பு :—ஓர் அரசனிடம் அவனுடைய ஊழியன் அதிகம் நெருங்காமலும் அதே பொழுதில் அவனை விட்டு அதிகத் தொலையில் இல்லாமலும் நடந்துகொள்ள வேண்டும். ஏனெனில், அரசன் தீக்கு நிகரானவன். அதிகம் நெருங்கினால் நெருங்கியவரைச் சுட்டுப் பொசுக்கி விடுவான். அதிகம் தொலைக்குச் சென்றுவிட்டால் அந்த ஊழியனால் குளிர்காய இயலாது போய்விடும் என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார். அவ்வாறே ஒரு தலைவனும் மக்களுடனும் நடந்துகொள்ளவேண்டும் என்பது என் துணிபு. அதிகம் அவர்களுடன் நெருங்கி உறவாடினால் அவமதிப்பும் அதிகம் தொலைக்குச் சென்றுவிட்டால் ஆதரவின்மையும் அவனுக்கு ஏற்பட்டுவிடும்.

## 35

அன்புள்ள அருட்செம்மல் !

உன்னுடைய விளக்கம் எனக்குப் பெருமகிழ்வைத்தந்தது. ஆனுல், ஒரு தலைவன் மக்களின் வெறுப்பைப் பெறக்கூடாது என்பதற்காக எல்லாச் செயல்களிலும் வளவளா என்று இருந்தால், கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டிக்காமலும் தண்டிக்க வேண்டிய இடத்தில் தண்டிக்காமலும் இருந்தால் மக்கள் அவன் மீது எவ்வாறு பயபக்தி செலுத்துவார்கள் என்றே எனக்கு விளங்கவில்லை. காந்தியடிகள் அன்பு உருவினர்தாம். ஆனுல் ஒழுங்கு பற்றிய வரையில் அவர் மிகவும் கண்டிப்புக்காரராகத்தானே இருந்தார். தாம் சரியெனக் கண்டதைக் கோடானுகோடிப் பேர் எதிர்த்த போதினும் அவர் அதற்குத் தலை சாய்த்துப் போகவில்லையே. தாம் அநியாயம் என்று கண்டதை வாய்விட்டுக் கூற அஞ்ச வில்லையே. அவ்வாறு கூறிஞல் மக்களின் வெறுப்புக்கு ஆளாக வேண்டுமே என்று அவர் சற்றேனும் எண்ணிஞரா? இதைப்பற்றி நீ என்ன கூறுகின்ருய்?

மேலும் உன்னுடைய கடிதத்தில் ஒருதலைவன் மக்களுடன் அதிகம் நெருங்கிப் பழகாமலும் அதே பொழுதில் அவர்களை விட்டு அதிகத் தொலைவில் இல்லாமலும் நடந்து கொண்டால்தான் அவர்கள் அவனை மதிப்பார்கள் என்றும் கூறியுள்ளாய். ஒரு தலைவனை மக்கள் மதிப்பதற்கும் அவமதியாதிருப்பதற்கும் அந்த ஒரு தன்மை மட்டும் போதுமா? வேறு சில தன்மைகளும் வேண்டாவா? இவை பற்றி நீ உன்னுடைய் அடுத்த மடலில் எழுதுவாய் என்று நம்புகிறேன்.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

## 36

அன்புள்ள அறிவண்ணல்!

உனக்கு எழுந்த ஐயம் நியாயமான ஐயமேயாகும். ஒரு தலைவன் தன்னை மக்கள் 'நல்லவன்' என்றும் 'இரக்க சிந்தனையுள்ளவன்' என்றும் கருதுமாறு நடந்து கொள்ளவேண்டும். ஆனால், எல்லாச் செயல்களிலும் எல்லாச் சமயங்களிலும் நல்லவனாகவும் இரக்க சிந்தனையுள்ளவனாகவும் அவன் நடந்து கொள்வானாயின் நல்லவர்களல்லாத தீயோர்களிடமிருந்து அவனுக்குப் பெரும் தீங்கு விளையும் என்பதில் ஐயமில்லை. ஆதலின் அவன் நல்லவனாக இல்லாமல் எப்படி இருக்கவேண்டுமென்பதையும் அறிந்திருக்க வேண்டும். அந்த அறிவை அவன் சமய சந்தர்ப்பத்திற்கேற்பப் பயன்படுத்தவோ பயன் படுத்தாதிருக்கவோ செய்யவேண்டும். தனக்குக் கீழுள்ளவர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளும்பொழுது, வேலை நிறுத்தமோ கலகமோ செய்ய முற்படும்பொழுது அவன் சிறிது இரக்கமற்ற முறையிலும்தான் நடந்து கொள்ளவேண்டும். அப்பொழுது அவன் இரக்க சிந்தனையைக் காட்டினானானால் அவன் தனக்கே தான் தீங்கிழைத்துக் கொண்டான் என்றுதான் பொருள். தனக்கு மட்டுமன்று பிறருக்கும் தீங்கிழைத்து விட்டான் என்றும் நான் கூறுவேன். ஏனெனில் அச்சமயத்தில் அவன் காட்டும் இரக்கம் குழப்பத்தை அதிகப்படுத்துமேயன்றி ஒருபோதும் அதனைக் குறைக்காது. ஆதலின் அக்காலை அவன் நல்லது செய்வதற்காகக் கடுமையானவனாகவே இருக்க வேண்டும். குழப்பத்தை அதிகரிக்கச் செய்யும் நல்ல தன்மையை விடக் குழப்பத்தை அடக்கும் கெட்ட தன்மை மேலானது என்றுதான் நான் கூறுவேன்.

காந்தியடிகள் அகிம்சாமூர்த்திதான். எனினும் அவர் ஹிம்சா மூர்த்தியாகவும் இருந்துள்ளார். ஒருதடவை சபர் மதி ஆசிரமத்தில் ஒரு கன்றுக்குட்டி நோய்வாய்ப்பட்டது. எவ்வளவோ மருத்துவம் செய்தும் அதன் நோய் தீரவில்லை. மருத்துவர்கள் அது பிழைக்காது என்றே கூறிவிட்டார்கள். ஆனால் அந்தக் கன்றுக்குட்டிக்கு அடிக்கடி வலிப்பு வந்து அதனால் அது படும் பாடு காணச் சகிக்க இயலாததாய் இருந்தது. அதைக்கண்டு பெரிதும் மனம் பதைபதைத்த காந்தியடிகள் அதனைச் சுட்டுக் கொன்றுவிட்டால் கூட நல்லதாகிவிடுமே. அதற்கு அத்துன்பத்திலிருந்தும் விடுதலை நல்கியதாகுமே என்று கூறினார். அதுதானாக இன்னும் சில நாட்களில் செத்துவிடும். அதனை வீணே கொன்று மக்களின் வெறுப்புக்கு ஆளாகக்கூடாது என்று சர்தார் வல்லபாய் பட்டேல் கூறினார். எனினும் காந்தியடிகள் கேட்கவில்லை. ஒரு வேட்டைக்காரனை அழைத்து வருமாறு ஆள் அனுப்பினார். அவனும் வந்தான். அதனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதைவிட டாக்டரை அழைத்து ஊசிமூலம் நஞ்சேற்றிக் கொன்றுவிடுவது நல்லது என்று ஆலோசனை கூறினான். அவனுடைய அந்த யோசனை காந்தியடிகளுக்கு நன்கு பிடித்தது. ஒரு டாக்டரை வரவழைத்து அவ்விதமே செய்யச் செய்தார். கன்றுக் குட்டிக்கும் வேதனையிலிருந்து நிரந்தர விடுதலை நல்கினார்.

இதிலிருந்து தீமையை நீக்குவதற்குக் கடுமையை மேற்கொள்வது நல்லது என்பதை நீயும் ஒப்புக் கொள்வாய் என்று நம்புகின்றேன். அவ்விதம் குழப்ப நிலையின் பொழுது கடுமையை மேற்கொள்ளாதவர்கள் பிறர் செய்யும் கொடுமைகளை ஒரு போதும் திருத்த இயலாத வலுவற்றவர்களாக ஆகிவிடுவார்கள். அவர்கள் தலைமைப் பதவி தாங்குவதற்கே அருகதையற்றவர்களாவார்கள். ஆனால், இங்கு ஓர் எச்சரிக்கை. அவர்கள் கடுமையானவர்களாக இருக்கவேண்டுமேயன்றிக் கொடுமையானவர்களாக இருக்கக்கூடாது.

மேலும் ஒரு தவற்றினைத் தான் தவறு என்று நன்றாக அறியும் பொழுது அதனைத் திருத்துவதில் பிடிவாதம் காட்டுவதும் கண்டிப்புக் காட்டுவதும் முதலில் மக்களிடம்

சிறிது வெறுப்பையும் எதிர்ப்பு உணர்ச்சியையும் உண்டு பண்ணத்தான் செய்யும். ஆனால், தவற்றினை அவர்களுக்கு விளங்கும் வண்ணம் எடுத்துரைத்துத் திருத்த முற்பட்டால் மக்கள் நாளடைவில் வழிக்கு வந்துவிடவும் அவன்மீது அன்பு செலுத்தவும் மதிப்புவைக்கவும் துவங்கிவிடுவார்கள்தாம். அந்த மாதிரிச் சூழ்நிலையில் சிறிது ராஜ தந்திரத்துடன் செயலாற்ற வேண்டும் என்று மட்டும் கூறுவேன்.

மடல் நீண்டுவிட்டது. ஆதலின் உன்னுடைய அடுத்த வினாவுக்கு அடுத்த மடலில் பதில் தருகிறேன்.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்.

# 37

அன்புள்ள அருட் செம்மல்!

உன்னுடைய மடலில் நீ என்னுடைய கருத்தை ஏற்றுக் கொண்ட போதினும் மக்களிடம் காணப்படும் தவற்றினைத் திருத்த முற்படும் பொழுது சிறிது ராஜ தந்திரத்துடன் நடந்து கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது எனக்குச் சரியாகப் பொருள் விளங்கவில்லை. தவறு என்று நாம் ஒன்றை நன்கு விளங்கும் பொழுது அதனைத் தவறு என்று மக்களின் முகத்திற் கெதிராகக் கூறி அவர்களை அத்தவற்றிலிருந்து திருத்த முற்படுவதற்கு என்ன ராஜதந்திரத்தைப் பயன் படுத்த வேண்டி இருக்கிறது? ஒரு தலைவன் நேர்மையுடனும், நீதியுடனும் நடந்து கொள்ளும்பொழுது அவனை எந்த ஆற்றலினால்தான் என்ன செய்துவிட இயலும் என்று கேட்கிறேன். இந்து இனத்தில் பரவிக் கிடந்த தீண்டாமை என்னும் நோயைக் காந்தியடிகள் நீக்க முற்பட்ட பொழுது அவர் இந்துக்களைப் பார்த்து தீண்டாமையை நீங்கள் விட்டொழிக்க வேண்டும் என்று நேருக்கு நேராகக் கூறினாரே யன்றி அதனை மழுப்பிக் கூறவில்லையே. சந்தர்ப்ப வாதிகளல்லவோ சந்தர்ப்பங்களுக்கேற்ற வண்ணம் தங்களின் கொள்கைகளைத் திருத்திக் கொண்டும் மாற்றிக் கொண்டும் சிறுவர்கள் கிளித்தட்டு விளையாடுவது போன்று அங்குமிங்கும் பாய்ந்து கொண்டிருப்பார்கள். அவர்களால் எச்செயலையும் ஆற்ற முடியாததோடு எந்தப் பெரு வெற்றியையும் அடைய முடியாமல் போய்விடுமே. அவர்களின் நிலைமை வெளவால் போன்று ஆகிவிடுமே. யாவரும் அவர்களை ஐயக் கண்களோடு மட்டுமல்லாது இழிவுக் கண்களுடனுமல்லவோ நோக்குவார்கள். இவ்வாறு இருப்பதுதானா ராஜதந்திரம் என்று நீ கூறுகின்றாய்? அல்லது பாம்பு போன்று உடலையும்

தலையையும், மீன் போன்று வாலையும் பெற்றுள்ள விலாங்கு என்ற மீன் நீரில் நீந்திச் செல்லுங்கால் பாம்பைச் சந்திப்பின் தானும் பாம்பு இனம் என்று காட்டிக் கொள்வதற்காகத் தன்னுடைய தலையைக் காட்டுமாம். அதன் பின் அது மீனைச் சந்திப்பின் தானும் மீன் இனம் என்று காட்டிக்கொள் வதற்காகத் தன்னுடைய வாலைக்காட்டுமாம். இப்படிப் பட்ட ஏமாற்று வித்தைக்குத்தான் நீ ராஜதந்திரம் என்று கூறுகின்றாயா? விரைவில் விளக்கம் தேவை.

அன்புள்ள நண்பன்

அறிவண்ணல்

அன்புள்ள அறிவண்ணல்!

'ராஜதந்திரம்' என்று நான் குறிப்பிட்டதை நீ தவருகப் பொருள் கொண்டது கண்டு நான் வருந்துகிறேன். ராஜதந்திரம் என்பது ஏமாற்று வித்தையென்ருே, நயவஞ்சகத் தன்மையென்ருே, அல்லது சந்தர்ப்பவாதிகளின் அயோக்கியத் தன்மையென்ருே ஒருபோதும் பொருள்படாது. அவ்வித இழிதன்மைகளைப் பெற்றுள்ளவன் ஒருபோதும் தலைவனுக முடியாது என்பதை நானும் அறிவேன். ஏனெனில், தலைமைத்தனம் என்பது ஒருவனுடைய தகுதியை அறிந்து, அவன் தங்களுக்குத் தலைமைதாங்கி நடத்திச் செல்லத் தகுதிவாய்ந்தவன் தான் என்பதை நன்கு உணர்ந்து அவ்னுடைய திறமையில் நம்பிக்கையும் அவன் மீது மதிப்பும் வைத்து மக்களால் அவனுடைய தலைமீது சூட்டப்படும் மணிமகுடமேயன்றி வேறில்லை. அந்த மணிமகுடத்தை அணிந்துகொள்ளத் தகுதியற்றவன் தலைவனுக முடியாது. ஒரு வேளை தலைவனுன போதினும் அதிலிருந்து விரைவில் விரட்டப்பட்டு விடுவான்.

ஒரு சீர்திருத்தத்தைப் புகுத்த முற்படும் பொழுது வெகு எச்சரிக்கையுடன் செயலாற்ற வேண்டியது அவசியமாகும். அவ்விதம் எச்சரிக்கையின்றி ஆப்கனிஸ்தானில் சீர்திருத்தங்களைப் புகுத்த முயன்ற அமீர் அமானுல்லாவின் கதி யாதாயிற்று என்பதைப் பார்த்தாயா? ஆனுல், அதைவிட அதிகமான சீர்திருத்தங்கள் துருக்கியில் கமால் அத்தாதுர்க்கினுல் எவ்வாறு வெற்றியுடன் கொணரப்பட்டு நிறைவேற்றப்பட்டன என்பதையும் பார். அவர் அமானுல்லா போன்று அவசரப்பட்டு எல்லாச் சீர்திருத்தங்களையும் ஒரேயடியாக மக்

கள் தலை மீது கொண்டுவந்து குவித்தாரா, என்ன? இல்லை. புதிய சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் நாளடைவில் மக்களின் மனத்தை மாறுதல் அடையுமாறு செய்து அவற்றை ஒன்றின்பின்ஒன்ருகப் புகுத்திஞர். தனக்கு ஒரு சில வகுப்பார்களிடமிருந்து வலுவான எதிர்ப்பு ஏற்படும் என்பதை நன்கு உணர்ந்து அதனைச் சமாளிக்கப் படையினருக்குச் சம்பள உயர்வு அளித்து அவர்களுக்கு மனநிறைவு நல்கி அவர்களை எப்பொழுதும் தம் கைப்பிடியில் வைத்திருந்தார். எனவே, எந்த எதிர்ப்பையும் தலைகிளப்பவிடாது அவரால் அடக்க இயன்றது. மக்களும் அஞ்சி அவர் கொண்டு வந்த சீர்திருத்தங்களை ஏற்றுக் கொண்டனர். ஆனுல், அமானுல்லாவோ அவசரப்பட்டு அடுக்கடுக்காகச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்ததோடல்லாது படையினருக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடாது அவர்களின் பகையையும் விலைக்கு வாங்கிக்கொண்டார். எனவே, அவர் வீழ்ச்சியடைந்ததில் எவ்வித வியப்புமில்லை.

ஆதலின், ஒரு தலைவன் ஒரு சீர்திருத்தத்தைப் புகுத்து முன் ஆத்திரப்படாமலும் அவசரப்படாமலும் மெதுமெதுவாக அதனை மக்களின் மனத்தில் புகுத்தி அவர்களுக்கு மனமாறுதலை உண்டுபண்ணி அதன்பின் அதனைத் தாங்களாகவே ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதே காந்தியடிகளின் முறையாக இருந்தது என்பதை நீ அறியாது எழுதியுள்ளாய். வலுக்கட்டாயத்தின் மீது புகுத்தப்படும் சீர்திருத்தங்கள் நீடித்து நிற்கா என்பதையும் அவை ஹிம்சையாகும் என்பதையும் அவர் நன்குணர்வார். துருக்கியில் கமால் அத்தாதுர்க் கொண்டுவந்த சீர்திருத்தங்கள் பல இன்று நிலைத்து நிற்கின்றனவா என்பதைப் பார். ஆதலின் ஒரு தலைவன் தான் கொணரும் சீர்திருத்தம் நிலைத்து நிற்க வேண்டும் என்று விரும்பிஞஞயின் பெரும்பாலான மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் அவர்களின் மனத்தில் மாறுதலை உண்டு பண்ணிக் கொண்டு அதனைப் புகுத்த வேண்டுமேயன்றி வலுக்கட்டாயமாக அதனைப் புகுத்த முற்பட்டால் அவனுடைய தலைமைப் பதவிக்கு ஆபத்தேயன்றி வேறில்லை.

ஆதலின், ஒரு தலைவன் கூடியமட்டும் மக்களின் வெறுப்பைப் பெருமலிருப்பதற்கு முயலவேண்டும். தான் ஒரு

செயலை நிறைவேற்றுவதில் கண்டிப்புக் காட்டலாம் என்று தோன்றும் பொழுது அவன் கண்டிப்புக் காட்டவும் கண்டிப் புக் காட்டக்கூடாது என்ற நிலை ஏற்படும் பொழுது சற்றுத் தாழ்ந்து போகவும் செய்வது பெரிய ராஜதந்திரமாகும். அவ்விதமில்லாது எப்பொழுதும் விறைப்பாகவும் கண்டிப் பாகவும் இருப்பது கொடுமைக்காரன் என்ற பெயரை விலைக்கு வாங்கித் தனக்கே தான் இழிவையும் அழிவையும் உண்டுபண்ணிக் கொள்வதாகும்.

ஒருவன் மக்களுடன் நேரிடையாகத் தொடர்புகொண் டும் தன்னுடைய உற்ற நண்பர்களால் தொடர்புகொண் டும் மக்களின் மனோ நிலையாகிய நாடியை அடிக்கடி பார்த்த வண்ணம் செயலாற்றவேண்டும். எந்த இடத்தில் பலவீனம் தென்படுகின்றதோ அந்த இடத்தை ஒழுங்கு படுத்த அவன் ஒரு சிறிதேனும் காலம் தாழ்த்தக்கூடாது. அவன் அவர் களின் இன்ப வேளைகளில் அவர்களின் மத்தியில் இருக்கத் தவறிவிட்டாலும் அவர்களின் துன்ப வேளைகளில் அவர்க ளின் மத்தியில் இருந்து ஆறுதல் கூறவும் இன்னல் களையவும் ஒருபோதும் தவறக்கூடாது. கூடுமான வரையில் அவர்கள் ஒவ்வொருவரையும் கண்டு அவர்களின் துயர் விசாரித்து அவர்களுக்கு ஆறுதல் கூறவேண்டும். அவர்கள் அவனைக் காண அவனுடைய இருப்பிடத்திற்கு வரின் அவர்கள் ஒவ் வொருவரையும் அவன் தன் கண்களால் பார்த்துப் புன்முறு வலுடன் வரவேற்கவேண்டும். அவ்விதம் அவன் செய்வானா னால் அங்கு அவர்கள் எல்லோரும் அமர்ந்திருக்க இடமில் லாத போதினும் அங்கு அவர்கள் வருவதற்கு முன் அங்குள்ள நாற்காலிகளில் ஏற்கனவே வந்த சிலர் அமர்ந்திருந்த போதி னும் பின்னால் வந்தவர்கள் மகிழ்ச்சியுடன் சிறிது நேரம் நின்று கொண்டிருக்கவோ, காத்திருக்கவோ செய்வார்கள். அவ்விதம் அவன் அவர்களை வரவேற்காவிடின் ஏன்தான் இங்கு வந்தோம் என்று பெரிதும் வெறுப்படைவார்கள். வெளியே வந்ததும் 'அவன் நம்மை அவமதிக்கா விட்டாலும் அவன் நம் விஷயத்தில் அதிக அக்கறை செலுத்தவில்லை.' என்று வெறுப்புடன் கூறுவார்கள். இதற்கு ஒரு தலைவன் ஒரு போதும் இடம் கொடுக்கக்கூடாது.

ஆதலின், அவர்களின் நலனில்தான் அக்கறை செலுத்து வதாக அவர்களை உணரச் செய்வதற்கு முதல்வழி அவர்கள் ஒவ்வொருவரையும் தன் கண்களால் கண்டு புண்முறுவலுடன் வரவேற்பது. இரண்டாவது வழி அவர்கள் கூறுவதைக் காது தாழ்த்திக் கேட்பது, அவர்களின் நலன்களைச் சிறுசிறு கேள்விகள் மூலம் வினவி அவர்களை அதிகமாகப் பேசச் செய்வது. இவ்வித முறையையே ஜின்னு மேற்கொள்வாராம். அவரை யாரும் காணச் செல்லின் அவர்களின் நலன்களைச் சிறுசிறு கேள்விகளால் விசாரித்து அவர்கள் கூறுவதைக் காது தாழ்த்தி 'ஹூம்' காரம் செய்து கேட்டுக் கொண்டிருப்பாரர்ம்.

இவ்வாறு கேட்டபின் ஒரு தலைவன் அவர்களின் நியாயமான தேவைகளைப் புன்முறுவலுடன் நிறைவேற்றி வைக்க வேண்டும். அவ்விதம் நிறைவேற்றி வைக்கும் பொழுது இவற்றை உங்களுக்குச் செய்தளிப்பதற்காகத் தானே நான் இங்குக் காத்துக் கொண்டுள்ளேன். இதைத் தவிர எனக்கு வேறு வேலை என்ன? இவற்றை நீங்கள் முன்பே கூறி இருப்பின் முன்பே செய்தளித்திருப்பேனே என்று உள்ளத்தில் தோய்ந்த ஒரு சில உண்மை மொழிகள் கூறி அவர்களை வழி அனுப்பி வைப்பின் எவ்வளவோ நற்பலன்கள் ஏற்படும். ஏனெனில், அவர்களின் வேண்டுதல்கள் அவர்களுக்கு முக்கியமானவையாகும். இல்லையேல் அவர்கள் அவனை அணுகவேண்டிய தேவை இல்லையல்லவா? ஆதலின், அவற்றை அவனும் தனக்கு முக்கியமானவையாகக் கருதித் தன்னாலியன்ற எல்லா வழிகளாலும் அவர்களுக்கு உதவி செய்யத் தயாராக இருப்பதாகக் காட்டின் அவர்கள் அவனைத் தங்களின் உற்ற நண்பனாகக் கருதி அன்பு செலுத்துவர்.

ஒவ்வொரு மனிதனும் புனிதமானதாகத் தன்னுடைய உள்ளத்திலே வைத்துப் பாதுகாக்கக்கூடிய பொருள் தன் மதிப்பாகும். இந்தத் தன்மதிப்பானது ஓர் இழிந்த மனிதனிடம் கூட இருக்கின்றது. ஒரு பிச்சைக்காரனைப் பார்த்து நீ இழிவாகவோ, இகழ்ச்சியாகவோ, கேலியாகவோ, கடுமையாகவோ யாதெனும் ஒரு மொழியைக் கூறின் அவன் தன் வெறுப்பை வெளிக்காட்டாத போதினும் தன்னுடைய

உளத்திற்குள்ளேயாவது உன்னை வெறுப்பான் என்பதில் ஐய மில்லை. ஆதலின், ஒரு மனிதனைப் பார்த்து இதைச் செய் அதைச் செய் என்று அதிகாரத்துடன் ஆணையிடுவதைவிட அன்புடன் ஆணையிடுவது எவ்வளவோ நற்பலன்களை நல்கும். ஒரு வேலையை ஒருவனிடம் கொடுத்து அதனை அவன் மகிழ்வுடனும் ஊக்கத்துடனும் செய்யச் செய்வதற்குச் சிறந்த வழி 'இது மிகவும் முக்கியமான வேலை. இதனை நீ திறம்படச் செய்வாய் என்று நம்புகிறேன்' என்று கூறுவதாகும்.

அவ்வாறு கூறுவதனால் அவ்வேலையை அவனும் ஒரு முக்கியமான வேலையாகக் கருதவும் அதனைச் செய்வதில் அவன் இன்பமும் பெருமிதமும் கொள்ளுமாறும் செய்கிறது. அப்படிக் கூறும் அளவுக்கு அது அத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லாதிருப்பின் 'தயைகூர்ந்து எனக்காக இதனைச் செய்கின்றாயா' என்று கூறவேண்டும். அவ்விதம் கூறுவதனால், தான் தன்னுடைய தலைவனுக்குப் பேருதவி செய்வதற்காக ஒரு பெருமித உணர்ச்சி அவனுக்கு ஏற்பட வழி உண்டாகிறது.

முடியாத வேலையையும் முடித்து வெற்றிக் கொடி நாட்ட வேண்டுமென்ற அவா ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் ஆழ்ந்து கிடக்கின்றது. ஆதலின், ஒரு தலைவன் ஒருவனைப் பார்த்து 'இது மிகவும் சிரமமான வேலை. இதனை வெற்றிகரமாக ஆற்றி முடிப்பதற்குப் பெரும் திறமை வேண்டும்; பெரும் சிரமத்தை மேற்கொள்ளவேண்டும். எனினும், நீ இதனை ஆற்றி முடிப்பாய் என்பது எனக்குத் தெரியும்' என்று கூறின் அதனால் மிகவும் நல்ல பலன் விளையும்.

மேலும் ஒருவனைப் பார்த்து 'இவ்வேலைகளெல்லாம் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. ஆதலின், அவற்றை நீ கவனி' என்று கூறுவதைவிட 'உன்னிடம் உண்மையைச் சொல்லப்போனால் இந்த வேலை கவனிப்பாரற்று இழிந்த நிலையில் ஆகிவிட்டது என்றே கூறவேண்டும். இப்பொழுது உனக்கு உன் திறமையை வெளிப்படுத்த ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதனை ஒழுங்காக்கி உருவாக்குவாயானால் உனக்கு நல்ல பெயர் ஏற்படும்' என்று கூறுவாயானால் அவன்

மனிதர்கள் போல—இல்லை, பூதகணங்கள் போல வேலை செய்யத் துவங்கிவிடுவான் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு மனிதர்களின் இயல்புளை அறிந்து அவற்றிற் கேற்றவண்ணம் செயலாற்றுபவனே சிறந்த தலைவனுவான். இதனையறியாது நாம் நேர்மையாக நடந்தால் போதும் என்று கருதி தடித்தனமாக நடந்தால் தலைமைத் தனம் பறி போய்விடும்.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்.

## 39

அன்புள்ள அருட்செம்மல் !

உன்னுடைய அஞ்சல் வரும் பொழுது நான் என் நண்பன் ஒருவனுடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அவன் ஒரு தொழில்நிலையத் தலைவன். உன் மடல் வந்ததும் அதனைப் படித்துவிட்டு அவனிடமும் காட்டினேன். முன் கடிதத் தொடர்பு தெரியாததால் அவன் சிறிது மயங்கினான். அதன் பின் நம்மிருவரிடையே நடந்து வரும் கடிதத் தொடர்பு பற்றி விளக்கமாக எடுத்துரைத்தேன். அப்பொழுது அவன் இம்மடல் எனக்கே எழுதப்பட்டுள்ளது போன்றல்லவோ தோன்றுகிறது ஒரு தலைவன் மனிதர்களின் இயல்புகளை அறிந்து அவற்றிற் கேற்ற வண்ணம் நடந்து வீண் பகை ஏற்படாமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்று உன்னுடைய நண்பர் கூறுகின்றாரே, அவ்வித மானால் மனிதர்களுடன் பழகும் பொழுது எத்தனையோ சிக்கலான பிரச்சினைகளெல்லாம் எழுமே, எத்தனையோ சச்சரவுகளையெல்லாம் தீர்த்துவைக்க வேண்டி ஏற்படுமே, சிலரை வேலையிலிருந்தும் நீக்கவேண்டி ஏற்படுமே, அப்பொழுது மனமுறிவு ஏற்படவும் வெறுப்பு ஏற்படவும் வழி ஏற்படுமே. அவர் என்னவோ நூல்களில் காணப்படும் தத்துவங்களைப் படித்து விட்டல்லவோ உனக்கு ஞானாசிரியன் போன்று அறிவுரை பகர்வது போன்றுள்ளது. நூல்களில் காணப்படும் தத்துவங்கள் என்னவோ பின்பற்ற இலகுவானவை போன்றுதாம் காணப்படும். ஆனால் அவற்றைச் செயலாற்றும் பொழுதல்லவோ அவை நாம் எண்ணியது போன்று அவ்வளவு இலகுவானவையல்ல என்பது தெரிய வரும். அவற்றை நாம் செயலாற்றமுற்படும் பொழுது எத்தனையோ சிரமங்களெல்லாம் எதிர்ப்பட்டு நம்மை முறியடிக்க முனைந்து நிற்குமே, இது என்னு

டைய அனுபவமாயிற்றே. இதை அறியாது அவர் எழுதி இருக்கின்றாரே. ஒரு வேளை அவரும் அனுபவத்தின்மீது எழுதி இருக்கலாம். ஆதலின் மேற்குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளில் ஒரு தலைவன் எவ்வாறு யுக்தியுடன் நடந்து கொள்வது என்பதுபற்றி எழுதிக் கேள் என்று கூறினார். அவர் கூறியது என் மனத்திற்கும் சரியாகத்தான் தென்பட்டது. ஆதலின் அருட் செம்மல், அவை பற்றி எனக்கு உன்னுடைய அடுத்த மடலில் தெளிவான பதில் எழுதுவாய் என்று நம்புகிறேன். உன்னுடைய கடிதத்தை உன்னுடைய அனுமதியின்றி அவனிடம் காட்டியதற்காக நீ என்னை மன்னிப்பாய் என்று நம்புகிறேன். அவன் உன்னைப்போன்று என்னுடைய உயிர் நண்பன்.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்.

## 40

அன்புள்ள அறிவண்ணல் !

நீ உன்னுடைய மடலில் என்னுடைய முந்தைய மடலை உன்னுடைய நண்பர் ஒருவரிடம் காட்டியதாகவும் அவர் அது பற்றிப் பல ஐயங்களைக் கிளப்பியதாகவும் அவற்றிற்கு விளக்கம் வேண்டியும் எழுதி இருந்தாய். உன்னுடைய நண்பருக்கும் உனக்கும் ஏற்பட்டுள்ள ஐயங்கள் நியாயமானவையே என்பது என் கருத்து. அவற்றிற்கு நான் வறட்டுத் தத்துவங்களைப் பதிலாக எழுத விரும்பவில்லை. நான் கண்ட அனுபவ உண்மைகளைத்தாம் எழுத விரும்புகின்றேன். முன் நான் எழுதியிருந்த கருத்துக்களும் நான் கண்ட அனுபவ உண்மைகள் தாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசியல் தலைவர்களாயிருந்த போதினும் தொழில் தலைவர்களாயிருந்த போதினும் சமுகத் தலைவர்களாயிருந்த போதினும் அவர்கள் பின்பற்ற வேண்டிய முறைகள் பெரும்பாலும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. ஆதலின் நான் இம்மடலில் கூறவிரும்பும் முறைகள் உனக்கும் பொருந்தும் என்று நம்புகிறேன்.

சரி; ஒரு மனிதன் தவறு செய்துவிட்டான் என்று வைத்துக்கொள். அவனை எவ்வாறு அத்தவற்றினை மீண்டும் செய்யாது திருத்துவது? ஒரு தலைவன் என்பவன் இவ்விஷயத்திலும் இராஜ தந்திரத்தை மேற்கொள்ள வேண்டும். தவற்றினைத் திருத்துவது என்பது ஒரு தலைவன் செய்ய வேண்டிய இன்பமற்ற வேலைதான். அதனால் மனக்கசப்புகளும் வெறுப்புகளும் ஏற்படும்தான். எனினும், திறமையுடனும் அனுதாபத்துடனும் செயலாற்றுவானாயின் அதனால் அவன் மக்க

ளுக்கு எவ்வளவோ நன்மை செய்தவனாவான். அவர்களின் உள்ளத்திலே தெளிவையும் ஊக்கத்தையும் தன்னம்பிக்கையையும் ஊட்டி அவர்களைத் திறமையுடன் செயலாற்றுபவர்களாய் ஆக்கிவிடுவான். அவ்வாறு செய்யாது அவர்கள் தங்களின் தவறுகளைத் திரும்பத் திரும்பச் செய்து போலி வேலை செய்பவர்களாக இருக்குமாறு அனுமதித்துக் கொண்டிருப்பவன் தலைவனாயிருப்பதற்கே அருகதையற்றவனாவான்.

தன் கீழ் வேலை செய்பவர்கள் செய்யும் தவறுகளைத் திருத்துவதென்றால் அவர்களை அழைத்து வரச் செய்து 'ஏன் இவ்வாறு செய்தாய்? ஏன் அவ்வாறு செய்தாய்? இனிமேல் இப்படிச் செய்' என்று உத்தரவிடுவதன்று. இவ்விதம் செய்வதால் வீண் பகை விளையுமே யன்றி ஒழுங்காக எதுவும் நடைபெறாது. ஆதலின், ஒரு தலைவன் தன் கீழ் வேலை செய்பவர்கள் செய்யும் தவறுகளைத் திருத்துவதற்கு முன் அத்தவறுகளைப் பற்றிய முழு விவரங்களையும் அறிந்துகொள்ள வேண்டும். அரை குறை விவரங்களோடு பிறரைத் திருத்த முற்படின் அவனுக்கு அவமானத்தில்தான் முடியும். அவ்வாறு அதற்கான முழு விவரங்களையும் சேகரித்தபின் அவ்விதம் நிகழ்வதற்கு யார் காரணம் என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அவ்விதம் சிந்திக்கும் பொழுது, தானே அவற்றிற்கு மூல காரணம் என்று சில பொழுது தென்படவும் செய்யலாம். அப்பொழுது அவன், தன்னையேதான் குறை கூறித் திருத்திக் கொள்ள வேண்டுமேயன்றி அநியாயமாகப் பிறர் மீது குறை கூறி அவர்களைக் கண்டிக்கக் கூடாது, சில தலைவர்கள் தங்களின் கீழ் வேலை செய்பவர்களுக்குப் போதிய வசதி செய்து கொடுக்கமாட்டார்கள். அதன் காரணமாக வேலை போலி வேலையாயிருப்பின் அவர்கள் மீது காய்ந்து விழுவார்கள். அல்லது அவர்களுக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் உத்தரவிடமாட்டார்கள். திடீரென அவர்களை அழைத்து அதைச் செய்தாயா என்று வினவுவர். எதை என்று அறியாது வேலை செய்பவர்கள் விழிக்கும் பொழுது அவர்கள்மீது சீறி விழுவார்கள். இவ்விதம் தான் செய்யும் தவற்றினுக்குப் பிறரைக் குறை கூறுவதோ, அவர்கள் மீது சீறிப்பாய்ந்து சினப்பதோ அநியாயத்தினும் அநியாயம் என்று நான் கூறுவேன்.

நல்லது; ஒரு தவற்றினைப் பற்றிய முழு விவரங்களையும் அறிந்த பின் ஒரு தலைவன் அத்தவறு இழைத்தவரை மற்றவர்கள் மத்தியில் வைத்துக் கண்டித்து இழித்துரைத்துவிடக் கூடாது. அவ்விதம் செய்யின் அவனுடைய தன்மானம் பெரிதும் பாதிக்கப்பட்டு அவன் அத்தலைவனை வெறுக்கவும் புகைக்கவும் நேரிடும். ஆதலின் அவனை ஓர் அமைதியான இடத்திற்குத் தனியாக அழைத்துச் சென்று அவனுடைய தவற்றினை எடுத்துக் காட்டி அவனைத் திருத்தவேண்டும். அமைதியான இடம் என்று நான் கூறியதன் காரணம் கூச்சல் நிரம்பிய இடத்தின் நடுவே வைத்து அவனைத் திருத்த முற்படின் தாங்கள் கூறுவது மற்றவரின் காதில் நன்ருக விழும் பொருட்டு இருவரும் சிறிது உரத்துப் பேச வேண்டி இருக்கும். அப்பொழுது இருவரும் தங்களையறியாமல் உணர்ச்சி வ்யபட்டுச் சின மொழிகள் பரிமாறிக் கொள்ள வேண்டி ஏற்பட்டுவிடும் என்பதற்காகவேயன்றி வேறல்ல.

அவனுடன் பேச்சைத் துவங்கும் பொழுது அவன் உண்மையில் தவறே இழைத்திருந்த போதினும் அவனைக் கண்டிக்கும் தோரணையில் பேச்சைத் துவங்கக்கூடாது. ஆனுல், அதற்கு மாருக அன்பான கேள்விகள் மூலம் பேச்சைத் துவங்கின் அது பற்றிய வேறு விவரங்களையும் நாம் அறிய இயல்வதோடு அது பற்றிச் சரியான முடிவுக்கு வரவும் ஏதுவாகிறது. சில பொழுது அவனுடைய செயல்களை நாம் தவருகப் பொருள்படுத்திக் கொண்டு நாம் அவன்மீது தவறு கண்டிருப்போம். ஆனுல், அவனிடம் கேள்வி மூலம் பேச்சைத் துவங்கினுேமானுல் அவனுடைய வாய்மொழி மூலமாக உண்மை விவரங்கள் வெளியாகி நாம் அவனை அநியாயமாகக் குற்றஞ் சாட்டுவதை விட்டு நம்மையே நாம் காத்துக் கொண்டவர்களாவோம். அதனுல் வீண் மனக்கசப்பு ஏற்படாமல் தவிர்ந்து கொள்ளலாம்.

மேலும் அவனை அதிகமாகப் பேசவும் நாம் அனுமதிக்க வேண்டும். அவன் பேசி வரும்பொழுது தேவையற்ற முறையில் நடுநடுவே தலையிடக்கூடாது. அவனுடைய வாய்மொழி மூலமாகத் தவறு நிகழ்ந்ததற்கான உண்மைக் காரணத்தை

அறிந்து கொள்வதற்கு இவ்விதம் செய்வது ஒரு சரியான வழியாகும்.

தன் கீழுள்ள அவர்களை அணுகித் தவற்றிற்கான காரணத்தை விசாரிக்கும் பொழுது ஒரு தலைவன் அவரவர்களின் இயல்பு அறிந்து அவர்களுடன் பேச்சுக் கொடுக்க வேண்டும். சிலர் தொட்டாற் சிணுங்கி போன்றிருப்பர். சிறு கடுஞ் சொல் கூட அவர்களின் உளத்தைப் புண்படுத்திவிடும். சிலர் எருமை மாட்டினது போன்று கனமான தோலை உடையவர்களாக இருப்பர். அவர்களிடம் கடுமையயாகக் கேள்வி கேட்டால்தான் உண்மை வெளிவரும். மேலும் அவர்களிடம் அவர்களின் குறைகளைச் சாடையாகவல்ல, நேரடியாக அவர்களின் மனத்தில் தைக்கும்படியாக எடுத்துரைத்தால்தான் அவர்கள் திருந்துவர். ஆதலின், ஒரு தலைவன் பிறருடன் பழகும் பொழுது பிறர் தனக்கு ஏற்றாற்போல் நடந்துகொள்ள வேண்டுமென்று எதிர்பார்த்தானானால் அவன் தலைமைத் தனத்திற்கே தகுதியற்றவனாகி விடுவான். இவ்விதம் எதிர் பார்ப்பதனாலேயே வீண் பகைகளும் மன முறிவுகளும் ஏற்படுகின்றன. அதற்குப் பதிலாக அவன் அவர்களின் பண்புகளை அறிந்து அவற்றிற் கேற்ற வண்ணம் நடந்துகொண்டால் அன்பும் நட்பும் பெருக ஏதுவாகும்.

ஒருவனை விசாரித்து வரும்பொழுது அவன் கூறும் காரணங்கள் அவன் செய்தது சரிதான் என்பதை உனக்கு நிரூபிக்குமாயின் அத்துடன் அப்பேச்சை முடித்து அவனை அனுப்பிவிட வேண்டும். அவன் கூறும் காரணங்கள் இன்னும் புதுப் புதுப் பிரச்சினைகளைக் கிளப்பிவிடின், புதுப் புது உண்மைகளை உனக்குத் தெரியப்படுத்தின் பின்பு ஒருநாள் அதுபற்றிப் பேசுவதாகக் கூறிப் பேச்சை அத்துடன் முடிக்க வேண்டும். அவ்விதமே மறந்துவிடாது பின்பு ஒருநாள் அவனை அழைத்து அதுபற்றி உரையாடி ஒரு முடிவு காண வேண்டும்.

அவனுடன் உரையாடும் பொழுது ஒரு தலைவன், தான் தலைவனென்றும் அவன் ஊழியன் என்றும் கருதிப் பெருமையுடன் உரையாடக்கூடாது. பொதுநலத்தைக் கருதித் தாங்

கள் இருவரும் தவற்றிற்கான காரணத்தைக் கண்டுபிடித்துத் திருத்த முற்படும் பங்காளர்கள் என்று கருதியே பேச வேண்டும். இல்லையேல் வீண் வாக்குவாதம் ஏற்பட வழி ஏற்படும். ஒருவேளை அவன் தலைவனைப்பற்றிக் குறை கூறினனுயின் அதனைக் கேட்டு அத்தலைவன் அவன்மீது சீறி விழக்கூடாது. தனிப்பட்ட உணர்ச்சிகளைத் தூக்கி எறிந்துவிட்டுப் பொது நல நோக்குடன் பொறுமையாக வீற்றிருந்து தவற்றிற்கான உண்மைக் காரணத்தைக் கண்டுபிடித்துத் திருத்துவதில் தன் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்.

அவன் செய்தது தவறு என்றும் தலைவன் கூறுவது சரி என்றும் அவன் உணர்ந்து விடுவானுனல் அவன் எந்த இடத்தில் தவறு செய்கின்றான் என்பதை அவனுக்குத் தெளிவுபடுத்தி அவன் அவ்வேலையைத் திறம்படச் செய்யவில்லையாயின் அவன் அங்கு நீடித்து வேலை செய்ய இயலாதென்றும் ஒளிவு மறைவின்றிக் கூறிவிட வேண்டும். அவ்விதம் கூறுவதில் எவ்வித தயக்கமும் காட்டக்கூடாது. இவ்வாறு கூறுவதனுல் அவனுக்கு மனத் தளர்ச்சி ஏற்படுமாதலின் அவன் திரும்பிச் செல்லும்பொழுது அவனுடைய நற்பண்புகளைச் சிறிது பாராட்டி அவன் முயன்றால் தன்னுடைய குறையை வெகு விரைவில் நீக்கித் திறமையான வேலையாளனுக ஆகிவிடலாம் என்றும் அவனுக்குத் தன்னுலான எல்லா உதவிகளும் செய்ய தான் எப்பொழுதும் தயாராய் இருப்பதாகவும் அவன் வந்து அவனுடைய அபிவிருத்திகளைக்கூறின் அதனை மகிழ்ச்சியுடன் கேட்க, தான் எப்பொழுதும் தயாரென்றும் கூறி அவனுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து அனுப்பிவைக்க வேண்டும்.

சில பொழுது அவன் உண்மையில் திறமையாளனுய் இருந்து அசட்டையாகவும் அலட்சியமாகவும் செயலாற்றித் தவறிழைத்து வருவானுயின் அவன் ஒழுங்காக வேலை செய்ய வேண்டுமென்றும் இல்லையேல் அவனை வேலையிலிருந்து நீக்குவதைத் தவிரத் தனக்கு வேறு வழி இல்லை என்றும் அவனிடம் கண்டிப்பாகக் கூறிவிட வேண்டும். அப்பொழுது கூட அவனை வழியனுப்பும் பொழுது அவனுடைய திறமையைப் பற்றி ஓரிரண்டு இன்மொழிகள் பேசித்தான் அனுப்பவேண்டும்.

பொதுவாகக் கூறுமிடத்து தான் தன்னுடைய சொந்த உணர்ச்சிகளையும் வெறுப்புகளையும் வைத்துக் கொண்டு அவனைக் குறை கூறவில்லை என்றும் பொது நலத்தைக் கருதியே அவ்வாறு செய்வதாகவும் அவன் உணருமாறு நடந்து கொள்ள வேண்டியது ஒரு தலைவனின் தலையாய கடமை. ஆதலின் அவனைத் திருத்தி வேலைக்கனுப்பி விட்டபின் அவன் வேலை செய்யும் பொழுது அவனை நெருங்கி அவன் செய்யும் வேலை பற்றி ஓரிரண்டு மகிழ்ச்சிகரமான கேள்விகள் கேட்டு ஓரிரண்டு பாராட்டுரைகள் கூறவேண்டும். இவ்விதம் செய்வது தனிப்பட்ட முறையில் அவன்மீது தனக்கு எவ்வித வெறுப்பும் இல்லை என்பதை அவன் உணருமாறு செய்யும்.

அதன்பின் அவனுடைய வேலைகளை மறைமுகமாகக் கவனித்து வரவேண்டும். அவன் குறைவின்றிச் செயலாற்றின் தலைவன் அவ்விஷயத்தையே முற்றிலும் மறந்துவிட்டு வேறு வேலைகளில் ஈடுபட்டு விடவேண்டும். ஆனால், அவன் அவ்வாறு திறமையுடன் செயலாற்றவில்லையாயின் சிறிது நாள் கழித்து அவனை அழைத்து 'நான் அன்று உனக்குச் சில யோசனைகள் கூறினேனல்லவா? அதில் உனக்குத் தெளிவாக விளங்காதவை ஏதேனும் உண்டா என்பதை அறியவே உன்னை அழைத்தேன்' என்று கூறிப் பேச்சைத் துவங்கவேண்டும். அதன்பின் அவனுக்கு மீண்டுமொரு முறை அவற்றை விளக்கி அடுத்த தடவை அவன் அதனைத் திறமையுடன் செய்வான் என்று தான் எதிர்பார்ப்பதாகக் கூறி அனுப்பவேண்டும்.

குறையைத் திருத்துவது என்பது எப்பொழுதும் நச்சரித்துக் கொண்டிருப்பது என்று ஆகிவிடக்கூடாது. ஒரு சரியான தலைவன் சிலவற்றைத் திருத்தவும் சிலவற்றைப் பார்த்தும் பாராதது போல் இருந்து விடவும் வேண்டும். ஆனால், நீடித்து ஒரு தவறு நிகழ்ந்துவரின் அதனைத் திருத்தாதும் இருந்துவிடக் கூடாது. இருந்துவிடின் அது உடலில் ஒட்டிய நோய் போன்று ஆகி அதனைப் பின்பு நீக்குவது இயலாத செயலாகிவிடும்.

இருவரிடையே ஏற்பட்ட சச்சரவுகளை அவன் தீர்த்து வைக்க வேண்டி ஏற்படும் பொழுது அவன் இருவரின் உற்ற நண்பன் என்றும் இருவரின் நலனைக் கருதிக்கொண்டே தான் செயலாற்றப்போவதாகவும் அவன் காட்டிக் கொள்ள வேண்டும். அவ்விருவரின் கூற்றுக்களையும் அமைதியாகச் செவி சாய்த்துக் கேட்க வேண்டும். அதன்பின் உண்மையை விளங்குவதற்காகச் சில கேள்விகள் கேட்கவும் வேண்டும். அந்தச் சச்சரவு பற்றிய எல்லாத் தகவல்களையும் விளங்கிக் கொள்ளவேண்டும். பின்னர் அத்தகவல்களில் ஒவ்வொன்ருக எடுத்துக் காய்தல் உவத்தல் இன்றி ஆராய வேண்டும். அப்பொழுது உணர்ச்சிகளுக்கு இடமளிக்கக்கூடாது. பிரச்சினை சிறிது சிக்கலானதாக இருப்பின் அவர்களைப் பார்த்துத் தயை கூர்ந்து இதைப்பற்றிச் சிந்தித்து ஒரு முடிவு கூற எனக்குச் சிறிது ஓய்வு தாருங்கள் என்று கூறவேண்டும். இவ்வாறு சில நாட்கள் கழிவதற்குள் தலைவனும் அது பற்றி நன்கு சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்துவிட இயலும். சில பொழுது சச்சரவிட்டுக் கொண்ட இருவருமே தங்களின் உணர்ச்சிகளெல்லாம் அடங்கித் தவறுகளை உணர்ந்து ஒருவரோடொருவர் உறவு கொண்டாடத் துவங்கி விடுவார்கள். அவ்விதம் அவர்கள் செய்யவில்லையாயின் ஒரு தலைவன் சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல் அமைந்து ஒரு பாற் கோடாது மிகவும் நேர்மையுடன் நீதி பகர வேண்டும். ஒரு தலைவனின் வெற்றிக்கு மிகவும் முக்கியமானது அவனுடைய நீதி வழங்கும் தன்மையேயாம். அவனுடைய பெரும்பாலான முடிவுகள் மிகவும் நேர்மையுடையனவாகவும், சரியானவையாகவும் இருக்கவேண்டும். இல்லையெனில் அவன் தலைவனென்ற முறையில் வெற்றிபெற முடியாது. அவ்விதம் அவன் கூறும் முடிவை அவன் எவ்வளவோ இதமாக எடுத்துரைத்தும் ஒருவன் ஏற்றுக்கொள்ள வில்லையாயின் அவனை வேலையிலிருந்து நீக்குவதைத் தவிர வேறு வழி இல்லை.

ஒரு தலைவனின் மற்ருெரு இன்பமற்ற வேலை தன் கீழ் வேலை செய்பவர்கள் சிலரை வேலையிலிருந்து நீக்குவதுதான். பொறுப்பை ஏற்றுத் தலைமைத்தனம் தாங்கும் ஒவ்வொருவனும் அவன் விரும்பினுலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, இச்செயலைச் செய்து தான் தீரவேண்டிய நிலை அவனுடைய

வாழ்க்கையில் பல தடவைகள் ஏற்பட்டுத்தான் தீரும். அப்பொழுது தலைவனென்ற பெயருக்கு அருகதையுள்ளவன் ஒரு போதும் அவ்வேலையைச் செய்யத் தயங்கக்கூடாது. அதற்கு மாறாகப் பிறருடைய மனம் நோவாமலும் அவர்களுடைய தன்மதிப்புக் காயப்படுத்தப் படாமலும் அவர்களைத் தான் வேலையிலிருந்து நீக்குவது நியாயமானதுதான் என்று அவர்கள் உணருமாறும் மென்மையாக நடந்துகொள்ள ஒரு தலைவன் பழகிக்கொள்ள வேண்டும். வேலைக் குறைவின் காரணமாக ஆட்களைக் குறைக்க வேண்டி இருந்த போதினும் சரி, போலி வேலை செய்வதன் காரணமாக ஒருவனை வேலையிலிருந்து நீக்க வேண்டி இருந்த போதினும் சரி, அவனைத் தன்னுடைய அறைக்குத் தனியாக அழைத்து மென்மையான முறையில் நிலைமையை எடுத்துரைத்து அவனுக்கு எவ்வித வெறுப்பும் ஏற்படாமல் வேலையிலிருந்து நீக்க வேண்டும். வேலைக் குறைவினால் ஆட்களைக் குறைக்கும் பொழுது எவன் திறமையற்றவனாக இருக்கின்றானோ அவனையே வேலையிலிருந்து நீக்க வேண்டுமேயன்றித் திறமையானவர்களைத் தன் சொந்த வெறுப்பு, உணர்ச்சி ஆகியவற்றை மனத்திற் கொண்டு வேலையிலிருந்து நீக்கி அவர்களுக்கு அநீதி இழைத்து விடக்கூடாது. திறமையற்றவனை வேலையிலிருந்து நீக்குங்கால் அவன் செய்யும் வேலை தங்களின் தொழில் நிலையத்திற்குப் போதுமானதாக இல்லையென்றும் எனவே, அவனை வேலையிலிருந்து நீக்க விரும்புவதாகவும் அவனுடைய இடத்தில் அதிகமாக வேலை செய்யக்கூடியவன்தான் தேவை என்றும் அதற்காக அவனைக் குறை கூறவில்லை என்றும் வஞ்சனையில்லாமல் அவனும் தன்னால் இயன்ற அளவு பாடுபட்டு உழைத்ததாகவும் சில ஆண்டுகள் செல்லின் அவனும் போதுமானவேலை செய்யும் இயல்பைப் பெற்று விடலாமென்றும் இப்பொழுது அவன் சிறிய தொழிற்சாலை ஒன்றில் சேர்ந்து வேலை செய்வதுதான் நல்லதென்றும், தன்னால் இயன்ற உதவிகளைத் தான் அவனுக்கு எப்பொழுதும் செய்யத் தயாராயிருப்பதாகவும் கூறவேண்டும்.

அப்பொழுது அவன் தான் இனி என்ன செய்யலாமென்று தலைவனுடைய ஆலோசனையைக் கேட்பான். அப்பொழுது தலைவன் 'நான் உன்னுடைய நிலையில் இருப்பேனா

யின் இப்பொழுதே மறுவேலை தேடத்துவங்கி விடுவேன்' என்று ஊக்க மொழிகள் கூறி அவனுக்கு உற்சாகத்தையும் மனத்துணிவையும் அளிக்க வேண்டும்.

சில பொழுது சிலரை வேலையிலிருந்து நீக்கும் பொழுது சில இன்பமற்ற நிகழ்ச்சிகளும் நிகழ்ந்து விடலாம். வேலையிலிருந்து நீக்கப்பட்டவன் தலைவன் மீது சுடு சொற்களையும் கடும் சொற்களையும் பயன் படுத்தலாம். ஒரு தலைவன் மிகவும் பொறுமையாக இருக்க வேண்டிய நேரங்களில் இதுவும் ஒன்று என்பதை அவன் நன்கு உணர்ந்து பொறுமையாக அவனுடன் உரையாடி இதமொழிகள் கூறி அவனைக் கூடிய மட்டும் மன நிறைவுபடுத்தி வீட்டுக்கு அனுப்பிவைக்க வேண்டும். தன்னுடைய தொழில் நிலையத்திலிருந்து வெளியேறுபவர்கள் எவரும் வெறுப்புடனும் பகை உணர்ச்சியுடனும் செல்வதை ஒரு தலைவன் கூடியமட்டும் தவிர்க்கவே முற்படவேண்டும். ஏனெனில், அவ்வாறு செல்பவர்கள் செல்லும் இடங்களிளெல்லாம் அவனைப் பற்றியும் அவனுடைய தொழில் நிலையத்தைப் பற்றியும் நச்சு வித்துக்களைத் தூவிப் பயிரிட்டுவிட்டுச் சென்று விடுவார்கள். அதனல் அவனுக்கும் அவனுடைய தொழில் நிலையத்திற்கும் வீண் கெட்ட பெயரே ஏற்பட வழியுண்டாகும்.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்

## 41

அன்புள்ள அருட செம்மல்!

உன்னுடைய முடங்கல் எப்பொழுது வரும், எப்பொழுது வரும் என்று நானும் என்னுடைய நண்பனும் இத்தனை நாட்களாக ஏங்கிக் கொண்டிருந்தோம். நீ சிறிது காலந்தாழ்த்திப் பதில் வரைந்திருப்பதற்கான காரணம் எங்களுக்கு இப்பொழுதுதான் தெரிந்தது. நீ நன்கு சிந்தித்து, எப்பொழுதும் இல்லா வண்ணம் நீண்ட கடிதம் எழுதியுள்ளாய். அதனை நானும் என்னுடைய நண்பனும் பெரிதும் ஆவலுடன் படித்தோம். அதில் நீ கூறி இருக்கும் கருத்துக்களைப் பெரும்பாலும் என்னுடைய நண்பன் ஏற்று கொண்டான். உன்னுடைய மடல் புது விளக்கத்தையும் புதுத் தெளிவையும் தனக்குத் தந்துள்ளதாகக் கூறினன். எனினும், ஒரு தலைவன் இவ்வளவு மென்மையாக நடந்துகொள்ள வேண்டுமா என்று சற்று ஐயுற்ருன். அதன்பின் நீ கூறியுள்ள உண்மைகளைத்தானும் தன் வாழ்வில் பயன் படுத்திச் சோதித்துப் பார்க்கப் போவதாகவும் கூறினன். அதன்பின் நாங்கள் இருவரும் தலைமைத் தனத்திற்கான பண்புகள் பற்றி இரவு நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது அவன் கூறினன்:

தலைமைத்தனம் வகிக்க எல்லோரும் ஆசைப் படுகிருர்கள். ஆனல், நானே ஏன்தான் என்மீது தலைமைத்தனம் சுமத்தப்பட்டது என்று வருந்திக் கொண்டிருக்கிறேன். என் கீழ் வேலை செய்பவர்கள் வேலை முடிந்ததும் அத்துடன் வேலை பற்றிய எண்ணங்களை யெல்லாம் விட்டொழித்து மகிழ்ச்சி வதனத்துடன் சீட்டி யடித்துக்கொண்டு வீடு செல்கின்ருர்கள். சென்று தம்மனைவி மக்களுடன் கொஞ்சிக்

குலாவி மகிழ்கின்றார்கள். அவர்களின் வாழ்க்கைத்தேர் இன்பமாகச் சென்று கொண்டிருக்கிறது. ஆனால், நானோ இரவு பகல் இருபத்துநான்கு மணி நேரமும் பொறுப்புச் சுமையால் அழுக்கப்பட்டுக் கவலை உருவினனாக உள்ளேன். ஓய்வென்பதே எனக்கு இல்லை. நாளொன்றுக்கு அவர்களெல் லாம் எட்டு மணி நேரமே வேலை செய்யும் பொழு நானோ பதினாறு மணி நேரத்திற்கு மேல் மாடாய் உழைக்கிறேன். நன்முறையில் வாழ்க்கை நடத்துவதற்கான வசதிகள் இருந்த போதினும் வாய்ப்பு இல்லையே. இலக்கிய இன்பங்களை நுக ரக்கூட எனக்கு நேரம் இல்லையே. இரவில் படுக்கச் செல்லும் பொழுது ஓர் அரை மணி நேரம்தான் நூல்களைப் படிக்க இயலுகிறது. ஆனால், அதுவும் சில பொழுதுதான். சிக்க லான பிரச்சினைகளால் மனம் குழம்பி இருக்கும் பொழுது நூல்களைப் படிக்கவே மனம் இல்லாமல் போய்விடுகிறது. யாருக்கும் நான் தலை வணங்கி ஊழியம் செய்ய வேண்டிய தில்லா விட்டாலும் எத்தனை பேருக்குத்தான் நான் தலை சாய்த்து இணங்கிப் போகவேண்டியிருக்கிறது, தெரியுமா? அப்பொழுது நான் என் உணர்ச்சிகளையெல்லாம் மென்று விழுங்கிக் கொண்டுதான் வேலை செய்ய வேண்டி இருக்கிறது. என் கீழ் வேலை செய்பவர்களில் யாருக்கேனும் நல்லதோ தீயதோ ஏற்பட்டு விட்ட போதினும் அதன் நேரடித் தாக்கு தல் என் மீதுதான் வந்து விழுகிறது. அவர்களின் வீட்டில் திருமணமா? உடனே என்னிடம் தான் பணத்திற்கு விண் ணப்பம் செய்து கொண்டு நிற்பார்கள். அவர்களின் வீட்டில் இறப்பா? உடனே எனக்குத்தான் முதல் தாக்குதல் நிக ழும். நான் உதவி செய்யாவிட்டால் பிணத்தை எடுத்துப் புதைக்க இயலாது என்று கண்ணீர் விட்டுக் கொண்டு நிற் பார்கள்.

அவர்களுக்கோ திங்கள் தோறும் இவ்வளவு வருமானம் என்று நிச்சயம் உண்டு. எனவே, அவர்கள் மன அமைதியு டன் இருக்கின்றார்கள். ஆனால், என்னுடைய வாழ்வோ மதில்மேற் பூனை மாதிரி. வருவாய் பற்றிய நிச்சயமே கிடை யாது. இம்மாதிரியான வாழ்க்கையை ஏன்தான் நான் வாழ் கின்றேன் என்று எனக்கே பெரும் வெறுப்பாக இருக்கிறது. யாராவது என்னை வேலைக்கமர்த்திக் கொண்டால் நன்றாயிருக்

குமே என்று கூட எண்ணுகின்றேன். இத்துன்பங்களெல்லாம் போதாது போன்று நான் எத்தனை பேர்களின் வெறுப்புக் களையும் பொறாமைகளையும் தாங்கி நிற்க வேண்டி இருக்கி றது! நான் அவர்களைப் பார்த்துப் பொறாமைப் படும் பொழுது அவர்கள் என்னைப் பார்த்துப் பொறாமைப்படுகி றார்கள். இதுதான் பெரிய வேடிக்கை என்று கூறி முடித் தான். அவனுடைய கருத்துக்கள் என் மனத்தைச் சிறிது அலைத்துவிட்டன. இவைபற்றி உன்னுடைய கருத்து என்ன வென்பதைத் தயை கூர்ந்து உன் அடுத்த அஞ்சலில் எழுதி அனுப்பு.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

பிற் குறிப்பு:—ஒரு தலைவனை மக்கள் அவமதியாமல் இருக்க வேண்டுமாயின் அவன் மேற்கொள்ள வேண்டிய பண்புகள் பற்றி எழுதி அனுப்புவதாக எழுதி, எழுதாது ஏமாற்றி விட்டாய். அடுத்த மடலிலாவது கண்டிப்பாய் அவற்றைப் பற்றியும் எழுது.

# 42

அன்புள்ள அறிவண்ணல்!

தலைமைத்தனம் பற்றி உன்னுடைய நண்பர் கூறிய குறைபாடுகளை எழுதி இருந்தாய். அவை யெல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடியவைதாம். ஆனல் அதில் எத்துணை தீய தன்மைகள் இருக்கின்றனவோ அதைவிட எத்தனையோ மடங்கு அதிகமான நற்பலன்களும் இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு சாதாரண மனிதன் தனக்கும் தன்னுடைய மனைவி மக்களுக்கும் பாடுபடும் பொழுது ஒரு தலைவன் கோடானு கோடி மக்களுக்கு ஊழியம் செய்யும் வாய்ப்புக் கிடைக்கின்றதே அந்த வாய்ப்பை நான் என்னவென்று கூறுவது? ஓர் உயிரால் ஒருகோடி உயிர்கள்—ஏன்—பலகோடி உயிர்கள் நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றன என்ருல் அதைவிடப் பெருதற்கரிய பேறு வேறு என்ன இருக்கிறது?

சில நாட்களுக்கு முன் என் உடலைச் சோதித்துப் பார்ப்பதற்காக டாக்டரிடம் சென்றிருந்தேன். அவர் அழாத குறையாகத் தன்னுடைய துன்பங்களை என்னிடம் எடுத்துரைத்தார். ஏன்தான் நான் டாக்டர் ஆனேன் என்று இப்பொழுது வருந்துவதாகவும் தான் நடத்தும் வாழ்க்கையைவிட ஒரு நாயின் வாழ்க்கை மேலானது என்றும் தனக்குக் கண்ணில் நோய் ஏற்பட்டுள்ளதை ஒரு கண் டாக்டரிடம் காட்டி மருத்துவம் செய்ய வேண்டுமென்று தானும் ஒரு மாத காலமாக எண்ணிக்கொண்டிருப்பதாகவும், எனினும், தனக்கு ஓய்வு கிடைக்கவில்லை என்றும் ஆனல், நோயாளர்களோ அவரை மொய்த்து நின்று அவரைக் கொல்லாது கொன்று வருவதாகவும் சிறிது கூட ஓய்வளிக்கின்ருர்களில்லை என்றும் தான்

அவர்களை ஒழுங்காகக் கவனிக்கவில்லை என்று சிலர் தம்மீது வருத்தம் கூடக் கொண்டுள்ளார்கள் என்றும் கூறினர். அதைக் கேட்டு நான் முறுவலித்தேன். அதேபோன்று நீயும் உன்னுடைய நண்பரின் கூற்றுக்களைக் கேட்டு முறுவலிப்பதைத்தவிர வேறு வழி இல்லை. ஏனெனில் அவர்கள் கூறுவது வஞ்சப் புகழ்ச்சியேயன்றி வேறில்லை.

நல்லது; இப்பொழுது நான் ஒரு தலைவன், தன்னைப் பிறர் அவமதியாமல் இருக்க வேண்டுமானால் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி விளக்குகிறேன், கேள்.

முதலாவதாக, ஒரு தலைவனானவன் நேர்மையின் சிகரமாக இருக்க வேண்டும். உருட்டு, புரட்டு, பித்தலாட்டங்கள் ஆகியவை அவனிடம் அணுவளவும் இருக்கக் கூடாது. பொதுப் பணங்களைச் செலவிடுவதில் மிகமிக நேர்மையுள்ளவனாகவும் அதில் பைசாவுக்கும் கணக்கு வைத்துள்ளவனாகவும் இருக்க வேண்டும். உயரிய ஒழுக்கமுடையவனாகவும், நடத்தையில் நேர்மையுடையவனாகவும் பிறரால் விலைக்கு வாங்க இயலாதனாகவும், வாய்மையுள்ளவனாகவும், போலி நடிப்பு இல்லாதவனாகவும், வாக்குறுதியை நிறைவேற்றுபவனாகவும் இருக்கவேண்டும்.

ஆனால் தலைவனாக ஆசைப்படுகின்றவர்களில் சிலர் தலைவனாவதற்கு ஆசைப்படுவார்களேயன்றி அதற்கான பண்புகளைத் தாங்கள் பெற்றிருக்கின்றார்களா என்று கவனிக்க மாட்டார்கள். அவர்களின் ஒழுக்கங்களோ ஊர் சிரிக்கும் வண்ணம் இருக்கும். ஆனால், அவர்களோ தலைவனாவதற்கு முயற்சி செய்வார்கள். போலி நடிப்புள்ளவன் ஒரு போதும் தலைவனாக நீடித்திருக்க இயலாது என்பதை உணராது தங்களிடம் இல்லாததை உள்ளது போன்று பசட்டாகக் காட்டி மினுக்கித்திரிவர். வாக்கில் வாய்மை இருக்க வேண்டும் என்பதை அறியாது புரட்டும் உருட்டும்தாம் திறமை என்று எண்ணிக்கொண்டு திரிவர். பொய்யை மெய்யாகவும் மெய்

யைப் பொய்யாகவும் கூறுவதோடல்லாது ஒன்றை மிகைப் படுத்திக் கூறியும் சிறுசிறு தவறுகளுக்கெல்லாம் நொண்டிக் காரணம் கூறித் தாங்கள் தவறு செய்யாதவர்கள் என்று காட்டிக் கொண்டும் திரிவர். வாக்குறுதிகளைத் தாராள மாக வழங்குவர். ஆனால், அவற்றை நிறைவேற்ற மட்டும் மாட்டார்கள். ஒரு கூட்டத்திற்கு ஒரு நாள் மாலை ஐந்து மணிக்குச் சொற்பொழிவாற்ற வருவதாகக் கூறுவர். ஆனால், மக்களெல்லாம் அவர்களுக்காக வந்து பல மணி நேரம் காத்துக் கொண்டிருக்கும்பொழுது அவர்கள் வராதொழிந்துவிடுவர். இவ்வாறு செய்வதனால் மக்கள் அவர்களை எவ்வளவு வெறுக்கின்றார்கள், குறைவாக மதிக்கின்றார்கள் என்பதை அவர் அறிவதில்லை. ஆனால், உண்மையான தலைவர்கள் ஒரு போதும் அவ்விதம் நடந்துகொள்ள மாட்டார்கள். வாக்குறுதி அளிப்பதில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்வார்கள். அளிப்பின் அதனைக் கண்டிப்பாய் நிறைவேற்றியே தீர்வார்கள். நிறைவேற்ற இயலாத வண்ணம் எதிர்பாராத சூழ்நிலை ஏற்பட்டுவிடின் முற்கூட்டியே அதனைத் தெரிவித்து அதற்காகத் தம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வர்.

ஒரு தடவை காந்தியடிகள் வங்காளத்தில் சுற்றுப் பயணம் நிகழ்த்திக் கொண்டிருக்கும் பொழுது டார்ஜிலிங்கில் சித்தரஞ்சனதாஸர் நோயுற்று இருப்பதாகத் தெரிந்ததும் அங்கு அவரைப் பார்க்கச் சென்றார். ஆனால், எதிர்பாராத வகையில் சில சிக்கல் ஏற்பட்டதால் அவர் குறித்த திட்டப்படி டாக்கா மெயில் ஏறி நவாப்கஞ்ச் என்ற ஊரை, குறித்த நேரத்தில் அடைய இயலாத நிலை ஏற்பட்டது. இதைக் கண்டு கர்ந்தியடிகள் பெரிதும் வருந்தினர். நவாப் கஞ்சிலுள்ள மக்கள் தம்முடைய வரவைக் குறித்த நேரத்தில் எதிர்பார்த்து வருந்த நேரிடுமே என்று வருந்தினர். எனவே, அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படாமல் தடுப்பதற்கு அவர் ஆயிரத்து நூற்று நாற்பது ரூபாய் செலவிட்டுத் தனி ரயில் அமர்த்தி நவாப்கஞ்சை அடையச் சிறிதேனும் தயங்கவில்லை. சிக்கனத்திற்குப் பெயர் போன காந்தியடிகள் தம்முடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதில் பெரும் பொருட் செலவையும் பொருட்படுத்தாததைக் கவனி. இவ்வாறு தான் உண்மைத் தலைவர்கள் நடந்து கொள்வார்கள். வாக்

குறுதியை நிறைவேற்றுவதை விடப் பணமோ அல்லது சுகமோ பெரிதெனக் கருதமாட்டார்கள்.

இவ்வாறு வாக்குறுதியை அணுவத்தனையும் விடாது நிறைவேற்றும் பண்பு ஒரு தலைவனிடம் அமைந்திருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அவ்விதம் அமைந்திருந்தால்தான் மக்கள் அவன் மீது நம்பிக்கை வைத்து அவன் கீழ் அமைதியாக அடங்கி இருப்பர். இல்லையேல் அவனை மதியாது அவனுக்கு எதிராகக் கலகம் செய்து அவனைத் தலைமைப் பதவிலிருந்து விரட்டி விடுவர்

ஒரு தடவை கராச்சியில் அகதிகள் கலகம் செய்தார்கள். போலீஸாரால் கூட அடக்க இயலாதபடி கலகம் எல்லையை மீறிக்கொண்டிருந்தது. அப்பொழுது அவர்களினூடே ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ஜின்ஞ இறங்குவதைக் கண்டதும் அவர்கள் 'காயிதெ அஃலம் ஜிந்தாபாத்' என்று வாழ்த்துரை எழுப்பினர்கள். அதைக் கேட்டு ஜின்ஞ மகிழ்வு பூக்கவில்லை. 'மூடுவாயை' ('ஷட் அப்') என்ற மொழிகள் அவருடைய வாயிலிருந்து மிக வன்மையுடன் வெளிவந்தன. அவ்வளவுதான். அடுத்த கணம் ஊசி விழுந்தாற் கூடக் கேட்க இயலும் வண்ணம் அங்கு அமைதி நிலவியது. அப்பொழுது ஜின்ஞ அவர்களை நோக்கி 'நான் உங்களுக்கு நலன் செய்பவன் என்பது பற்றி உங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றதல்லவா' என்று உணர்ச்சியுடன் வினவினர். அவர்கள் 'ஆம்' என்று ஒருமித்து முழக்கினர். 'அப்படியானல் அமைதியாகக் கலைந்து செல்லுங்கள்' என்று ஆணையிட்டார் ஜின்ஞ. அங்குக் கூடி இருந்தோர் அனைவரும் மறு சொல் கூருது ஒருவர் பின் ஒருவராக அமைதியாகக் கலைந்து சென்றனர்.

அன்புடை நண்ப! தலைமைத்தனம் என்றல் இப்படித்தான் இருக்கவேண்டும். மக்கள் மீதுதான் தலைவருக்கு எவ்வளவு பிடிப்பு! தலைவர் மீதுதான் மக்களுக்கு எவ்வளவு நம்பிக்கை.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்.

## 43

அன்புள்ள அருட்செம்மல் !

உன் மடலைப் பார்த்ததும் பண்டித நெஹ்ருவின் வாழ்வில் நிகழ்ந்த மற்றொரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்தது. பண்டித நெஹ்ரு ஒரு தடவை ஒரு கூட்டத்தில் பேசும் பொழுது மக்கள் ஆடாது அசையாது அமைதியாக இருந்து தம்முடைய சொற்பொழிவைக் கேட்க வேண்டுமென்று முதலிலேயே மக்களைக் கேட்டுக்கொண்டார், அம்பொழுது கூட்டத்தில் ஒரு பாம்பு நெளிந்தோடியது. ஆனால், அதைக் கண்டு மக்கள் அமைதி இழந்து எழுந்து ஓடவில்லை. அதை விட்டு மெதுவாக உட்கார்ந்து கொண்டே நகர்ந்து விலகிக் கொண்டார்கள். பாம்பும் ஓடிவிட்டது. இவ்வாறு மக்கள் செய்ததற்காகப் பண்டித நெஹ்ரு மக்களைப் பெரிதும் பாராட்டினர். ஒழுங்கு என்றால்—தலைவனுக்குக் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிதல் என்றால் இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்று அவர் கூறினர். ஆனால், மக்கள் இவ்வாறு நடந்து கொள்வதற்குமுன் தலைவர்களும் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் இருக்க வேண்டு மென்பது உன்னுடைய முடங்கலைப் பார்த்தபின்தான் எனக்கும் தெரிய வந்தது. ஆனால், அதே பொழுதில் தலைவனும் மக்களின் அன்பை மட்டுமல்லாது மரியாதையையும் பெறக் கூடியவனாகவும் இருக்க வேண்டும் என்பதையும் அறியலானேன். மேலும் யாராவது ஒழுங்கை மீறினால் அவர்கள் யாராயிருந்த போதினும் அவனைக் கண்டிக்கவும் வேண்டும் என்பதையும் உணரலானேன். அப்பொழுதுதான் 'கண்டிக்க முடியாத தலைவன் கருணை காட்டவும் முடியாது' என்று செல்சீ அறிஞர் கார்லைல் கூறியதாக நான் எப்பொழுதோ படித்தது என் நினைவுக்கு

வந்தது. கண்டிக்க மட்டுமல்லாது தண்டிக்கவும் வேண்டும். வேண்டுமாயின் கட்சியிலிருந்து அவனை வெளியே தள்ளவும் தயங்கக் கூடாது என்பதை நான் உணரலானேன். ஏனெனில், ஒரு தனி மனிதனை விடக் கட்சிமேலல்லவா? ஒரு தனி மனிதனின் தீய நடத்தையால் கட்சியே உருக்குலைந்து போகக் கூடாதல்லவா என்றும் எண்ணினேன். இது பற்றி உன்னுடைய கருத்தை எழுதியனுப்ப வேண்டுகிறேன்.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

## 44

அன்புள்ள அறிவண்ணல்!

நீ கொண்டுள்ள கருத்து முற்றிலும் சரியானதேயாகும். அவ்வித நிலையில் ஒரு தலைவன் என்பவன் இரும்புக் கைகளுடன் தான் செயலாற்ற வேண்டும். கட்சி பெரியதேயன்றித் தனி மனிதன் ஒருபோதும் பெரியவனாக மாட்டான். சிலருக்கு அஞ்சி அவன் துணிச்சலை இழந்து தீவிரமாகச் செயலாற்றத் தயங்குவானாயின் அவன் சிறிது காலத்தில் தலைமைப் பதவியிலிருந்து தூக்கி எறிபப்படுவான்.

அவன் நேர்மையுடனும் துணிச்சலுடனும் செயலாற்றிக் கட்சியின் கட்டுப்பாட்டைக் குலைப்பவர்களை வெளியே தூக்கி எறியின் அவ்வாறு எறியப்பட்டவன் அவனைப்பற்றி இல்லாததும் பொல்லாததும் கூறுவான் தான். அவனை ஒரு சர்வாதிகாரி என்றும் தன் இச்சைப்படி செயலாற்றுகின்றவன் என்றும் எங்கணும் தூற்றித் திரிவான்தான். ஆனால், இவற்றைக் கண்டு ஒரு தலைவன் அஞ்சிவிடக் கூடாது. பண்டித நெஹ்ருவை ஒரு சிலர் சர்வாதிகாரி என்று இப்பொழுதும் பிதற்றிக் கொண்டு திரியவில்லையா? அதற்கெல்லாம் அவர் அஞ்சினாரா?

ஒரு தலைவன் பிறர் கூறும் ஆலோசனைகளுக்குச் செவி சாய்க்க வேண்டியதுதான். ஒரு செய்தி பற்றிய கருத்தைப் பலர் வாயிலாக அறியவேண்டியதுதான். ஆனால், அதற்காக அவர்கள் கூறும் ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டுமென்பதில்லை. இயற்கையோடு இணங்கி நல்வழி நிற்போரின் கருத்தையே அவன் பின்பற்ற வேண்டும். சில பொழுது அவன் தனிப்பட்ட முறையில் தீவிர முடிவுக்கு வரவேண்டிய நிலை ஏற்படும். அவ்விதம் முடிவுக்கு வருவதில் அவன் அனுவத்த

னையும் தயங்கக் கூடாது. அதற்கான முழுப் பொறுப்பையும் அவன் துணிச்சலுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு பிரச்சினை பற்றி ஒரு முடிவுக்கு வருமுன் அதனை எல்லாக் கோணங்களிலிருந்தும் நன்கு ஆராய வேண்டும். அதன்பின் தன் உத்தரவைப் பிறப்பித்து விடுவானுயின் அம்பு, குறியை நோக்கிச் செல்வது போன்று அவனும் தன்னுடைய குறிக் கோளை நோக்கிச் செல்லவேண்டும். ஒரு தலைவனுடைய தலையாய கடமை மற்றவர்களின் ஆற்றல்களையெல்லாம் ஒருமுகப்படுத்தி ஒரு குறிக்கோளை நோக்கிச் செலுத்துவது தான். ஆதலின், அவன் தான் மக்களை நடத்திச் செல்லும் குறிக்கோளைத் திட்டவட்டமாகத் தெளிவாக அறிந்தவனுக இருக்கவேண்டும். அதை நோக்கி மக்களை அழைத்துச் செல் லும்பொழுது அவன் உறுதியுடன் செயலாற்ற வேண்டும். அவனுடைய உறுதி தளர்ந்துவிடின் அதன்பின் மக்களின் உறுதியைப் பற்றிக் கேட்டகவே வேண்டியதில்லை.

தலைவனிடம் அமைந்திருக்க வேண்டிய மற்றொரு சிறந்த பண்பு துணிச்சல். நெஞ்சுரமும் துணிச்சலும் இல்லாதவன் ஒருபோதும் சிறந்த தலைவனுக முடியாது. தன்னுடைய உயிரைப் பெரிதாகக் கருதுபவன் தலைமைப் பதவிக்கே அருகதையற்றவன் என்றே நான் கூறுவேன். நெருக்கடியான சூழ்நிலைகளில் மற்றவர்களெல்லாம் தொடை நடுங்கி, தலைதப்பினுல் போதுமென்று பின்னுல் ஓடும் பொழுது தலைவனுனவன் தன் உயிருக்கு அணுவேனும் அஞ்சாது முன் பாயவேண்டும். உலக வரலாற்றினைப் பார்த்தோமானுல் உண்மைத் தலைவர்களெல்லாம் அவ்விதமே செய்திருக்கிருர்கள் என்பதை அறியலாம். ஆனுல், இன்ருே நெருக்கடியான சூழ்நிலையோ, அல்லது குழப்பமோ ஏற்படும்பொழுது முதலில் தலைதப்பினுல் போதுமென்று வெளியே பாய்பவர்கள் தலைவர்களாகவே இருக்கின்ருர்கள். அவர்களைப் பார்த்து இரங்குவதா அல்லது சிரிப்பதாக என்று எனக்கே விளங்கவில்லை. தலைமைத்தனம் தாங்குவதற்கு மட்டும் அவர்களுக்கு அளவற்ற ஆசை இருக்கிறது. இஃதென்ன வேடிக்கை!

மேலும் ஒரு தலைவன் உற்சாகம் நிரம்பியவனுகவும் வெற்றி நோக்குடையவனுகவும் இருக்கவேண்டும். நெருக்

கடியான நிலையில் மற்றவர்களெல்லாம் மனம் சோர்ந்திருக்கும் பொழுது அவன் இறுதி வெற்றியில் அளவற்ற நம்பிக்கையுடையவனாகவும் அமைதி குலையாதவனாகவும் துன்பத்திற்கு அடிபணியாதவனாகவும் அதனை வென்று நிற்பவனாகவும் இருக்கவேண்டும்: அவன் பேச்சுத் திறன் படைத்தவனாகவும் இருக்கவேண்டும். அவனுடைய பேச்சு மக்களின் மனத்தைக் கவர்ந்து நின்று அவர்களுக்கு உற்சாக மூட்ட வல்லதாகவும் அவர்களைத் தன் வழிக்கு இணங்க வைக்க வல்லதாகவும் இருக்கவேண்டும்.

தலைவனிடம் இருக்கவேண்டிய மற்றொரு பண்பு தன்னம்பிக்கை. எனவேதான் பிரஞ்சு அறிஞன் மாண்டெய்னும் ‘தலைவன் தன்னை மட்டும் உடையவனாயிருந்தால் போதும். அவன் எப்பொழுதும் எதையும் இழப்பதில்லை’ என்று கூறினான்.

மேலும் தலைவன் என்பவன் இரகசியத்தின் இரும்புப் பெட்டியாக இருக்கவேண்டும். அவ்விதம் இராதவன், இரகசியத்தைக் காப்பாற்றத் தெரியாதவன், தலைமைப் பதவிக்கே அருகதையற்றவன் என்றுதான் நான் கூறுவேன். இங்கிலாந்தை ஆண்ட முதலாவது சார்லஸ் மன்னன் தன் அரியணையை மட்டுமல்லாது தன்னுடைய தலையணையையும்—இல்லை, இல்லை—தலையையும் இழந்ததற்குக் காரணம் அவன் பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள்பற்றித் தன்னுடைய கருத்துக்களைத் தம் மனைவியிடம் கூறியதுதான். அவை அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களின் செவிகளிலும் ஏறி அவர்களை அவனுக்கு எதிராகப் புரட்சி செய்யுமாறு செய்தது. நெப்போலியன் தோல்வியுற்றதற்கு ஒரு காரணம், அவன் தன் போர்த்திட்டங்களைப் பற்றித் தன் மனைவிக்கு மடல்கள் எழுதியதுதான். அவை அவனுடைய எதிரிகளின் கையில் அகப்பட்டு அவனுடைய பெருவாழ்வுக்கே முற்றுப் புள்ளி வைத்துவிட்டது. இவற்றைப் பற்றி நீயும் நன்கு சிந்தித்து உன் கருத்துக்களை எழுதி அனுப்பு. நானும் தலைவனுக்கிருக்க வேண்டிய மற்றப் பண்புகளை இன்னும் சிந்துத்து அடுத்த மடலில் எழுதுகின்றேன்.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்

## 45

அன்புள்ள அருட் செம்மல்!

ஒரு தலைவன் இரகசியத்தின் இரும்புப் பெட்டியாக இருக்கவேண்டுமென்று நீ கூறியுள்ள கருத்தை நானும் முழு மனத்துடன் ஏற்றுக்கொள்கிறேன். ஏனெனில், எல்லாப் பெரும் செயல்களினுடையவும் ஆன்மா இரகசியம்தான். ஒரு தலைவன் தன்னுடைய பகைஞனின் இரகசியத்தை அறிவதை விடத் தன்னுடைய இரகசியத்தை மறைத்து வைத்துச் செயலாற்றுவதில் பெருநன்மைகளைப் பெறுவான். ஆனால், திறமையாளர்கள் தங்களுடைய இரகசியங்களைப் பிறரிடமிருந்து மறைப்பதில் வெற்றியுடன் செயலாற்றுவதோடல்லாமல் தங்களின் பகைஞர்களின் இரகசியங்களை அறிவதிலும் வெற்றி பெற்றுவிடுகின்றனர்கள்.

பெண்களிடம் இரகசியங்களைக் கூறித்தான் முதலாவது சார்லஸ் மன்னனும் நெப்போலியனும் தங்களின் அரிய உயிரை இழந்தார்கள் என்று கூறியுள்ளாய். தங்களின் இரகசியங்களை அவர்கள் தங்களின் மனைவிமார்களிடம் கூறியது மிகப் பெருந் தவறு என்று நானும் ஒப்புக்கொள்கிறேன். ஏனெனில், ஒரு செய்தி ஒருவனின் மனத்தில் இருக்கும் வரையிலும் தான் அது இரகசியம். மற்றொருவனிடம் அதனைக் கூறி விட்டால் அது இரகசியமன்று. ஓர் இரகசியத்தை ஒருவன் தன் மனத்திற்குள்ளே வைத்துக் கொள்ளுவதுதான் அறிவுடைமை. அதனை மற்றொருவனிடம் கூறி அதனை அவன் வெளியிடாது வைத்துக்கொண்டிருப்பான் என்று எதிர்பார்ப்பது மடமையாகும். ஆதலின், உண்மையான

அறிவாளிகள் ஓர் இரகசியத்தைத் தாமே தாம் வைத்துக் கொள்வார்களேயன்றிப் பிறரிடம் அதனைத் தெரிவித்து அதனை அவர்கள் பத்திரமாய்ப் பாதுகாத்து வைப்பார்கள் என்றுஎதிர்பார்க்கமாட்டார்கள். தானே தன்னுடைய இரகசியத்தைத் தன் மனத்திற்குள்ளே பத்திரமாய்ப் பாதுகாத்து வைக்க இயலாது அந்த இரகசியத்தைப் பிறன் ஒருவனிடம் கூறியவன் எவ்வாறு அதனைப் பிறன் பத்திரமாய்ப் பாது காப்பான் என்று எதிர்பார்க்க இயலும்?

நாம் ஓர் இரகசியத்தை ஒரு முட்டாளிடம் கூறினேமாயின் அவன் ஒரு முட்டாளாக இருப்பதன் காரணமாக அதனை மற்றவர்களிடம் தெரியப்படுத்தி விடுவான். ஒரு போக்கிரியிடம் கூறினேமாயின் அவன் தன் நலத்திற்குச் சாதகமாக அதனைப் பயன்படுத்த அவனுக்கு வாய்ப்புக் கிடைக்கும் பொழுது அதனை ஒருவனிடமல்ல, ஆயிரம் பேர்களிடம் வெளியிட்டே தீர்வான். ஓர் ஊழியனிடம் தெரியப்படுத்தி விடுவோமாயின் அக்கணமே நாம் அவனுடைய அடிமையாகி விட்டோம் என்று தான் பொருள். நம்முடைய குடுமி அவன் கை வசமாகிவிடும். அதன்பின் நாம் அவனுடைய கைப்பாவையாகி விட வேண்டியதுதான். இல்லையெனில் அவன் நம்முடைய இரகசியத்தை வெளியிட்டு நமக்கு இழிவையும் தோல்வியையும் உண்டுபண்ணிவிடுவான். நாம் நம் அலுவலக அறையை விட்டு வெளியே சென்றிருக்கும் பொழுது எவன் நம்முடைய காகிதங்கள், புத்தகங்கள் ஆகியவற்றைப் புரட்டிப் பார்க்கின்றனே அவன் பற்றிய வரையிலும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அப்படிப்பட்டவனுக்கு நம்மைப் பற்றிய அணுவத்தனை இரகசியமும் தெரிய அனுமதிக்கக்கூடாது. அவனை நம்முடைய சரியான கண்காணிப்பில் வைத்திருக்கவேண்டும்.

பெண்களுக்கும் இரகசியத்தைப் பாதுகாப்பதற்கும் வெகு தொலை என்றே நான் கூறுவேன். தமக்கு மற்றவர்களைவிட அதிகமான செய்திகள் தெரியுமென்பதைக் காட்டிக் கொள்வதற்காகவும தாம் ஒருவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பதாகவும், எனவே அவர் தம்முடைய இரகசியங்களை எல்லாம் தெரியப்படுத்தி இருக்கின்றார் என்பதைக் கூறுமல் கூறுவதற்காகவும் அவர்கள் பிறர் பற்றிய இர

கசியங்களை வெளியிட்டு விடுகிருர்கள். பட்டாசு வெடித்தால்தான் சிறுவர்கள் மகிழ்வர். அதுபோன்று இரகசியங்கள் தங்களின் வாய் மூலம் வெடித்தால்தான் பெண்கள் மகிழ்ச்சியுறுகிருர்கள். இல்லையெனில் அந்த இரகசியங்களை அடக்கி வைத்திருக்க இயலாது அவர்களுடைய நெஞ்சம் வெடித்து விடும் போலுள்ளது. இந்த உண்மையை யறியாது முதலாவது சார்லஸும் நெப்போலியனும் செயலாற்றியது தான் எனக்குப் பெரும் விந்தையாக இருக்கிறது. தாளில் எழுதப்பட்ட இரகசியம் வானிலே தூக்கி எறியப்பட்ட கல் போன்றது என்பதையும் அது எங்கேனும் போய் விழும் என்பதையும் அறியாது நெப்போலியன் தன் போர்த்திட்டங்கள் பற்றித் தன் மனைவிக்கு எழுதியதுதான் எனக்கு விந்தையினும் விந்தையாக உள்ளது. அப்படி எழுத வேண்டிய அவசியமும் அவசரமும் என்னவென்றுதான் எனக்கு விளங்கவில்லை.

அதற்கு மாருக வாஷிங்டன் எவ்வாறு நடந்துகொண்டான் என்பதைக் கூறுகிறேன், கேள். போர் நடக்கவிருக்கும் நாள் காலையில் ஓர் இராணுவ அதிகாரி வாஷிங்டனை நோக்கி இன்றையப் போருக்கான தங்களின் திட்டம் என்னவென்று வினவினுன், அதற்கு வாஷிங்டன் அவனுடைய காதில் தன்னுடைய வாயை வைத்து 'உன்னுல் இரகசியத்தைக் காப்பாற்ற இயலுமா' என்று வினவினுன். 'ஆம்' என்ருன் அந்த அதிகாரி. 'அப்படியாளுல் என்னுலும் என்னுடைய இரகசியத்தைக் காப்பாற்ற இயலும்' என்று கூறி விட்டு மடமடவென்று அவ்விடத்தை விட்டு அகன்ருன் வாஷிங்டன்.

வெற்றியாளர்கள் எவ்வாறு இரகசியத்தைப் பேணிப் பாதுகாக்கிருர்கள்; அதனுல் எவ்வாறு வெற்றி மங்கை அவர்களைத் தழுவி அரவணைக்கின்ருள் என்பதற்கு வாஷிங்டனின் வாழ்வில் நடந்த இந்த நிகழ்ச்சி சிறந்த மேற்கோளாக அமையும் என்று நம்புகிறேன். இரகசியத்தைப் பேணிப் பாதுகாக்க இயலாதவன் தலைமைத்தனத்திற்கு அருகதையற்றவன்தான் என்று நானும் கருதுகிறேன்.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

# 46

அன்புள்ள அறிவண்ணல்!

என்னுடைய கருத்தை ஆதரித்து நீ எழுதி இருப்பது கண்டு மகிழ்வுறுகிறேன். அடுத்த படியாக இந்த மடலில் தலைவர்களுக்கு வேண்டிய இன்னும் சில நற்பண்புகளைப் பற்றி எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

'தலைமைத்தனம் என்பது கண் முன் இருப்பதைக் காட்டுவதன்று; பின் வருவதை முன் அறிவிப்பதாகும்' என்று கூறினான் ஓர் அறிஞன். இம் மொழிகள் தலைவனாக விரும்பும் ஒவ்வொருவரின் இதயத்திலும் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இவ்வாறு ஆழ்ந்த அறிவும் தீர்க்கதரிசனமும் பெற்றிராதவர்கள் இக்காலத்தில் தலைமைத்தனம் பெற விரும்புகிறார்கள். மேலும் இதில் வேடிக்கை என்னவென்றால் அவர்கள் தலைமைத் தனம் வகிக்க விரும்புகின்றார்களேயன்றித் தங்களுக்குப் போதுமான கல்வி அறிவு இருக்கின்றதா என்பதையும் மற்றவர்களைவிடத் தாங்கள் அறிவாளிகளாக, திறமையாளர்களாக இருக்கின்றார்களா என்பதையும் பார்ப்பதில்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் தலைமைத்தனம்தான். எனவே கூலிப்படைகளைச் சேர்த்துக்கொண்டு தாங்களும் ஒரு கட்சி அமைத்துத் தலைவர்களாகி விடுகிறார்கள். தங்களின் தன்னலத்தையே மனத்திற்கொண்டு பாமரமக்களுக்குச் சில ஆசை மொழிகள் கூறி அவர்களைத் தங்களின் வலையில் சிக்கவைத்து வீண் விதண்டாவாதம் செய்து கொண்டு திரிகின்றார்களே அவர்களை நான் மனமார வெறுக்கிறேன். அவர்களுக்கு ஒரு கொள்கை, ஒரு குறிக்கோள், ஒரு திட்டம் என்பன அணுவேனும் கிடையா. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் தலைமைத்

தனம்தான். இப்படிப்பட்டவர்களை நான் என்னவென்று கூறுவது?

தலைவனுக்கிருக்கவேண்டிய தலையாய பண்பை ஸ்டாலின் பின்வருமாறு கூறுகின்றான் கேள்.

'ஒரு தலைவன் முன்னே செல்வோரை இழுத்துப் பிடிக்க வேண்டும்; பின்னே வருவோரை முன்னால் இழுத்துக்கொணர வேண்டும். நடுவிலுள்ளவர்களைத் தட்டிக் கொடுத்துக் கொண்டு செல்ல வேண்டும்.'

எத்துணை ரத்னச் சுருக்கமான விளக்கம்!

மக்கள் பல்வேறு திறன்படைத்தவர்களாயிருப்பர். அவர்களை எல்லாம் ஒன்று படுத்தித் தன் தலைமையின் கீழ் கொண்டு செலுத்தத் தெரியாதவன் எவற்றை அறிந்திருந்த போதினும் ஒன்றையும் அறியாதவனே என்றுதான் கூறுவேன். அங்கு ஓரிடத்தில் செங்கல் குவித்து வைக்கப் பட்டிருக்கின்றது என்று வைத்துக்கொள். இங்கு ஓரிடத்தில் சுண்ணும்பு குவித்து வைக்கப்பட்டிருக்கின்றது என்று வைத்துக்கொள். மற்றோரிடத்தில் மரம் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றது என்று வைத்துக்கொள். அவற்றைப் பார்த்து யாராவது கட்டடம் என்று கூறுவாரா? அவற்றையெல்லாம் ஓரிடத்தில் சேர்த்து ஒழுங்காக முறைப்படி பயன் படுத்தினால் தானே கட்டடம் எழும். அதேபோன்று உதிரியாக அங்குமிங்கும் சிதறிக் கிடக்கும் மக்களை ஒரு பெரும் குறிக்கோளை நோக்கி ஒன்றுபடுத்திச் செயலாற்றுகின்றவனே தலைவனாவான். அவ்வாறில்லாது ஒவ்வொருவரும் தம் மனம் போன போக்கின்படிச் செயலாற்றின் மனித ஆற்றல் வீணே விரயமாவதோடு ஒரே குழப்பமே ஏற்படும் என்பதில் ஐயமில்லை. ஆதலின் தலைமைத்தனம் என்பதன் முழுமுதற்பொருள் சிதறிக் கிடக்கும் பல்வேறு திறப்பட்ட மக்களை ஒன்றுபடுத்தி ஒரு குறிக்கோளை நோக்கி நடத்திச் செல்லும் திறமைதான். அத்திறமை இல்லாதவன் ஒருபோதும் தலைவனாக மாட்டான். அவ்வாறு ஒரு தலைவன் தலைமை வகித்து நடத்திச் செல்லும் பொழுது சில அறிவற்றவர்களிடமிருந்து எத்தனையோ குத்துப்பாடுகளும், குறைபாடுகளும்தாம் கிளம்பும். அவை நியாய

மானவையாயிருப்பின் உடனே அவற்றை நேர் செய்ய வேண்டும். இல்லையெனில் பொறுமையுடன் அவற்றைச் சகித்துக் கொண்டுதான் தன் குறிக்கோளை நோக்கிச் சென்று கொண்டிருக்கவேண்டும்.

ஒரு பக்கம் குத்துப்பாடுகளும் அவன் மீது வீசி எறியப்படும். அவை பெரும்பாலும் மிகைப்படுத்தப்பட்டவையாகவே இருக்கும். ஆதலின் அந்தப் புகழ் வலையில் அவன் ஈசல் போல் போய் விழுந்து விடக்கூடாது. ஒரு தலைவனின் கடமை பிறரின் புகழ்மொழியை விட்டுத் தன்னைத் தற்காத்துக் கொள்வதுதான். ஆதலின் உண்மையைத் தன்னிடம் ஒளிவு மறைவின்றிக் கூறுவதைத்தான் விரும்புவதாகவும் அதனால் தான் வருத்தப்படமாட்டேன் என்றும் ஒரு தலைவன் மக்களிடம் கூறின் அவர்கள் அவனிடம் அவனைப் பற்றித் தாங்கள் கொண்டுள்ள உண்மைக் கருத்துக்களைக் கூறுவார்கள் தாம். ஆனால் ஒவ்வொருவரும் அவ்வாறே அவனிடம் கூறுவதாயிருப்பின் அவன் அவர்களின் மரியாதையை இழக்க வேண்டி ஏற்பட்டுவிடும். அதன்பின் அவன் தலைவனாயிருக்கவே அருகதையற்றவனாகிவிடுவான். ஆதலின் ஒரு தலைவனவன் பிறரின் இகழ்ச் சொற்களையோ, புகழ்மொழிகளையோ அதிகமாகப் பொருட்படுத்தாது தன்னுடைய குறிக்கோளை நோக்கிச் சென்றுகொண்டிருக்க வேண்டும். அவன் தன் குறிக்கோளில் தோற்றுவிடுவானாயின் அவனுடைய நற்பண்புகளைப் பற்றி ஆயிரம் வானவர்கள் வந்து அறுதியிட்டு உறுதி கூறியபோதினும் அதனால் யாதொரு பலனும் ஏற்படாது. வெற்றி பெற்று விடுவானாயின் அவனைப் பற்றிக் கூறப்படும் குறைபாடுகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். அவன்தான் புகழ்; புகழ்தான் அவன் என்று ஆகிவிடும். புகழின் மற்றொரு பெயர் அவன் பெயராகிவிடும்.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்

# 47

அன்புள்ள அருட்செம்மல் !

உன் மடலில் நீ குறிப்பிட்டிருக்கும் செய்திகள் அனைத்தும் என் அறிவுக்குப் பொருத்தமானவையாகவே இருக்கின்றன. புகழ்வாழ்வு வாழவேண்டுமென்ற எண்ணத்துடன் பிறரின் புகழ் மொழிகளை எதிர்பார்த்து ஏங்கித் தவித்துக் கொண்டிருப்பது தவறு என்று நான் இப்பொழுது உணர்கிறேன். உன் மடல் வரும்பொழுது நான் ஒரு நூலைப் படித்துக்கொண்டிருந்தேன். அதிலே புளூடார்க் என்ற அறிஞன் கூறிய பொன்னுரையொன்று பளிச்சென்று மின்னியது. அப்பொன்னுரை என்னவென்று நீ வினவலாம், 'புகழ்மீது பேராசை கொள்பவர்கள் தகுதியில் குறைந்தவர்கள் என்பதைத் தாங்களே அறியாமல் நிரூபித்து விடுகின்றார்கள்' என்பது தான் அது. அதன்பின் அந்நூலின் பக்கங்களைப் புரட்டிக்கொண்டு செல்லும் பொழுது "புகழானது நற்பண்புகளின் சாவுமணியாகும். ஒருவன் மற்றொருவனைப் புகழ்ந்தான் என்றால் அவனை அவன் உயிரோடு தூக்கி விழுங்கி விட்டான். ஒருவனைத் தன்னுடைய செயல் சாதனைக்காக வேண்டி புகழ்கின்றவன் இருக்கின்றானே அவன் தான் மனித இனத்திலே கடை கெட்டவன். ஆனால், ஒருவனைத் தவிர. அந்த ஒருவன் யாரெனில் அதனை இனிமையுடன் கேட்டுக் கொண்டிருக்கின்றானே, அவன்தான். ஒவ்வொரு மனிதனுடைய இதயத்திலும் புகழ் ஆசை இருக்கத்தான் செய்கிறது. பெருமைக்காரன் அதனைப் பெரிதும் ஆவலுடன் வரவேற்கிறான். அடக்கமுள்ளவன் அதனைக்கண்டு தயக்கத்துடன் தலை குனிகின்றான். ஏன்? தனக்குக் கிடைத்த அந்தப் புகழை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக. செல்வந்தனோ தன்னை அளவுக்கதிகமாகப் புகழ்கின்றவனை இழிவுக் கண்களுடன் நோக்கு

கின்றான். ஆனால், தன்னைப் புகழாதவனையோ வெறுக்கத் துவங்கி விடுகின்றான். தங்களைப் பிறர் புகழ்ந்துரைப்பதைத் தாங்கள் வெறுப்பதாகச் சிலர் எண்ணிக் கொண்டுள்ளார் கள். ஆனால், உண்மையில் அவர்கள் வெறுப்பது அந்தப் புகழ் மொழிகள் கூறப்படும் முறையையே யன்றிப் புகழ் மொழிகளையன்று. சிலர் தாங்கள் புகழ் மொழிகளை வெறுப் பதாகச் கூறுகின்றார்கள். அவர்களைப் பார்த்து நீங்கள் தாம் புகழ் மொழிகளால் ஏமாற்றப்பட இயலாதவர்கள் என்று கூறிவிடின் அவர்களின் உச்சி குளிர்ந்து விடுகிறது; உள்ளங் கால் ஜிலுஜிலுத்து விடுகின்றது. ஆதலின் புகழ் மொழிக ளைக் கூறுகின்றவர்கள் போன்ற துரோகிகளும் இல்லை. அவற்றைக் கேட்டுப் பூரிப்பவர்களைப்போன்ற மடையர்களும் இல்லை. அந்தத் துரோகிகள் ஒருவனுடைய தவற்றைத் திருத்துவதே இல்லை. அவனைப் புகழ்ந்துரைத்து அவனை அவ னுடைய தவற்றைத் திரும்பத்திரும்ப இழைத்துத் தட்டுக் கெடுமாறு செய்து தம் செயலைச் சாதித்துக் கொண்டு சென்று விடுகின்றார்கள். ஆதலின் உன்னைப் பற்றிப் பிறர் கூறும் புகழ் மொழிகளை யெல்லாம் உண்மையென நம்பி விடாதே. ஆனால், பிறர் அன்புடன் எடுத்துக் காட்டும் குறைபாடுகளை எல்லாம் உண்மையென நம்பி உடனே அவற் றைத் திருத்திக்கொள். உன்னையே நீ பிறருடைய புகழ் மொழியிலிருந்தும் காப்பாற்றிக்கொள்ள ஒரு வழி கூறுகின் றேன், கேள். உன்னையே நீ புகழ்ச்சியாக எண்ணிக்கொள் ளாதே. உலகில் அரும்பெரும் செயல்களை ஆற்றிச் சென்ற பெரியார்களுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்ப்பின் நான் எம் மாத்திரம் என்று எண்ணு. அவ்விதம் எண்ணுவாயாயின் புகழ் மொழிகளால் உனக்கு யாதொரு இன்னலும் இழைத்து விட இயலாது. உன் உள்ளக் கோட்டையைப் புகழ்க் கணை களால் யாதொன்றும் செய்துவிட இயலாது. உன்மீது ஓரிரு வர் அல்லர், பெருவாரியான மக்கள் புகழ் மாலை சூடின் அதைக் கண்டு நீ பெருமையுற்றுவிடாதே. தனக்கு அதனைச் சூட்டுமாறு செய்த இறைவனுக்குத் தன்னடக்கத்துடன் நன்றி செலுத்து. உன்னை மக்கள் வீணே குறைகூறின் நீ முன்பு அறியாத்தனமாகச் செய்த தவறுகளுக்காக இறை வன் மக்களை ஏவிவிட்டு அவ்வாறு செய்கின்றான் என்று எண் ணிப் பொறுமையை மேற்கொள்" என்ற பொன்மொழிகள்

பொறிக்கப்பட்டிருந்தன. அவை என்னுடைய் அறிவுக்கு நல் விருந்தாக அமைந்திருந்தன. அவற்றைத் திரும்பத்திரும்பப் படித்தேன். எனினும், உண்மையான புகழ் என்றால் என்ன என்பது பற்றி எனக்கு அம்மொழிகள் போதுமான விளக்கம் தரவில்லை. அந்நூலின் பக்கங்களை மேற்கொண்டும் புரட்டிப் பார்த்தேன், விளக்கம் காணேன். எனவே, விளக்கம் வேண்டி, என் அன்புள்ள அருட் செம்மல், உன்னையே மீண்டும் அணுகுகிறேன். 'தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நன்று' என்ற பொய்யாமொழியானது இன்னும் என் மனத்தை அரித்துக் கொண்டுதான் உள்ளது. தாயை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் இளங்கன்று போன்று அடுத்த மடலில் அதுபற்றி உன்னுடைய விளக்கத்தை ஏக்கத்துடன் எதிர்பார்த்துள்ளேன்.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

## 48

அன்புள்ள அறிவண்ணல்!

உன் மடல் கிடைத்தது. அதிலே உண்மையான புகழ் என்றால் என்னவென்பது பற்றி என்னுடைய விளக்கத்தைக் கேட்டு எழுதி இருந்தாய். உனக்கு இம்மடலில் புகழ் என்றால் என்னவென்பது பற்றி எனக்குத் தெரிந்த எல்லாச் செய்திகளையும் எழுதிவிட விரும்புகிறேன்.

புகழ் என்றால் என்ன? உனக்கு அறிமுகமில்லாத மக்களால் 'நீ அணுவத்தனையும் அக்கறை செலுத்தாத மக்களால் நீ தெரியப்பட்டிருப்பதுதான் என்று ஓர் அறிஞன் விளக்கம் கூறினான். அவன் கூறிய விளக்கம் சரியான விளக்கம் என்றே நான் கருதுகிறேன். தனக்குத் தெரிந்த மக்களால், தன்னால் உதவி செய்யப்பட்ட மக்களால் பல்வேறு காரணங்களை மனத்திற்கொண்டு உரைக்கப்படும் புகழ்மொழிகளையே பலர் புகழ் என்று எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது அவனுடைய விளக்கம் வேறுவிதமாக இருப்பது உனக்கு வியப்பை நல்கலாம். எனினும், அதுதான் உண்மையான விளக்கமாகும்.

புகழ் என்பதைப் பல வகையாகப் பிரிக்கலாம். முதலாவது ஒருவன் உயிரோடிருக்கும்பொழுது அவன்மீது சுமத்தப்படும் புகழ். இரண்டாவது அவன் இறந்ததன்பின் அவனுடைய புதை குழியின்மீது சுமத்தப்படும் புகழ். மூன்றாவது அவன் உயிரோடிருக்கும் பொழுதும் அவன் இறந்ததன் பின்பும் அவன்மீது சுமத்தப்படும் புகழ். இவற்றில் மூன்றாவதே உன்னாலும் என்னாலும் விரும்பப்பட வேண்டியது என்று நான் கூறுவேன்.

சிலர் உயிரோடிருக்கும் பொழுது செல்வாக்குடன் இருப்பர். அவர்கள் உயிரோடிருக்கும் பொழுது அவர்களின் புகழ் மணம் எங்கணும் வீசிக் கொண்டிருக்கும். அவர்கள் இறந்ததும் காய்ந்த ரோஜாமலர் போன்று அவர்களுடைய புகழும் ஆகிவிடும். அவர்களின் புகழும் அவர்களோடு சேர்ந்து புதை குழியில் புதையுண்டுபோகும். இப்படிப்பட்ட வாழ்க்கையினரை நீ ஏராளமாகப் பார்த்திருக்கலாம்.

இரண்டாமவர் உயிரோடிருக்கும் பொழுது யாராலும் ஏறிட்டுப் பார்க்கப் படாதவர்களாயிருப்பார்கள். ஆனல் அவர்கள் இறந்து புதைக்கப் படவேண்டியதுதான் தாமதம். அவர்களின் புகழ் மணம் பாரெங்கும் பரிமளிக்கத் துவங்கி விடும். ஓர் அறிஞன் கூறுவதுபோன்று அவர்கள் உயிரோடிருக்கும் பொழுது செய்த ஒலியைவிடப் பன்மடங்கு அதிகமான ஒலியை அவர்கள் தங்களின் புதை குழியிலிருந்து செய்யத் துவங்கி விடுகின்ருர்கள். உலகமாகிய பாங்கியில் தாங்கள் உயிரோடிருக்கும் பொழுது பெருத புகழ்களுக்கெல்லாம் தொடர் வட்டிபோட்டு வாங்கி விடுகின்ருர்கள். இதற்குப் பாரதியாரின் வாழ்க்கை ஒரு சிறந்த மேற்கோள்.

மூன்ருவது வகையினர் தாங்கள் உயிரோடிருக்கும் பொழுதும் புகழ் வாழ்வு வாழ்கின்றனர். இறந்தபின்னர் அவர்கள் உயிர் வாழ்ந்ததைவிட அதிகமான புகழையும் மதிப்பையும் பெற்றுக்கொள்கின்ருர்கள். அவர்களின் சிறப்பியல்புகளைப் பற்றிக் கட்டிவிடப்படும் கதைகளோ நாளாக ஆக அதிகப்பட்டுக்கொண்டே செல்கின்றன. அவர்கள் மீண்டும் உயிர் பெற்றுவந்தால் அவர்கள்மீது கட்டிவிடப்பட்டிருக்கும் கதைகளைப் பார்த்து அவர்களே திடுக்கிட்டு விடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

நான்காவது வகையினரின் புகழ் வாழ்வோ எரிவெள்ளி போன்று சிறிது நாட்கள் சுடர் வீசிவிட்டு அதன்பின் கீழே வீழ்ந்து அணைந்துவிடும். எகிப்து நாட்டின் தலைமைப்பதவி தாங்கிய நஜீபின் வாழ்க்கை இதற்கு ஒரு சான்று என்று கூறலாம்.

இதுகாறும் புகழின் வகைகளைப் பற்றிக் கூறினேன். இனிமேல் புகழ் வளையத்தைப் பற்றிக் கூறுகிறேன்.

சிலரின் புகழ் அவர்களின் ஊரிலும் அதன் சுற்றுச் சார்பு களிலும்தாம் பரவி இருக்கும். மற்றும் சிலரின் புகழ் அவர் களின் மாவட்டத்திற்குள் பரவி இருக்கும். வேறு சிலரின் புகழ் அவர்களின் மாகாணத்திற்குள்தான் பரவி இருக்கும். மற்றும் சிலரின் புகழ் அவர்களின் நாட்டிற்குள் பரவி இருக் கும். வேறு சிலரின் புகழ் பாரெங்கும் வீசிப் பரிமளித்துக் கொண்டிருக்கும். இவ்வாறு புகழ் வளையம் சிறியதாயிருப்ப தற்கும் பெரியதாயிருப்பதற்கும் அவரவர்களின் செயலின் எல்லையும் தன்மையுமேயன்றி வேறில்லை. இந்த வகைகளில் பாரெங்கும் வீசிப் பரிமளிக்கும் புகழே உன்னாலும் என்னாலும் விரும்பப்பட வேண்டியது என்று நான் கூறுவேன்.

இவ்வாறு உன்னுடன் சேர்த்து என்னையும் இணைத்துப் பேசுவதைக் கண்டு, இஃதென்ன 'புதுமையாக உள்ளது. இறந்து போகும் கட்டைக்குப் புகழ் என்ன வேண்டி இருக்கி றது. உலகமே அழிந்தொழியப் போகிறது. இவ்வித நிலை யற்ற உலகில் புகழ் வாழ்வு வாழ்ந்துதான் என்ன, வாழா திருந்துதான் என்ன என்று முன்னர் வேதாந்தம் பேசிய அதே அருட் செம்மல்தானா இவ்வாறு கூறுவது' என்று நீ வியப்படையலாம். ஆம், அறிவண்ணல், அதே அருட் செம் மல்தான் நான். ஆனால், மனோ நிலை மாறுபட்ட அருட் செம்மல் என்று நான் கூற விரும்புகிறேன். உன்னுடன் கடி தத் தொடர்பு துவங்கியபின் என்னுடைய மனோ நிலையே மாறுபாடடையத் துவங்கிவிட்டது: என்னையும் உன்னைப் போல் புகழ் ஆசை பீடிக்கத் துவங்கிவிட்டது. ஒரு நாள் நான் ஒரு நூலைப் படித்துக்கொண்டு வருங்கால் 'புகழானது வீரச்செயல்களை, மேன்மையான அலுவல்களை ஆற்றுவதற்கு எனக்குத் தூண்டுகோல் போல் அமைந்திருப்பதனால் நான் புகழை விரும்புகின்றேன். அந்த ஆசை மட்டும் இராவிட் டால் நான் அவ்விதச் செயல்களை ஆற்ற இயலாது. புகழை வெறுப்பவர்கள் அதனால் ஏற்படும் நற்பண்புகளை இழந்தவர் களாவர்' என்று ஓர் அறிஞன் கூறிய மொழிகள் என் சிந்தனை யைச் சுழலச் செய்தன. உலகில் பிறந்ததுதான் பிறந்து விட்

டோம். மக்களுக்கு நன்மை செய்து, வீரச் செயல்கள் ஆற்றி, பெரும் தொண்டியற்றிப் பெருவாழ்வு வாழ்ந்து மடிந்தால் என்ன? செடிகொடிகள்போன்று வாழ்க்கை நடத்திவிட்டு மடிவதைவிட அது மேலானது தானே. அதனால் விளையும் நன்மைகள் நாம் இறந்ததன்பின் நம்முடைய ஆன்மாவுக்கும் வந்து கொண்டுதானே இருக்கும். அதனால் நம்முடைய ஆன்மா மறுமையிலும் நல்வாழ்வையல்லவோ பெறும். இம்மையிலும் நல்வாழ்வையும் மறுமையிலும் நல்வாழ்வையுமல்லவோ நாம் புகழை விரும்பி நற்செயல்கள் ஆற்றுவதனால் பெறுகிறோம் என்று எண்ணினேன். அதன்பின் உண்மையான புகழ் என்றால் என்ன என்பது பற்றிச் சிந்தித்தேன். இவ்வாறு எண்ணமிட்டு ஆய்வுச் சுரங்கத்தில் இறங்கினேன். ஆனால், அங்கே எனக்கு முன் பல்லாயிரக்கணக்கானோர் நவமணிகளைத் தேடிக்கொண்டிருப்பதைக் கண்டதும் எனக்குப் பெரும் வியப்பேற்பட்டது. அப்பொழுது ஒருவர் என்னைப் பெருமிதத்துடன் நோக்கி தாம் நன்மணி ஒன்றைக் கண்டுபிடித்து விட்டேன் என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தார். என்னிடமும் அதனைக் காட்டுங்கள் என்றேன். காட்டினார். அது 'பளிச் பளிச்' சென்று பின் வருமாறு மின்னியது: 'உண்மையான புகழ் என்றால் எழுதத் தகுந்தவற்றை ஆற்றுவதாகும்; படிக்கத் தகுந்தவற்றை எழுதுவதாகும். அவ்வாறு செய்யும் பொழுது உலகை மகிழ்வுடையதாகவும் மேலானதாகவும் ஆக்குவதாகும்.' அதைப்பார்த்ததும் என் அறிவு சற்றுத் தெளிவுபட்டது. அதன்பின் அவரைப் பார்த்து 'இந் நன் மணியைக் கண்டெடுத்துக் கொணர்ந்த தாங்கள் யார்' என்று வினவினேன். 'நான்தான் பிளினி' என்று கூறிவிட்டு அவர் சென்று விட்டார். அதன்பின் மற்றொரு மனிதரைச் சந்தித்தேன். அவரோ தான் கண்டுபிடித்த உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைத்துக் கொண்டிருந்தார். கூட்டத்திலிருந்த ஒருவரைப்பார்த்து அவர் யார் என்று வினவினேன். 'தெரியாதா உனக்கு? அவர்தான் ரோமானியச் சண்ட மாருதன் சிஸரோ' என்று கூறினார் அவர். உடனே நான் வெகு ஆவலுடன் அவர் என்ன கூறுகின்றார் என்பதை உற்றுக் கவனித்தேன். 'உண்மையான புகழ் ஆழமாக வேரூன்றிப் படர்ந்து வளருகிறது. போலிப் புகழ்களெல்லாம் இலைகள் போன்று கீழே உதிர்ந்து விடுகின்றன; அவை நீடித்து நிலைத்து நிற்பதில்லை. செல்லாக் காசுகள் நீடித்து செலாவணியில் நிற்ப

தில்லையல்லவா என்று கூறினர். அப்பொழுது ஒரு மனிதன் என் முன் வந்நான். அவனுடைய முகத்தைப் பார்ப்ப தற்கே எனக்கு அச்சமாய் இருந்தது. ஆனால், அவனே என்னைப் பார்த்துப் 'புகழ்ப்பாதையானது சுவர்க்கத்திற்குச் செல்லும் பாதை போன்று கடினமாகவல்லவோ இருக்கிறது. அந்தக் கடினமான பாதையில் என்னால் அடியெடுத்து வைத்து நடக்கக்கூட இயலவில்லை. எனக்கோ என் பெயரை உலக வரலாற்றில் பதித்துவிட வேண்டுமென்று ஒரே பைத்திய மாக இருக்கிறது. எனவே, அதற்கு என்ன வழி என்று சிந்தனைச் சுரங்கத்தில் இறங்கிப் பார்த்தேன். அங்கே அதற்கான ஒரு மணி கிடைத்தது' என்றான் என்ன மணி அது என்று ஆவலுடன் வினவினேன். அப்பொழுது அவன் அதனை மெதுவாகத் தன் கையைத் திறந்து காட்டினான். அதைப் பார்த்ததும் என் உடலே அதிர்ந்தது. என்ன அது? துப்பாக்கிக் குண்டல்லவோ என்று நான் அலறினேன். 'ஆம், இதன் துணையால்தான் நான் பெரும் புகழை அடையப் போகின்றேன் என்றான். எவ்வாறு என்று வினவினேன். இந்தக் குண்டைக் கொண்டு ஆப்ரஹாம் லிங்கனை கொன்றொழிக்கப் போகின்றேன். அவருடைய பெயர் மக்கள் நினைவு கூரப் படும் காலை வரை என் பெயரும் மக்களால் நினைவு கூரப்படு மல்லவா? என் பெயரும் உலக வரலாற்றில் அழியா இடம் பெறுமல்லவா? என்று கூறினான். இஃதென்ன பைத்தியக் கார யோசனை என்றேன். நானா பைத்தியம் நீ தான் பைத்தியம் என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு அவன் சிட்டெனப் பறந்து விட்டான். புகழ் ஆசை மக்களை எத்துணை பைத்தியக்காரர்களாக ஆக்கி விடுகின்றது என்று எண்ணிக் கொண்டு ஆய்வுச் சுரங்கத்தில் மேலும் அடியெடுத்து வைத்து நடந்தேன். அப்பொழுது ஒரு மனிதர் அமர்ந்து பெரும் புத்தகம் ஒன்றில் விறுவிறு வென்று புகழ் வாழ்வு படைத்த பலருடைய பெயர்களை எழுதிக்கொண்டிருந்தார். பக்கத்தில் நின்றவர்களிடம் யார் அவர் என்று விசாரித்தேன். அவர் தாம் 'காலம்' என்னும் மனிதர் எனக் கூறினர்கள். இதைக் கேட்டதும் நான் பெரும் ஆவலுடன் அவர் என்ன எழுதுகின்றார் என்று பார்த்தேன். புதுப்பெயர் ஒன்றை எழுதும் பொழுது அதில் ஏற்கனவே எழுதப்பட்டிருந்த பழைய பெயர் ஒன்றை அடித்துக் கொண்டிருந்தார். ஆனால், சில பெயர்கள் மட்டும் அடிக்கப்படாமல் ஒளி உருவாக விளங்

கிக் கொண்டிருந்தன. அதன்பின் மேலும் ஆய்வுச் சுரங்கத்தில் நுழைந்து என்னுலியன்ற அருமணிகளைப் பொறுக்கிக் கொண்டு வெளியே வந்தேன். அவை என்னவென்று நீ வினவலாம். கூறுகின்றேன் கேள். உனக்காக வேண்டித்தானே நான் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டேன். உனக்குக் காட்டாது நான் வேறு யாருக்குக் காட்டுவது?

அன்புள்ள அறிவண்ணல்! நாம் புகழ் வாழ்வு வாழ வேண்டுமானுல் நாம் செய்யும் செயல்களுக்குப் பிறருடைய அங்கீகரத்தைப் பெறுவதற்காக அவர்களின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. நம்முடைய குரலின் எதிரொலியைப் பிறரிடமிருந்து கேட்பதற்காக நாம் வீண் கூச்சல் போடவும் கூடாது. நிலையான செயல்களில் நம்முடைய கவனத்தைச் செலுத்தி நம்முடைய கடமையைத் திறமையுடனும் பிறர் செய்வதைவிட மேலான முறையிலும் செய்ய வேண்டியதுதான். அரசியலில் ஈடுபட்டால்தான் நமக்குப் புகழ் ஏற்படும் என்பது பாமரர்களின் கொள்கை. ஒருவன் அரசியலில் ஈடுபட்டு அமைச்சனுகிவிட்டான் என்ருல் அவனுடைய புகழ் அவன் அமைச்சனுக இருக்கும்வரையில்தான் இருக்குமேயன்றி அதற்குப் பின் இருக்காது. வாணம் விண்ணில் சுடர்விட்டு எரியும்பொழுது மக்கள் அதனை மகிழ்வுடன் பார்ப்பார்கள். கீழே வீழ்ந்துவிடின் அதனை ஏறிட்டுப் பார்ப்பார் யாருமில்லாது போய்விடும். அதுபோன்றுதான் பெரும்பாலான அரசியல் வாதிகளின் வாழ்க்கையும் என்பதை அறிவாயாக.

எத்தனையோ அமைச்சர்களின் பெயர்கள் மக்களால் மறக்கப்பட்டுப் போகும்பொழுது வீரச் செயலாற்றிய ஒரு சிலரின் பெயர்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு இறவாவரம் பெற்று வாழ்கின்றன. கப்பலோட்டிய தமிழரையோ அல்லது கட்டபொம்மனையோ அல்லது தன் கைகளால் உடைப்பைத் தடுத்து வெள்ளம் தன்னுடைய நாட்டை அழிக்காது காத்த அந்த ஹாலந்து நாட்டுச் சிறுவனுடைய பெயரையோ வரலாற்று ஏடுகளிலிருந்து யாரேனும் எப்பொழுதேனும் அழிக்க இயலுமா, என்ன?

தனிப்பட்ட சிந்தனையால் ஒருவன் சிறந்தோரு வேலையைச் செய்துவிட்டாலும் அவன் தன்னுடைய பெயரை உலக வரலாற்றின் பக்கங்களில் அழியாது பொறித்து விடுவான். அது எவ்வளவு சிறிய வேலையாயிருந்த போதினும் பாதகமில்லை. அது சிறந்ததோர் வேலையாக இருக்கவேண்டும். க்ஷவரக் கத்தியைக் கண்டுபிடித்த கில்லட் என்பவரை யாரேனும் எப்பொழுதேனும் மறக்க முடியுமா? தாமஸ்க்ரே என்பவர் புதைகுழிப் புலம்பல் (Elegy on the graveyard) என்று ஏறக் குறைய முப்பது வரிகள் உள்ள ஒரு செய்யுள் தான் எழுதினார். அந்த ஒரு செய்யுள் தான் அவருக்கு இறவா வரத்தை நல்கி உலக சிரஞ்சீவிகளில் ஒருவராக அவரை ஆக்குவித்து விட்டது என்பதை அறிவாயாக.

இவ்வாறு நான் கூறுவதைக் கேட்டு, தனித் தன்மை வாய்ந்த செயல் என்று எந்த இலக்கியத்தை நான் கூறுவது? எதைப் பார்த்தாலும் அது முன்னூலின் வழி நூலாகத் தானே உள்ளது. முன்னோர் கண்டறிந்த அனுபவ உண்மைகள் மீது தானே அவர்கள் கட்டடம் எழுப்பியுள்ளார்கள் என்று நீ வினவலாம். நீ கேட்பது சரியான வினாவேயாகும். மக்களின் அனுபவத்தின் மீது கட்டப்படுவதே இலக்கியம். உலக இலக்கியங்களிலே பிறரிடமிருந்து கருத்துக்களைக் கடன் வாங்காது எழுதப்பட்ட இலக்கியம் ஒன்றிருக்கின்றதென்றால் அது 'கலிவரின் பிரயாணம்' என்ற நூலேயாகும். அதனை எழுதிய ஸ்விப்ட் என்ற ஆசிரியர் அந்த நூல் முழுதும் தன் தனிப்பட்ட கற்பனையே என்றும் பிறரிடமிருந்து கடன் வாங்கப்பட்ட கருத்து அதில் அணுவத்தனையும் இல்லை என்றும் கூறுகின்றார். அவர் கூறுவது முற்றிலும் உண்மை என அந்நூலை நீ படித்துப் பார்த்தால் அறியவரலாம். ஆனால் அதில் கூடப் பிறரிடமிருந்து 'காப்பி' அடித்த கருத்து ஒன்று உள்ளது என்று இலக்கியக் கோடரி டாக்டர் ஜான்ஸன் கூறுகின்றார், அது என்னவென்று நீ வினவின் ஸ்விப்ட் தன்னுடைய நூலில் 'நகம் போன்று சிறிய கனமுள்ளது' என்று ஒரு பொருளை வர்ணித்திருப்பது அவருடைய சொந்தக் கருத்தல்லவென்றும் வேறொரு நூலில் அவ்வித உவமானம் கூறப்பட்டிருக்கிறது என்றும் எடுத்துரைக்கிறார் ஜான்ஸன். ஷேக்ஸ்பியர்கூட கிரேக்க, ரோமானிய ஆசிரியர்களின்

கருத்துக்களைத் தம்முடைய நூல்களில் எடுத்தாண்டுள்ளார்? அதனால் அவருடைய மதிப்புக் குறைந்துவிட்டதா என்ன! அவர் எடுத்துக் கையாண்டது சிறு அளவு என்றால் அவருடைய சொந்தக் கருத்துக்கள் பெரும் அளவு இருக்கின்றனவே. அவற்றை அவர் எடுத்துரைக்கும் முறையே பிறரால் முன்பு பின்பற்றப்பட்டிராத மேலான புது முறையாய் இருக்கின்றதே. அப்படியானால் அவருடைய நூல்கள் இறவாவரம் பெற்றிராது என் செய்யும்?

மில்டனுடைய எழுத்துக்களும் இன்று இறவாவரம் பெற்று விளங்குகின்றன, அதற்குக் காரணம் என்ன? மில்ட்டன் புகழை விரும்பினாரா? இல்லை. அதனை எதிர்பார்த்து ஏங்கித் திரிந்தாரா? இல்லை. அவருடைய ஒரே விருப்பம் என்னவென்றால் பிற்காலத்தினரால் வேண்டுமென்றே சாக விடாமல் காப்பாற்றத்தக்க சிலவற்றை எழுதி வைத்துவிட்டுச் செல்லவேண்டும் என்பதாகவே இருந்தது. அப்படிப்பட்ட இலக்கியங்களை எழுதிவிட்டு இறந்ததனால் அவர் இறந்து இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பின்னும் அவருடைய எழுத்துக்கள் இறவாவரம் பெற்று இலங்குகின்றன. உலகப் புகழ் பெற்ற அரபிக் கதைகளை எழுதிய ஆசிரியன் பெயரே தெரியவில்லை. எனினும் அது இன்றளவும் உலகத்தில் புகழ் மணத்துடன் விளங்கி அதனை எழுதிய ஆசிரியரை 'கதை உலகின் மன்னர் மன்னன்' என்று நம்மைப் புகழுமாறு செய்கிறது.

ஆதலின் ஒருவனைப் புகழ் வாழ்வினனாக ஆக்குவது அவனுடைய திரண்ட செல்வமோ, விரிந்த தொழிலோ, மாட மாளிகையோ, அல்லது அவன் ஏறிச் செல்லும் ரோல்ஸ் ராய்ஸ் காரோ அல்ல. அவனுடைய தன்மையும் தகுதியும் அவன் ஆற்றிய அரும்பெரும் சாதனையும் தாம்: தன்னுடைய திரண்ட செல்வத்தையோ, விரிந்த வாணிபத்தையோ மாடமாளிகையோ, ரோல்ஸ்ராய்ஸ் காரையோ தன் புகழின் அறிகுறிகளாகக் கருதும் மனிதன் அவை அவனைவிட்டு அகன்றதும் அவனும் புகழற்ற, பிறரால் ஏறிட்டுப்

பார்க்கப் படாத பிணம் போன்று ஆகிவிடுவான். உண்மையான புகழ் என்றால் ஒருவன் தனித்துக் கோவணாண்டியாகக் காட்டின் நடுவே நின்றபோதினும் அவனை உலகம் மதிக்க வேண்டும்; ஏற்றித் துதிக்கவேண்டும்; போற்றிப் புகழவேண்டும். அவனுடைய இறப்பு உலகிற்கொரு பெரும் இழப்பாக இருக்க வேண்டும். அவனுடைய இறப்புச் செய்தியைக் கேட்டு கோடானு கோடிப்பேர் கண்ணீர் சிந்தவேண்டும். அவனுடைய மாசுமறுவற்ற மாணிக்கப் பண்புகள் உலகுள்ளளவும் மக்களுக்கொரு முன்மாதிரியாக விளங்கவேண்டும். அவனுடைய அருஞ் செயல்களின் பலன்களை மக்கள் உலகுள்ளளவும் நுகர்ந்துகொண்டிருக்கவேண்டும். 'எனக்கு ஏன் சிலை நாட்டப்பட்டிருக்கின்றது என்று மக்கள் கேட்பதை விட எனக்கு ஏன் சிலை நாட்டப்படவில்லை என்று மக்கள் கேட்பதையே நான் பெரிதும் விரும்புகின்றேன்' என்று கேட்டோ என்பவன் கூறினான். அதேபோன்று அவனைப் பற்றியும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னாலுள்ள மக்கள் கேட்கும் வண்ணம் அவனுடைய வாழ்வு அமைந்திருக்க வேண்டும். அவனைப் பற்றிய நினைவுச் சின்னம் மக்களின் மனத்தில் நிலையாக அமைந்திருக்க வேண்டும்.

ஆதலின் அதற்கான வாழ்வை வாழ்வதும் அதற்கான செயலை ஆற்றுவதும் தான் உனக்கும் எனக்கும் தகுதியேயன்றி நாம் இவ்வுலகில் வாழ்ந்ததற்கான அறிகுறியை இவ்வுலகில் நிலை நாட்டி அதை முன்னிட்டு மக்கள் உலகுள்ளளவும் பயன் பெறும் வண்ணம் செயலாற்றி விட்டுச் சாவதே உனக்கும் எனக்கும் தகுதியேயன்றி அழிந்து போகும் அற்பப் புகழ்களை மனத்தில் எண்ணிக்கொண்டு வள்ளுவப் பெருந்தகை என்னைக் கொல்லாது கொல்கின்றாரே என்று கூறுவது தவறு என்பது என் கருத்து. இறந்தபின் உயிர் வாழ்வதற்காக உயிரோடிருக்கும் பொழுது இறந்தவர் போன்றிருந்த பலரை நீ பார்க்கவில்லையா? வருங்காலப் பெருவாழ்விற்காக நிகழ்கால வசதிகளைத் துறந்தவர்களை நீ பார்த்ததில்லையா? அப்படியாயின் நீ ஏன் புகழ்வாழ்வு வாழவேண்டுமென்று இவ்வளவு துடியாய்த் துடிக்க வேண்டும்? நீ விரும்புவது போலிப் புகழ்வாழ்வு போன்றல்லவோ தோன்றுகிறது. உண்மையான பெரிய மனிதர்கள் அதனை ஒருபோதும் விரும்பமாட்டார்கள். நீடித்து நிற்கக்கூடிய

திறமை வாய்ந்த செயல்களை அமைதியான முறையில் ஆற்று. அவ்விதம் ஆற்றுவாயாயின் புகழானது உன் வீட்டு முகவரியை விசாரித்துக் கொண்டு வந்து சேர்ந்து விடுகின்றதா இல்லையா என்று பார். அதன்பின் நீ அதனை விரட்டி அடித்தாலும் அது வெளியே செல்லாது. நீ ஓடினாலும் அது உன்னை விடாது. அதன்பின் அது உன் பெயருடன் ஒட்டிக்கொள்ளும். பின்னர் அதனை உலக வரலாற்றிலிருந்தும், மக்கள் மனத்திலிருந்தும் பிய்த்தெறிவது உலகத்திலுள்ள எந்த ஆற்றலினாலும் இயலாத செயலாகிவிடும். இப்படிப்பட்ட புகழைப் பெற முயல்வதே அறிவுடைமையாகும்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று என்று வள்ளுவப் பெருந்தகை கூறும்பொழுது உண்மையான நிலையான புகழைக் கூறுகின்றாரேயன்றிப் போலிப் புகழைப் பற்றிக் கூறவில்லை என்பதை அறிவாயாக. அப்படிப்பட்ட உண்மையான புகழை உலகில் பிறந்த ஒவ்வொருவரும் அரும்பாடு பட்டுப் பெறவேண்டும். இல்லையேல் அவன் உலகில் பிறந்தும் பிறவாதவன் போன்றவனே என்ற கருத்தை வன்மையாகக் கூறுவதற்காகவே அவர் உணர்ச்சி வசப்பட்டு இவ்வுலகில் தோன்றினால் புகழோடு தோன்று. இல்லையெனில் தோன்றுவதைவிடத் தோன்றாமலிருப்பதே நன்று என்று கூறுகின்றாரேயன்றி வேறில்லை. அவ்வாறு உணர்ச்சி வசப்பட்டுக் கூறும்பொழுது கூட எவ்வளவு மென்மையாக 'நன்று' என்ற மொழியைப் பயன்படுத்துகின்றார் என்பதையும் பார். என்னுடைய இக் கருத்து உன்னுடைய அறிவுக்குப் பொருத்தமாகவும் ஆன்மாவுக்கு விளக்கமாகவும் இருக்கும் என்று நம்புகின்றேன்.

அன்புள்ள நண்பன்,

அருட் செம்மல்.

Univ. Grants Commission

UNIVERSITY EXTENSION LIBRARY
15 MAR 1962

49

அன்புள்ள அருட்செம்மல்!

உன் மடல் கிடைத்து அளவிலா மகிழ்வெய்தினேன். அது என் மனத்தில் மண்டிக்கிடந்த ஐய இருள்களை யெல்லாம் விரட்டி அடித்து எனக்கு அறிவுத் தெளிவை நல்கியது. அதற்காக உனக்குப் பெரிதும் நன்றி செலுத்துகிறேன். நம்மிருவரிடையே நிகழ்ந்த இந்தக்கடிதத் தொடர்பை செய்தித்தாள்களுக்கும் விடுக்கலாம் என்று விரும்புகிறேன்.. அவ்விதம் செய்தால் பலரும் பயன் பெறுவார்கள் என்று நம்புகிறேன். இதற்கு உன் அனுமதி தேவை.

அன்புள்ள நண்பன்,

அறிவண்ணல்

50

அன்புள்ள அறிவண்ணல்!

நீ எழுப்பிய ஐயங்களின் காரணமாக என் அறிவும் தெளிந்தது. உன் ஐயங்களைக் களைவதற்காக நானும் பல நூல்களைப் படிக்கவும் சிந்திக்கவும் செய்தேன். நீ கூறிய கருத்துக்களும் என் அறிவை வளப்படுத்தி என்னைப் புது மனிதனாகவும் ஆக்கின. அவற்றிற்காக என்னுடைய நன்றியை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். நீ எழுதியபடி நம்மிருவருக்குமிடையே நிகழ்ந்த இக்கடிதத் தொடர்பைச் செய்தித் தாள்களுக்கு விடுத்தால் பலர் பயன் பெறுவார்கள் தாம். அவ்விதம் செய்வதைவிட நூல் வடிவில் கொணர்ந்தால் அது மக்களுக்கு நிலையான பலன் நல்கும் என்று நம்புகிறேன். தயவு செய்து அப்படியே செய்.

அன்புள்ள நண்பன்

அருட் செம்மல்